LIBRARY, STATE LEGISLATURE
9 JUN 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 24th January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Arrest of a Police Sub-Inspector

* 1 *S.N. Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether a Police Officer was arrested at Coimbatore district on 19th January 1964 for the violation of Prohibition laws?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

கனம் திரு. பூ. கக்கன் : ஆம்.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் இவர் இருக்கக்கூடிய பகுதியிலே கள்ளச் சாராயம் அதிகமாக காய்ச்சுவதாலும், போலீஸார்கள் மாமூலாக லஞ்சம் வாங்கிக்கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுவதை விட்டுவிடுகிறார்கள், அது தனக்குப் பிடிக்கவில்லை, அதனால்தான் இப்படிச் செய்கிறேன் என்று அரசாங்கத்திற்கு ஏதாவது தெரிவித்திருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : என்னிடம் இருக்கிற தகவல்படி அவர்கள் மீது ஒரு டிஸ்மிஸல் சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பாக இந்த வேலைகளையெல்லாம் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வழக்கு விசாரணையில் இருப்பதனால் மேற்கொண்டு அது, இது என்று கேட்பது முறையல்ல.

திரு. செ. மாதவன் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் இந்தக் குற்றத்தைச் செய்வதற்கு முன்னாலேயே நான் இப்படிச் செய்யப் போகிறேன் என்று அறிவித்து விட்டது உண்மையா ? அவர் அறிவித்ததற்குப் பின்னாலும்கூட அவர் மீது இலாகா மூலம் நடவடிக்கை எடுக்காமல் அவர் யூனிபார்முடன் இந்தக் குற்றத்தைச் செய்வதற்கு அரசாங்கம் ஏன் அனுமதித்தது ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர் மீது தக்க நடவடிக்கை எடுகக அரசாங்கம் உத்தேசித்திருந்தது. அதற்குள்ளே அவர் 'அப்ஸ்காண்டு' ஆகிவிட்டார். அவர் பிடிபடாத காரணத்தினாலே இம்மாதிரி ஏற்பட்டது.

STATE LEGISLATURE 9 JUN 1964

[24th January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டருக்கு எவ்வளவு ஸர்வீஸ் ஆகிறது? இவர் ஸர்வீஸில் மற்ற வேலைகளை எப்படிச் செய்து வந்திருக்கிறார்?

கனம் சபாநாயகர் : அவர் மீது டிஸ்மிஸல் சார்ஜ் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர் ஸர்வீஸில் இதற்கு முன்னால் அவருடைய ரிகார்டு எப்படி இருக்கிறது?

கனம் சபாநாயகர் : ஏற்கனவே அவர் மீது டிஸ்மிஸல் சார்ஜ் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குக் கிடைத்த தகவல், ஒரு நொடோரியஸ் ஸ்மக்ளர் இவர்களோடு சேர்ந்தவர். கேஸ் போடுவதற்கு முன்னால் சேர்ந்தவர்கள் என்று ஒரு தகவல் இருக்கிறது.

திரு. செ. மாதவன் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் அவர்களுடைய ஸர்வீஸ் காலத்தில் அரசாங்கம் அவர்களுக்கு ஏதாவது வெகுமதி, அல்லது பதக்கம் அல்லது சர்டிபிகேட் கொடுத்திருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

கனம் சபாநாயகர் : வெகுமதி வாங்கினாலும், தவறு செய்தால் அகப்பட்டுவிடுவார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்களுக்கு ஸர்வீஸ் எவ்வளவு ஆகிறது என்று கேட்டேன். விவரம் இல்லையா?

கனம் திரு. பூ. கக்கன் : என்னிடத்தில் தகவல் இல்லை.

MR. SPEAKER : He has become notorious.

திரு. செ. மாதவன் : இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் என்றைக்கு தான் இந்தக் குற்றத்தை செய்யப்போவதாக அறிவித்தார்? என்றைக்கு அவர் 'அப்ஸ்காண்டு' ஆனார்?

MR. SPEAKER : The Hon. Minister has already told that the matter is *subjudice*. By asking questions on all these points, the hon. Member wants to cross-examine.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் அறிந்த மட்டில் அந்த ஸப்-இன்ஸ்பெக்டருக்கு 15 வருஷங்களுக்கு மேலே ஸர்வீஸ் ஆகிறது என்று நினைக்கிறேன். அப்படியிருந்தாலும் இவ்வளவு காலமாக ஸப்-இன்ஸ்பெக்டராகவே அவர் எப்படி ஸர்வீஸ் செய்திருக்கிறார்?

கனம் சபாநாயகர் : அப்படி எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : 15 வருஷம் ஸர்வீஸ் உள்ளவர் திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கு முன்வந்தார். இதிலிருந்தே அவர் ஸர்வீஸ் எப்படி இருந்திருக்கும், தன்னுடைய கடமையை அவர் எவ்வாறு செய்திருப்பார் என்றெல்லாம் இப்பொழுது நினைக்கவேண்டியிருக்கிறது.

24th January 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஈரோடில் அரெஸ்டு ஆன ஸப்-இன்ஸ்பெக்டர் அர்ஜுனன் என்பவர் 15 வருஷ காலம் ஸர்வீஸில் இருந்ததாக தெரியவருகிறது. இந்த 15 வருஷ காலத்தில் தன்னால் இயன்ற வரைக்கும் என்னென்ன செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்து பார்த்து, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது, அது கண்டிப்பாக தோல்வியுறும் என்று அறிந்த காரணத்தினாலேதான் இந்தப் புரட்சியை அவர் செய்தார் என்பதைச் சர்க்கார் உணருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பேர்ப்பட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மது விலக்குக் கொள்கையைப் பற்றியோ அல்லது மது விலக்கு நடைமுறையைப் பற்றியோ யாருக்கும் என்ன கருத்து வைத்திருப்பதற்கும் உரிமை உண்டு. அதைப் பற்றிச் சொல்லுவதற்கு உரிமை உண்டு. ஆனால், இந்த ஸப்-இன்ஸ்பெக்டருடைய நடத்தையைப் பற்றி நாம் இப்பொழுது ஆராயவேண்டியிருக்கிறது. இவர்மீது ஏற்கனவே சில குற்றச்சாட்டுகள் இருந்து, அவரை வேலையிலிருந்து நீக்கவேண்டும் என்று அவருக்கு நோடீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவை எத்தகைய குற்றச்சாட்டுகள், விவரம் என்ன என்பதை அறிவிக்கமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : He was impertinent, disobedient and misbehaving. அவர் அப்பேர்ப்பட்ட அடங்காப்பிடாரி. இன்ஸ்பக்டர் சொல்லுவதை கேட்காது செய்திருக்கிறார்கள். அதனால் அவர் மீது சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாக்கடை நீரைப் பிரித்தல்

* 54 **கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரசாயன முறைப்படி சாக்கடை நீரை வேறாகவும், கழிவைத் தனியாகவும் பிரிக்க ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, on an experimental basis.

எர்ஸ்கின் மருத்துவ மனை (மதுரை)

* 81 **கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் உள்ள அரசாங்க எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி போதாததால் நோயாளிகளை தரையில் படுக்க வைத்திருப்பது உண்மையா ?

[24th January 1964

(இ) ஆமென்றல், இவ்விஷயத்தில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, **in some cases.**

(*b*) A proposal for increasing the bed strength of the hospital from 1,110 to 1,310 is under active examination.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஆஸ்பத்திரியில் தினசரி சராசரி அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை, அதாவது அங்கே தங்கி சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு ? இப்பொழுது அதிகரித்திருக்கும் படுக்கை எண்ணிக்கை அதற்குப் போதுமானதாக இருக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கே இருக்கிற 'இன்-பேஷன்ட்ஸ்' 1,500-லிருந்து 1,600 வரையிலும் இருக்கிறர்கள். இப்பொழுது அதிகப்படுத்தியிருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை அதற்குப் போதிய வகையில் இருக்காது. அப்பொழுதும் குறைவாகத்தான் இருக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்த ஆஸ்பத்திரியில் தரையில் படுத்துக்கொள்கிற அளவுக்கு உள்ள பேஷன்ட்ஸ் எண்ணிக்கை எவ்வளவு ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதே மாதிரி, இதைவிட மோசமான நிலையில் மற்ற மாவட்ட தலைநகர ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆஸ்பத்திரியின் தேவை என்ன என்பதை கணக்கெடுத்து, அதற்குத் தகுந்தபடி படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கெங்கே படுக்கைகளை அதிகரிக்கவேண்டுமோ, அங்கெல்லாம் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் பிரச்னை நீண்டகாலமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்னை. இன்னும் சில காலத்திற்கு இவ்வாறு இருக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய காரணத்தால், இதை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் ? ஆஸ்பத்திரிகளின் அமைப்பு முறையை வேறு விதமாக மாற்றி அமைப்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்த ஆஸ்பத்திரி மூன்று ஜில்லாக்களுக்கு ஒரு முக்கியமான இடமாக இருப்பதனால், நாளுக்கு நாள் நோயாளிகள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறர்

24th January 1964]

கள். அங்கே குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பது ஒருபுற மிருக்க, கக்கூஸ்களுக்குக்கூட தண்ணீர் இல்லை. ஆகவே தண்ணீர் வசதிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆஸ்பத்திரிகளைப் பொறுத்த வரையில் தண்ணீர் வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று ஸ்கீம் போட்டு வேலை நடந்து வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் முன்பு ஒரு கேள்வி கேட்டதற்கு கனம் அமைச்சர் அவர்கள் அம்மாதிரி இல்லை என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரிகளின் அமைப்பை மாற்றி அமைப்பதற்கு டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, பரிட்சைக்காக வரும் நோயாளிகளை பாலி கிளினிக்களுக்கு அனுப்பித்து, சிகிச்சைக்கு மட்டும் பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும் என்று சொன்னது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அது எந்த கட்டத்தில் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவ்வாறு குழு அமைக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால் அந்த ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வரவில்லை.

கனம் சபாநாயகர் : அதற்குள் கனம் அங்கத்தினருக்குத் தெரிந்துவிட்டதே ! (சிரிப்பு).

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவ்வாறு குழு அமைக்கப்பட்டு, இப்பொழுது விசாரணை எந்தக் கட்டத்தில் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் கொடுக்கலாம்.

திரு. ஆ. துரையரசன் : சென்னை தலைமை மருத்துவ நிலையத்தில் . . .

கனம் சபாநாயகர் : மூலக் கேள்வி மதுரை ஆஸ்பத்திரியைப் பொருத்தது. பொதுவாகக் கேட்கலாமே தவிர, தனித்தனி ஆஸ்பத்திரிகைகளைப் பற்றிக் கேட்கக் கூடாது. எல்லா ஜில்லாக்களையும் பற்றிக் கேட்டால் என்ன செய்வது?

திரு. ஆ. துரையரசன் : 200, 300 மைல்களுக்கு அப்பாலிருந்து தலைமை மருத்துவ நிலையத்திற்கு மருத்துவ வசதி பெற நோயாளிகள் வருகிறார்கள். இட வசதி இல்லாத காரணத்தினால், அவர்களுக்கு அட்மிஷன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. வெளியே இருந்து வைத்தியம் செய்து கொள்வதற்குப் போதுமான பொருளாதார வசதி இல்லாத காரணத்தினால் சிரமப்படுகிறார்கள். திரும்பிப் போவதற்கும் சிரமப்படுகிறார்கள். ஆகவே படுக்கை வசதியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அட்மிஷன் யாருக்கும் மறுக்கப்படுவது கிடையாது. வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு எந்த அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு செய்துகொண்டு வருகிறார்கள். அதிகப்படியாக நோயாளிகள் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கு ஒரு சாதாரண கேஸ் வந்தாலும், பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். ஆகவே மதுரை ஜில்லாவிலுள்ள தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அந்த மாதிரி உத்தேசம் இல்லை.

State Transport Buses

* 82 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total strength of fleet as on 1st June 1963 operating on the Madras City routes of the State Transport system ;

(*b*) the programme for increasing the fleet strength during 1963–64 ; and

(*c*) whether this programme is affected in any manner due to the emergency ?

THE HON. SRI R. VENKATARAMAN :

	Buses.
(*a*) City routes	467
Suburban services	173
Total ...	640

	Buses.
(*b*) City fleet to be augmented by	60
Suburban services to be augmented by	25
Total ...	85

(*c*) Care has been taken to see that the programme for augmentation is not affected as far as possible.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நகரத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெருக்கடியை சமாளிப்பதற்கு இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ்களை அதிகப்படுத்துவதுதான் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கு முறை. அதற்காகத்தான் இந்த புரோகிராமைப் போட்டிருக்கிறோம்.

24th January 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம் : பிரேக்டவுன்களைத் தவிர்த்து ஒவ்வொரு பஸ்ஸும் அதிக டிரிப்புகள் ஓடுவதற்கு என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்கு நம்முடைய பஸ் ஆப்பரேஷன் 85 சதவிகித எபிஷியன்ஸியில் ஓடுகிறது. அதா வது, 100 பஸ்கள் இருந்தால் 85 பஸ்கள் இன்றைக்கு ரூட்டில் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு பஸ் எப்பொழுதாவது பிரேக்டவுன் ஆகிவிட்டது என்று சொல்லி, அதைப் பிரமாதமாக ஒருவர் சட்டசபையிலே சொல்ல, அதற்கு பத்திரிகையிலே விமர் சனம் கொடுப்பது ஜனங்களுக்கு தவறுதலான ஒரு அபிப்பிரா யத்தைக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : பொதுவாக நமது மாநிலத்தில் எல்லா மார்க்கங்களிலும் இப்பொழுது இருப்பதைவிட 10 சத விகிதம் பஸ் ரூட்டுகளை அதிகரிப்பதற்கு உத்தேசமிருக்கிறது என்று தொழிலமைச்சர் அவர்கள் கூறியதாகத் தெரிகிறது. எப் பொழுது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறேன். அதைப் பற்றி விமர்சனம் நடந்து கொண் டிருக்கிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : போக்குவரத்து நெருக்கடி யைத் தவிர்ப்பதற்கு பஸ்களை மட்டும் அதிகப்படுத்தினால் போதும் என்று நினைக்கிறார்களா ? அல்லது வேறு வசதிகள் செய்து கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை நகரிலே வேறு வசதி இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சென்னை நகர சுற்றுப்புறத்தில் தொழில் வளர்ச்சியின் காரணமாக நகர அமைப்பு விஸ்தரிக்கப் பட்டு வருகிறது. ஆகவே ஸபர்பன் போக்குவரத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது ஸபர்பன் சர்வீஸிலே 173 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. நேஷனலைஸ் பண்ணும்படியான உத்தேசமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முன்பு சில சுற்றுப்புற மார்க்கங் களில் தனியார் துறையும், அரசாங்கத் துறையும் போட்டியிட்ட காரணத்தால் சில தனியார் துறை ரூட்டுக்களை அரசாங்கத் துறைக்குக் கொடுக்கும் நோக்கத்தோடு நடந்துகொண்டதைப் போல, இந்த சுற்றுப்புற சர்விசையும் அரசாங்கம் ஏற்று நடத்த முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தெந்த இடங்களில் புதிதாக பஸ் வேண்டுமோ, அங்கெல்லாம் சர்க்கார் பஸ்கள் விடு கிறார்கள். இருக்கிற பஸ்களை நேஷனலைஸ் செய்யவில்லை என்று சொன்னேன்.

[24th January 1964

உதகமண்டலத்தில் அரசாங்க ஹோட்டல்

* 83 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் ஒரு அரசாங்க ஹோட்டல் கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

The staff of Agricultural College, Coimbatore

* 84 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there are any quarters for the members of the staff of the Agricultural College, Coimbatore ;

(*b*) if so, how many ;

(*c*) on what basis these quarters are allotted to the members of the staff ;

(*d*) how many allottees have actually occupied the quarters ; and

(*e*) how many allottees have sublet their quarters ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes.

(*b*) There are 238 residential quarters out of which 3 quarters have been converted into twin quarters.

(*c*) Bungalows and 'A' type quarters are allotted to Gazetted Officers as per the Bungalow Allocation Rules. Other types of quarters are allotted to Non-Gazetted Officers as per the quarters Allocation Rules.

(*d*) Twenty-four Gazetted Officers have occupied 'A' & 'B' Grade Bungalows and 'A' type quarters. Two hundred and seventeen Non-Gazetted staff have occupied the remaining quarters.

(*e*) None.

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) 238 வீடுகள் உள்ளன. அவற்றில் 3 வீடுகள் இரண்டு குடித்தனம் இருப்பதற்கு ஏற்றவையாகச் செய்யப்பட்டுள்ளன.

(உ) பங்களா ஒதுக்கும் விதிகளையனுசரித்து பங்களாக்களும், 'A' டைப் வீடுகளும் கெஜட் பதிவு அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன. குடியிருப்புகளை ஒதுக்கும் விதிகளை அனுசரித்து மற்ற டைப் குடியிருப்புகள் என்.ஜி.ஓ. வினர்க்கு வழங்கப்படுகின்றன.

24th January 1964]

(எ) 'A', 'B' வகை பங்களாக்களிலும், 'A' டைப் வீடுகளிலும், 24 கெஜட் பதிவு அதிகாரிகள் வசித்து வருகின்றனர். மற்ற குடியிருப்புகளில் 217 என்.ஜி.ஓ.வினர் வசித்து வருகின்றனர்.

(ஐ) ஒருவருமில்லை.

SRI V. S. S. MANI : Sir, may I know whether the allottees sub-let their quarters to outsiders or to the staff members with permission or without permission?

கனம் திரு. பூ. கக்கன் : யார் யார் அந்தக் கல்லூரியிலே பணி ஆற்றுகிறார்களோ, அவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கிற கெஸடெட் ஆபீசர்களுக்கும், நான்-கெஸடெட் ஆபீசர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

கனம் சபாநாயகர் : அவர்கள் பேரில் எடுத்துக்கொண்ட அந்த வீடுகளை அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அரசாங்கத்தின் அனுமதி பெற்றுச் செய்கிறார்களா, இல்லையா, என்பது கனம் அங்கத்தினருடைய கேள்வி.

கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி 'ஸப்-லெட்' செய்யக் கூடாது.

கலப்புத் திருமணம்

* 85 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதியோர்க்கு உதவி நிதி அளிப்பது போல கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளின் கலியாணச் செலவுக்கு ஏதாவது ஒரு நிதி வழங்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(இ) பழங்குடிப் பெருமக்களின் வீடுகளில் பெண் எடுக்கும் மணமகனுக்கு இந்த உதவித் தொகையில் அதிகபட்சம் தரப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : ஜாதியை ஒழிக்கவேண்டும் என்பதைப் பொதுவாக நாம் எல்லோருமே ஒப்புக்கொள்ளுகிறோம். சீக்கிரமாக ஜாதியை ஒழிக்கக் கலப்புத் திருமணம் ஒரு சாதனம் அல்லவா? இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய சட்டபூர்வமாக ஏதாவது சிக்கல் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கலப்புத் திருமணம் செய்துகொள்வதை நான் வரவேற்கிறேன். ஆனால், கலப்புத் திருமணம் செய்துகொள்ளுகிறவர்கள் செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. "கலப்புத் திருமணச் செலவை அரசாங்கம் கொடுக்குமா?" என்பது மூலக் கேள்வி. அதற்கு, 'இல்லை' என்று பதில் சொன்னேன். செலவு இல்லாமல் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அதுதான் சீர்திருத்தத் திருமணம்.

[24th January 1964

திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் சபாநாயகர் அவர்களே, பழங்குடி மக்கள் இதர சாதிப் பெண்களை மணந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சலுகை ஒன்றும் இல்லை. பாராட்டுதல் இருக்கும். (சிரிப்பு).

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கலப்புத் திருமணம் செய்யக் கூடிய நிலைமையில் உள்ளவர்களிடமிருந்து செலவுக்காகக் கோரி அரசாங்கத்திற்கு மனுக்கள் ஏதாவது வந்து இருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்ளுகிற தம்பதிகள் நல்ல பொருளாதார நிலையில் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பின் சந்ததிகள் அவ்வளவு பொருளாதார நிலையில் இல்லாத காரணத்தால், அந்த மக்கள் வாழ்க்கையில் பெரிய அவதிப்படவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிள்ளைகளுக்குச் சர்க்கார் உதவி செய்தால், இப்படிப்பட்ட திருமணங்கள் தொடர்ந்து நடைபெற வழியாக இருக்கும். ஆகையால், அரசு அதைக் கவனிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொருளாதார நிலை மாறுவதற்கு கலப்புத் திருமணம் காரணம் அல்ல என்று நான் கருதுகிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்குச் சலுகையோ, பண உதவியோ இல்லை என்றாலும், இதை ஊக்குவிக்க வேலைவாய்ப்பு கொடுக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது என்ற உத்தேசம் இல்லை. ஆனால், கலப்புத் திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் அதற்குத் தடை இருக்காது. இதிலே செலவைக் குறைப்பதுதான் முக்கியமானது. கலப்புத் திருமணம், மற்ற திருமணம் இவைகளுக்கெல்லாம் திருமணப் பிரசங்கம் நடக்கிறது. பிரசங்கம் செய்ய வருகிறவர்கள் பணம் கேட்காமல் வந்தால் இந்தக் கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு அதுவே பெரிய நிவாரணமாக இருக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அப்படித் திருமணம் செய்துகொள்கிறவர்கள் சமூகத்தில் துன்பப்படுகிறார்கள். அந்தத் துன்பத்தைப் போக்குவதற்காக அரசாங்கத்தினிடம் இருக்கக்கூடிய புறம்போக்கு தரிசு நிலங்களிலிருந்து ஆளுக்கு இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வீதம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு கலப்புத் திருமணம் செய்துகொண்டு துன்பப்படுகிறார்கள் என்றால், அவர்களுடைய நிலையை விளக்கி கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், அரசாங்கம் அவர்களுக்கு எந்த அளவுக்குப் பரிகாரம் அளிக்க முடியும் என்பதிலே கவனம் செலுத்தும்.

24th January 1964]

கனம் சபாநாயகர் : பணத்தையோ நிலத்தையோ வாங்கிக் கொண்டு ஆளை விட்டுவிடக் கூடாது. (சிரிப்பு).

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்படிக் கலப்புத் திருமணம் செய்துகொண்ட காரணத்திற்காக அந்த ஊரிலே இருக்கின்ற ஜாதிக்காரர்கள் அவர்களை ஜாதியிலிருந்து நீக்கி வைக்கும் கொடுமை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அப்படிப் பட்ட கொடுமை நடைபெறுவதை அரசாங்கம் தடை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குக் கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. எம். எஸ். மணி : கலப்புத் திருமணம் செய்து வைக்க வருகிற தலைவர்களை அரசாங்க பஸ்ஸில் டிக்கட் இல்லாமல் அனுமதிக்க அரசினர் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஸ் டிக்கட் கொடுப்பது ஒன்றும் பிரமாதம் இல்லை. அதற்காக இலவசமாக பஸ்ஸில் விட வேண்டிய அவசியம் இல்லை. யார் வருகின்றார்கள், எதற்காக வருகின்றார்கள் என்று தெரியாது. பஸ்ஸில் இதற்குச் சலுகை வேண்டியதில்லை.

கனம் சபாநாயகர் : பஸ்ஸில் இலவசமாக வருவதென்றால் ஒருக்கால் அவர்களுடைய அந்தஸ்துக்குக் குறைவாக இருக்குமோ என்னவோ !

திரு. செ. மாதவன் : அண்மையில் நம்முடைய உயர்நீதி மன்றம், 'ஜாதிப் பிரஷ்டம் (எக்ஸ்-கம்யூனிகேஷன்) செய்வது குற்றம் ஆகாது' என்று தீர்ப்பு தந்திருக்கிறது. அதற்குப் பின்னராவது, இந்தக் கலப்புத் திருமணம் செய்தவர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்தால் குற்றம் ஆகும் என்று சட்டம் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தத் தீர்ப்பைப்பற்றிக் கனம் உறுப்பினர் கூறுகிறார்களோ, அந்தத் தீர்ப்பை நான் படிக்கவில்லை. பொதுவாக, ஜாதிக் கட்டுப்பாடு செய்வது என்பது அனுமதிக்க முடியாத விஷயம். அவ்வாறு எங்காவது குறிப்பிட்ட இடத்தில் தவறுதலாக நடந்துகொண்டால் அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்பொழுது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கலப்புத் திருமண மக்களுக்கு அரசாங்கம் ஒத்தாசை செய்யாவிட்டாலுங்கூட, அமைச்சர்களாவது தலைமைதாங்கி அதை நடத்தி வைப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைச்சர்களை அழைத்து, அமைச்சர்களுக்கும் அங்கு போகக்கூடிய சௌகரியம் இருந்தால், காசு ஒன்றும் கேட்காமல், சாப்பாடு கூடச் சாப்பிடாமல், திருமணத்தை நடத்திவைக்கத் தயாராயிருக்கிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கலப்புத் திருமணம் செய்து வைப்பதற்குப் பிரசங்கம் செய்ய வருகிறவர்கள் பணம் கேட்காமல் வந்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சருக்குச் சொந்த அனுபவம் ஏதாவது இதிலே உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சொந்த அனுபவம் ஒன்றும் இல்லை. சில தலைவர்கள் திருமணத்திற்கு வந்து பேசவேண்டுமென்று அழைக்கப்பட்டால் 50 ரூபாய், 100 ரூபாய் கேட்கிறார்கள் என்று பல புகார்கள், பல வரலாறுகள் இருக்கின்றன.

திரு. து. ப. அழகமுத்து : பணம் கொடுத்து அனுபவம் முதல் அமைச்சருக்கு ஏதாவது உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமண வைபவத்தில் பேச்சுக்கு இடம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் எங்கள் வீட்டில் கல்யாணத்தின்போது பிரசங்கம் வைக்க அனுமதிப்பதில்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

*** 86 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நமது ராஜ்யத்தில் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு ஆஜரான மாணவர்கள் எத்தனைபேர், மாவட்டவாரியாக ?

(இ) இத்தேர்வில் வெற்றி பெற்ற (1) ஆண்கள் (2) பெண்கள் எத்தனைபேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The particulars in respect of the S.S.L.C. Public Examination held in March 1963 are furnished in the statement [a] placed on the table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா : ஆஜரான மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, தேர்வு பெற்ற மாணவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குப் பல காரணங்கள் உண்டு. மாணவர்களுடைய தரம், பள்ளிக்கூடத்தின் தரம், சொல்லிக் கொடுக்கிறவர்களின் தரம் எல்லாம் சேர்ந்துதான் இது ஏற்படுகிறது. ஆனால், சென்ற பரீட்சையிலே தேர்வு முடிவுகளில் சற்று அபிவிருத்தி ஏற்பட்டது என்றுதான் இப்பொழுது குறிப்பிடலாம்.

[a] Printed as Appendix I on page 150.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தேர்வுகள் வர வர அபிவிருத்தி இல்லாமல் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்குத் தேர்வுகளில் இருக்கும் கடினம்தான் காரணமா? மாணவர்கள் தரத்தை மீறிய முறையில் தேர்வுகள் இருக்கின்றன என்று எடுத்துக்கொள்வதா? அல்லது தேர்வுக்கு அவசியமான பக்குவம் மாணவர்களிடத்தில் ஏற்படவில்லை என்று எடுத்துக் கொள்வதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பெரிய பிரச்னை. சிக்கலான பிரச்னை என்று கூடச் சொல்லலாம். சுலபமாக இதற்கு வழி காண முடியாது. நிபுணர்கள் எல்லோரும் சேர்ந்து, அகில இந்திய ரீதியிலே கூட சில மாதங்களுக்கு முன்பு இதைப்பற்றி விவாதித்தார்கள். இந்த விரயத்தைத் தவிர்க்கவேண்டும், அதற்கு என்ன செய்வது, எவ்வளவு தூரம் விரயத்தைத் தவிர்க்க முடியும் என்பதுபற்றியெல்லாம் நிபுணர்களின் ஆலோசனை கோரப்பட்டது. அவர்கள் தெரிவித்த யோசனைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

Sri CHIRANJEEVULU NAIDU : Sir, the number of candidates declared eligible in the high schools maintained by the District Boards and Government are low when compared with the other aided schools. What are the steps that are to be taken to improve the standard?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I do not think that the standard in the schools maintained by the Government and District Boards is lower than the aided schools.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் இப்பொழுது படிக்கின்ற நேரத்தைக் காட்டிலும் மற்ற நிகழ்ச்சிகளிலே பங்கு கொள்ளுகின்ற நேரம் அதிகமாக இருப்பதால், தேர்விலே இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் சிந்திக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. ஆனால், ஒரு யோசனை—விடுமுறைகளைக் குறைக்க வேண்டுமென்பது. இப்பொழுது விடுமுறை அதிகமாக இருக்கிறது என்பதற்காக அது ஓரளவு குறைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் போதாதது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது அதற்கு ஆசிரியர்கள் இன்னும் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தேர்வுகளிலே வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்று கொடுக்கிறார்கள். அந்தப் பரிசுகள் அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறதா அல்லது அதிகாரிகளின் அபிப்பிராயப்படி கொடுக்கப்படுகிறதா? அவற்றை ப்ரைஸ் பாண்டாகக் கொடுக்கிறார்களே, அது எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ப்ரைஸ் கொடுப்பது என்றால், ப்ரைஸ் பாண்டாகக் கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

[24th January 1964

திரு. அ. ராகவ ரெட்டி : சார், மற்ற மாவட்டங்களை விட செங்கல்பட்டு, தென்னுற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் குறைவாகத் தேர்ச்சி பெற்று இருப்பதாகத் தெரிகிறதே, அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பர்சென்டேஜைப் பார்த்தால் குறைவு இல்லை; ஆனல் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம்.

Disbursement of salaries to teachers in North Arcot district

*87 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties of the teachers and other staff of the high schools in the North Arcot district due to the late payment of salaries every month; and

(*b*) if so the action taken by the Government for the payment of their salaries by the first week of every month.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In the month of February 1963, salaries of the staff of the 20 Board High Schools out of 120 schools in the North Arcot district were not paid till 20th February 1963. There were no other late payments of salaries.

(*b*) Specific instructions have been issued to all headmasters of schools to prepare and submit the pay bills for each month so as to reach the office of the Special District Educational Officer, North Arcot, on or before 23rd of each month. Prompt payment of salary before the first week of every month has been ensured since February 1963.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, பணத் தட்டுப்பாடு இல்லை என்ருலும், ஆசிரியர்களுடைய சம்பளம் சில நேரங்களிலே தாமதப்படுத்தப்படுகின்றன. எந்த எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிறுத்தி வைக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த எந்த சந்தர்ப்பத்தில் சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டது என்பதற்கு தகவல் இல்லை.

திரு. ம. கமலநாதன் : சர்விஸ் ரெஜிஸ்டர் திறக்கவில்லை என்பதற்காக சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தால், அப்படி சர்விஸ் ரெஜிஸ்டர் கொடுப்பது நிர்வாகத்தின் பொருப்பு அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.

24th January 1964]

Housing Schemes for Tiruchirappalli

* 88 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the Housing Schemes undertaken by the State Housing Board in and around Tiruchirappalli City during 1963; and

(*b*) when the acquisition of lands for the Tiruchirappalli East Neighbourhood Scheme would be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இந்த திட்டங்களில் எது எது தொடங்கி இருக்கின்றன. எது எது ஆரம்பிக்க இருக்கின்றன என்ற விவரங்கள் கொடுக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கல்மண்டை பீச்சாங் குளம் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் இப்பொழுது நிறைவேற்றப் பட்டுக்கொண்டு வருகிறது ; ரெண்டல் ஹௌசிங் ஸ்கீம் சம்பந்தப் பட்டவரை டெண்டர்ஸ் கூப்பிடப்பட்டு இருக்கிறது; லோ இன்கம் க்ரூப் ஹௌசிங் ஸ்கீம் ப்ராஜக்ட் தயார் செய்துகொண்டு இருக்கிறார்கள்; மிடில் இன்கம் க்ரூப் ஹௌசிங் ஸ்கீம் சம்பந்த மாக டென்டர்கள் கால் பண்ணி இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இரண்டாவது ஐடமாகக் கொடுக்கப்பட்டு இருக்கும் நில ஆர்ஜித அபிவிருத்தித் திட்டங் கள், பல்க் அக்விஸிஷன் ஸ்கீமில் 500 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்து மனைகட்டுகளாக கட்டி பட்டிணமாக அபிவிருத்தி செய்ய தீட்டப்பட்டிருந்த திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ? அதை ஒத்திவைப்பதற்கு காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திட்டம் இருக்கிறது; திட் டம் ஒத்தி வைக்கப்படவில்லை. இடத்தைத் தான் மாற்றப் போகிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், மாற்று இடம் பார்க்கும் வேலை முடிவாகிவிட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மாற்று இடம் நிர்ணயிப் பது பற்றி கலெக்டருக்கு இரண்டு மூன்று மாதத்திற்கு முன்பே அறிவித்திருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஏற்கனவே உத்தேசித் திருந்த இடத்தை கைவிட வேண்டிய காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த இடம் 200 அல்லது 250 ஏக்கரா நிலம் கொண்ட வாழைத் தோட்டமாக இருக்கிறது. அந்த இடத்திலே இருந்து தான் இன்றைக்கு திருச்சிக்கு

[a] Printed as Appendix II on pages 105–107

[24th January 1964

வேண்டிய வாழைக்காய்கள், காய்கறிகள் வந்து கொண்டிருக்கின்றன. சர்க்காருடைய கொள்கை வெட்லாண்ஸ்-ஐ ஆர்ஜிதம் செய்வது இல்லை என்பது தான். அதோடு இவ்வளவு முக்கியமான வாழைத் தோட்டத்தை எடுத்து வீடு கட்டுவது உசிதம் இல்லை, ஆகவே வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அது போன்ற ஒரு வாழைத் தோட்டம் மறுபடியும் வளர்க்க வேண்டுமானால் குறைந்தது 30, 40 வருஷங்கள் ஆகும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இதன் காரணமாக திட்டத்தை குறைக்காமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பு இருந்ததைவிட சற்று விரிவான ஒரு திட்டத்தையே தயார் செய்துகொண்டு இருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், விரிவான மனைக்கட்டு திட்டம் வரும் என்பதில் சந்தோஷம். ஒன்று கேட்க விரும்புகிறேன். இப்படி விடப்பட்ட இடத்தில் உள்ள தோட்டம் வாழை சாகுபடிக்கே உபயோகப்படும் நிலமாக இருக்கும் என்று உத்தரவாதம் கொடுக்கமுடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, தனியார் தங்கள் சொத்தை அழித்துக் கொண்டால் அதை சர்க்கார் தடுக்க முடியாது. ஆனால் சர்க்காரே சென்று விளை பொருள்கள் மகசூல் செய்யும், உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்பதுதான் சர்க்காரின் கொள்கை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்னும் கேள்விகள் கேட்டுக் கொண்டே போனால் வளர்ந்து கொண்டே போகும். மன்னிக்க வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேள்விகள் கேட்கவேண்டியதுதான். அங்கத்தினர் கேட்கட்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அது தனியார் சொத்தாக இருக்கலாம். ஆனால் அது சமுதாயத்திற்கு அவசியம் என்று முன்னால் அமைச்சர் அவர்களே சொன்னார்கள், அவசியமான வாழைக்காய் முதலியவை உற்பத்தி ஆகின்றன என்று

கனம் சபாநாயகர் : தனியாா உரிமையில் எப்படி இண்டர்பியர் பண்ண முடியும் ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதில் வேறு விஷயம் இருக்கிறது, சொல்கிறேன். சிலர் ஆட்சேபணை செய்தார்கள் என்று இடத்தை மாற்றி விட்டார்கள். இன்றைக்கு திருவரம்பூரிலே பாய்லர் பிளாண்ட் வந்து, புதிய பாலம் கட்டி ரஸ்தா போட்டிருப்பதன் காரணமாக நிலத்தின் மதிப்பு பல மடங்கு அதிகரித்திருக்கிறது. இன்றைக்கு அங்கே ஏகரா ஒன்று ஒரு லட்ச ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. அரசாங்கம் எடுத்துக்கொண்டு நஷ்ட ஈடு கொடுத்

24th January 1964]

தால் ரூபாய் 10,000 தான் ஒரு ஏகராவுக்கு கொடுப்பார்கள். இந்த காரணத்தினால்தான் அந்த இடம் கைவிடப்பட்டது என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முற்றிலும் தவறு. யார் அந்த நோக்கத்தை அங்கத்தினர்களுக்கு சொன்னார்களோ. சர்க்காரைப் பொறுத்தவரையில் வெட் லாண்டுகளை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில்தான் அந்த இடத்தைக் கைவிட்டோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் சொன்னதா, அல்லது எது தவறு என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. அது இருக்கட்டும். அரசாங்க ஊழியர்களுக்கு கட்டடம் கட்டும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கான தனி திட்டம் இருக்கிறது. சர்க்கார் ஊழியர்களுக்கென கட்டடம் கட்ட மத்திய சர்க்காரால் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. திட்டம் ஒன்று பத்து ஏக்கரா அளவில் செய்யப்படுகிறது. எது தவறு என்று கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். யாருக்கோ உதவி செய்ய கைவிட்டோம் என்று அவர்கள் குற்றச்சாட்டு சொன்னார்களே அது வேண்டும் என்றே யாரோ புகார் சொல்லியிருக்கிறார்கள் அவர்களிடம், என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அமைச்சர் அவர்கள் சொல்வது சரியல்ல

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: "சரியல்ல", "சரியல்ல" என்று சொன்னால் அது கேள்வியாகாது. கேள்வியைப்போடுங்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் செய்ய வேண்டும்

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: "யார் தவறு என்று சொல்லவில்லை" என்று சொன்னார்கள்; அதற்கு அவர்களுக்கு பதில் சொன்னேன்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கேள்வியைக் கேட்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இடத்தை மாற்றுவது பற்றி ஆட்சேபணை இல்லை. புதிய இடத்தை தேர்ந்து எடுத்தாலும் பழைய வசதிகள் இருக்கும் என்று எடுத்துக் கொள்ளலாமா?

கனம் சபாநாயகர்: விரிவான திட்டம் வருகிறது என்றுதான் சொன்னார்களே.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆம், முன்பே சொன்னேன் விரிவான திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறோம் என்று. இன்னும் இந்த இடத்தில் அதிகமாக விஸ்தரிக்க வசதிகள் இருக்கின்றன; அந்த இடத்தில் அப்படியில்லை. புதிதாக தேர்ந்தெடுக்கும் இடம் வருங்காலத்தில் மேற்கொண்டும் 500 ஏக்கர் வரை விஸ்தரிக்க வசதிகள் உள்ள இடமாக தேர்ந்தெடுக்கப்படும்.

[24th January 1964

சர்க்கரை கட்டுப்பாடு

* 89 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963 ஏப்ரல் மாதத்தில் சென்னை நகரத்தில் சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்பட்டதா ?

(இ) அதற்குக் காரணமென்ன ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) ஆம். 1963 ஏப்ரலில் சர்க்கரை கிடைப்பதில் சிறிது தட்டுப்பாடு இருந்தது.

(இ) இதற்கு முந்திய கரும்புப் பட்டத்தில், அதாவது, 1961-62 கரும்புப் பட்டத்தில் மாசூல் குறைந்திருந்ததும், 1962-63-ல் கரும்புப் பட்டத்தில் உத்தேச மாசூல் குறைவாயிருக்குமென்று எதிர்பார்க்கப்படுவதும்தான் இதற்குக் காரணம்.

Archaeological Monuments (Dharmapuri)

* 90 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether any archaeological monument in Dharmapuri taluk in Salem district, deserving protection and preservation was visited by the Special Officer of the State. Archæological department recently; if so, the result thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: In May 1962, the Special Officer for Archaeology, Madras, visited Adamankottai in Dharmapuri Taluk in Salem District, and it is proposed to excavate the ruins in the Adamakottai and Kottainadu with a view to find out their archaeological value.

Gold Control Order

* 91 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Government have examined the repercussions the Gold Control Order would produce on the working of the Madras Pawnbrokers Act and the Pawnbrokers trade in the State; and

(*b*) whether any suggestions have been made to the Gold Control Board in this connection?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) The Government have taken up the matter with the Government of India.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தங்கக் கட்டுப்பாடு சட்டம் வருவதற்கு ஓராண்டுக்கு முன்பே பொற்கொல்லர் வேலையைச் செய்து வந்தவர்களுக்குத் தனிச் சலுகை அளிக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து நம்முடைய அரசாங்கத்திற்கு ஏதாவது திட்டம் வந்துள்ளதா? விவரம் என்ன?

24th January 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரித் திட்டம் ஒன்றும் கண்ட்ரோல் ஆர்டர் வருவதற்கு முன்னால் வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நகைகளை அடகு பிடித்திருப்பவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவது, முழுகிப்போன நகையை என்ன செய்வது என்பது சிக்கலாக இருக்கும் காரணத்தால் ஏழை எளிய மக்கள் தங்கள் நகைகளை அடகு வைத்து கடன் வாங்குவதில் உள்ள கஷ்டத்தைப்பற்றி நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு என்ன யோசனை கூறியிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்குக் கூறுகின்ற யோசனையை வெளியிட முடியாது. முடிவுகள்தான் வெளியிடப்படும். இந்தப் பிரச்னையைத் தீர்க்கப் பல அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : புதிய விதிகளின்படி இந்தப் பொறுப்பை ராஜ்ய அரசாங்கத்திற்கே விட்டுவிட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது உண்மையானால் மறுபடியும் மத்திய அரசாங்கத்திற்கு எழுதவேண்டிய அவசியம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அதனால்தான் மத்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது.

Bifurcation of Registration Districts

* 92 *Q.*—SRI S. NANJUNDA RAO : Will the Hon. the Minister for Information be pleased to state :

(*a*) whether there is any proposal before the Government for the bifurcation of the Registration districts of Madurai, Ramanathapuram, Salem and North Arcot districts; and

(*b*) if so, at what stage the matter stands?

THE HON. SRI G. BHUVARAHAN : (*a*) Yes.

(*b*) The proposal has been deferred till the present emergency is over.

UNSTARRED QUESTIONS.

Formation of road (Selliampatti village)

1 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have acquired any lands for the construction of a road in Selliampatti village in Tiruppathur taluk, Ramanathapuram district; and

(*b*) whether due compensation was paid for the lands acquired?

(b) There are two roads in Selliampatti, hamlet of Sirumarudur village for which land acquisition was involved. They are (1) road from Vaiyapuripatti to Selliampatti via Mettupatti and (2) road from Piranmalai to Warpet. The award amount of Rs. 10,826.50 in respect of the lands acquired for formation of road from Vaiyapuripatti to Selliampatti has been disbursed. Though the formation of the road from Piranmalai to Warpet had been completed, the cost of lands acquired could not be paid to the land owners for want of final orders of the Board of Revenue on the question of classification of the lands. The matter is under correspondence between the District Revenue Officer, Ramanathapuram at Madurai and the Board of Revenue. Pending final decision by the Revenue department, the compensation amount of Rs. 5,565.11 has been deposited in the sub-treasury at Tiruppattur on 10th November 1960 by the Highways and Rural Works department. This amount has not yet been disbursed to the land owners.

(அ) ஆம்.

(இ) சிறுமருதூர் கிராமத்தைச் சேர்ந்த செல்லியம்பட்டி குக்கிராமத்தில் உள்ள இரண்டு சாலைகளுக்காக நில ஆர்ஜிதம் செய்யவேண்டியிருந்தது. அவற்றில் ஒன்று வையாபுரிப்பட்டியிலிருந்து மேட்டுப்பட்டி வழியாக செல்லியம்பட்டி செல்லும் சாலை. மற்றொன்று பிரான் மலையிலிருந்து வார்பேட்டைக்குச் செல்லும் சாலை. வையாபுரிப்பட்டியிலிருந்து செல்லியம்பட்டிக்குச் செல்லும் சாலையைப் போடுவதற்கென ஆர்ஜிதம் செய்த நிலங்கள் சம்பந்தமாகக் கொடுக்கவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையான 10,826 ரூபாய் 50 நயாபைசா, சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. பிரான்மலையிலிருந்து வார்பேட்டைக்குச் செல்லும் சாலையைப் போடும் வேலை பூர்த்தியாகிவிட்டாலும், நிலச் சொந்தக்காரர்களுக்கு ஆர்ஜிதம் செய்த நிலங்களின் கிரயத்தைக் கொடுக்க முடியவில்லை. இந்த நிலங்களின் தரப் பிரிவினை சம்பந்தமாக ரெவினியூ போர்டாரிடமிருந்து முடிவான உத்தரவு கிடைக்காததே இதற்குக் காரணமாகும். மதுரையிலுள்ள ராமநாதபுரம் ஜில்லா ரெவினியூ அதிகாரிக்கும் ரெவினியூ போர்டாருக்கும் இடையே இது குறித்து கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. ரெவினியூ துறையினர் முடிவான உத்தரவு வெளியிடுகிறவரையில், நஷ்ட ஈட்டுத் தொகையான 5,565 ரூபாய் 11 நயாபைசாவை நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையினர் 1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ந் தேதியில் திருப்பத்தூர் கீழ்கஜானாவில் டிபாசிட் செய்துவைத்துள்ளனர். இத்தொகை நிலச் சொந்தக்காரர்களுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை.

Public Service Commission (Recruitment of candidates for local bodies, etc.)

2 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to set up a separate Service Commission to recruit candidates for posts in the Public Sector undertakings;

(b) whether there is any proposal to entrust the Madras Public Service Commission with powers to recruit candidates for appointment to local bodies; and

(c) if so, the details thereof?

A.—(a) No.

24th January 1964]

(*b*) No.

(*c*) Does not arise.

Staff Nurses (regularisation of services)

3 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the procedure adopted for the regularisation of Staff Nurses in Government Hospitals;

(*b*) whether it is a fact that the services of the batch of nurses who joined service in 1960 have not yet been regularised; and

(*c*) if so, the reasons for the delay?

A.—(*a*) A circular is issued by the Director of Medical Services every year to the Heads of Medical Institutions requiring the temporary nurses working under them to apply for regularisation of their appointments. The applications are then scrutinised and such of the applicants as satisfy the relevant rules and conditions are regularly appointed as nurses, usually with retrospective effect.

(*b*) & (*c*) Of the 246 nurses who joined Government service in 1960, the services of 168 nurses have been regularised on 21st March 1963. Of the remaining, 27 are not in service, 14 persons have not applied for regularisation and 34 have not furnished necessary certificates. The question of relaxing the age rule in respect of the remaining 3 nurses to enable them to be regularly appointed is under correspondence. Suitable instructions have been issued to the Director of Medical Services to reduce the delay involved in such cases.

(அ) மருத்துவ மனைகளில் தாற்காலிகமாகப் பணியாற்றும் நர்சுகள் தங்கள் நியமனங்களைக் காயமாக்கும்படி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமென்று கண்டுள்ள சுற்றறிக்கை ஒன்றை மருத்துவத் துறை டைரக்டர் மருத்துவ மனைகளின் தலைவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் அனுப்புகின்றார். இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, பொருத்தமான விதிகளையும் நிபந்தனைகளையும் அனுசரித்துள்ள விண்ணப்பதாரர்கள் நர்சுகளாக நியமிக்கப்படுகின்றனர். சாதாரணமாக, இவர்களின் முந்திய பணிக் காலத்தையும் சேர்த்தே இவர்களை வேலையில் காயமாக்குகின்றனர்.

(இ), and (உ) 1960-ம் ஆண்டில் 246 நர்ஸ்கள் அரசாங்கப் பணியில் சேர்ந்தனர். இவர்களில் 168 நர்ஸ்களின் பணி 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ந் தேதியில் காயமாக்கப்பட்டது. எஞ்சியவர்களில், 27 பேர்கள் இப்போது வேலையில் இல்லை 14 பேர் காயமாக்கப்படுவதற்காக விண்ணப்பித்துக்கொள்ளவில்லை 34 பேர் அவசியமான சான்றிதழ்களை அனுப்பவில்லை ; எஞ்சிய 3 நர்ஸ்களில் பணிக் காலத்தை முறைப்படுத்துவதற்காக அவர்களின் வயது வரையறையைத் தளர்த்துவது குறித்து கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது. இத்தகைய விஷயங்களில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும்படி மருத்துவத்துறை டைரக்டருக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

Archaeological Survey (Kaveripattanam)

4 Q.—Pulavar K. GOVINDAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடைச் சங்க காலத்தில் சோழர் தலைநகராய் விளங்கிக் கடலால் அழிந்துபோன புகார் நகரம் இருந்த இடத்தை புதைபொருள் ஆராய்ச்சித் துறையார் ஆராய்ந்து பார்த்தனரா ?

(இ) இவ்வாராய்ச்சியில் வெளிப்பட்ட கண்டுபிடிப்புகள் எவை ?

A.—(*a*) Yes, Sir.

(*b*) " The Southern Circle of the Archaeological Survey of India under Shri S. R. Rao, conducted excavation at two places (Kilaiyur and Vellaiyan Iruppu) around Kaveripattinam. At Kilayur, a massive brick platform 18·28 × 7.62 in size yas brought to light. In one of the corners, remnants of two wooden posts, planted close to the brick-work were noticed. The structure was built on natural sand and very likely represented a wharf in the back waters where boats could be anchored to the wooden posts. The size of the bricks used conforms to that used at Nagarjunakonda during the Ikshvaku period. The Megalithic black and red ware was found in the contemporary deposits. At Vellaiyan Iruppu, the excavation exposed a 1.21 m. deep strata belonging to the early medieval period (circa ninth-twelth century A.D.). Four fragmentary brick walls and two platforms were laid bare at different levels. Among the interesting antiquities unearthed were two beautiful royal heads in typical Chola style, a terracotta pedestal for an image and torso of a dancing lady."

(அ) ஆம்.

(இ) இந்தியப் புதைப்பொருள் ஆராய்ச்சித் துறையின் தென்பிராந்தியக் கிளை திரு. S. R. ராவ் அவர்களின் மேற்பார்வையில் காவேரிப் பட்டணத்தைச் சுற்றிலும் கிளையூர், வெள்ளையன் இருப்பு என்ற இரண்டு இடங்களில் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி நடத்தியது. கிளையூரில் 18·28 மீட்டர் × 7 62 மீட்டர் அளவுள்ள செங்கல் மேடை ஒன்று காணப்பட்டது. அதன் ஒரு மூலையில் செங்கல் வேலைக்கு அருகில் நடப்பட்ட இரண்டு மரக் கம்பங்களின் அடையாளங்கள் தெரிந்தன. அந்த மேடை மணலின்மேல் கட்டப்பட்டிருந்தது. உப்பங்கழிகளில் படகுகளை இழுத்துக் கட்டுவதற்காக மரக் கம்பங்கள் கொண்ட தோணித்துறை இருப்பதுண்டு. அதைப் போன்றதொரு தோணித்துறையாக அந்தச் செங்கல் மேடை தோற்றமளித்தது. அதில் உபயோகிக்கப்பட்ட செங்கற்களின் அளவு, இக்ஷுவாகு காலத்தில் நாகார்ஜுனகொண்டாவில் உபயோகிக்கப்பட்ட செங்கற்களின் அளவை ஒத்துள்ளது. அதே காலத்திய புதைப்பொருள்களில் கருப்பு, சிவப்புக் கற்களாலான பாத்திரங்களும் காணப்பட்டன. வெள்ளையன் இருப்பில் 1·21 மீட்டர் ஆழத்திற்கு பூமியைத் தோண்டுகையில், ஆரம்ப இடைக்காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்த பகுதிகள் வெளிக்கொண்டு வரப்பட்டன. நான்கு உடைந்த செங்கல் சுவர்களும் இரண்டு மேடைகளும், வெவ்வேறு மட்டங்களில் போடப்பட்டிருந்தன. அங்கே தோண்டியெடுக்கப்பட்ட பண்டைப் பொருள்களில், சோழ பாணியிலுள்ள இரண்டு அழகிய தலை உருவங்களும். ஓர் உருவத்துக்குரிய சுட்ட மண்ணால் செய்யப்பட்ட பீடமும், ஒரு நடன மாதின் உடைந்த உருவமும் முக்கியமானவை.

Bridge across Cheyyar

5 *Q*.—PULAVAR K. GOVINDAN : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், ஆவணியாள்புரத்திற்கு அண்மையில் உள்ள செய்யாற்றின்மீது கட்டப்பட்டிருக்கும் அணைக்கட்டு மிகவும் பழமையாகிவிட்டமையாலும், பஸ்கள் செல்வதற்கு இடையூறு தரும் வகையில் மிகவும் குறுகிய அகலமுடையதாக இருப்பதாலும், அதைப் புதுப்பித்து விரிவுபடுத்த உத்தேசமுண்டா ?

A.—No.

இல்லை.

24th January 1964]

Peranampet—Madras (new bus route)

6 *Q.*—SRI A. K. SUBBIAH : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் பேரணாம்பட்டியிலிருந்து சென்னைக்குப் போகும் பஸ் ரூட்டு ஆரம்பிக்கும் விஷயம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

A.—(*a*) & (*b*) The proposal to open a new route Peranampet to Madras is under examination by the Transport Commissioner, Madras in consultation with the Regional Transport Authorities concerned and the Director, Madras State Transport Department.

(அ), & (இ) பேரணாம்பட்டுக்கும் சென்னைக்கும் புதிய பஸ் மார்க்கம் துவக்கும் திட்டத்தை சென்னைப் போக்குவரத்துத் துறைக் கமிஷனர் அந்தந்தப் பிராந்தியப் போக்குவரத்து அதிகாரிகளையும் சென்னை அரசாங்கப் பஸ் போக்குவரத்துத் துறை டைரெக்டரையும் கலந்து பரிசீலனை செய்து வருகிறார்.

Formation of road (Machampatti village)

7 *Q.*—SRI A. K. SUBBIAH : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்கா மச்சம்பட்டு கிராமத்திற்கு ரோடு போட நிலம் ஆர்ஜிதம் செய்யும் வேலை என்ன நிலையிலுள்ளது ?

(இ) இன்னும் எவ்வளவு நாளில் ரோடு போட்டு முடிக்கப்படும் ?

A.—(*a*) The draft declaration under section 6 of the Land Acquisition Act, 1894 (Central Act I of 1894) submitted by the District Revenue Officer, North Arcot, for acquisition of lands required for the formation of a road from Ambur–Satgur road to connect Nachimbattu in Mechambattu Village, Gudiyatham taluk, was approved in G.O. Routine No. 2073, R.D. & L.A., dated 15th October 1963 and ordered to be published in the *Fort St. George Gazette*. The Tahsildar, Gudiyatham taluk, is taking action to acquire the required lands.

(*b*) As the urgency clause of the Land Acquisition Act has not been invoked in this case, the possession of the land can be taken up only after the award is passed. The road will be formed after the lands are taken possession of.

(அ) குடியாத்தம் தாலூகாவில் ஆம்பூர்—சத்கூர் சாலையிலிருந்து மாச்சம்பட்டு கிராமத்தை இணைப்பதற்கான சாலை ஒன்றைப் போடுவதற்குத் தேவைப்படும் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்காக, வட ஆற்காடு ஜில்லா ரெவினியூ அதிகாரி 1894-ம் ஆண்டு நில ஆர்ஜிதச் சட்டத்தின் மத்தியச் சட்டம் (1/1894) 6-வது பிரிவின்கீழ் மசோதா அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ந் தேதி கிராம அபிவிருத்தி ஸ்தல நிர்வாகத் துறையில் பிறந்த 2073-ம் எண் அரசாங்க ஆணையில் அந்த அறிக்கை அங்கீகரிக்கப்பட்டு, செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் வெளியாக வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. குடியாத்தம தாலூகா தாசில்தார் தேவைப்படும் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

(இ) நில ஆர்ஜிதச் சட்டத்தில் உள்ள அவசர ஷரத்து இந்த விஷயத்தில் பயன்படுத்தப்படாததால், தீர்ப்பு வழங்கிய பிறகுதான் நிலங்களைச் சுவாதீனம் பெற முடியும். நிலங்களைச் சுவாதீனத்தில் எடுத்துக்கொண்ட பிறகு சாலை போடப்படும்.

[24th January 1964

Level crossing, Samalpatti (Provision for cross bridge)

8 Q.—SRI M. KAMALANATHAN கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா?

சாமல்பட்டி, தாசம்பட்டி ரயில்வே நிலையங்களின் அருகேயுள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு நேரா வண்ணம் அவ்விடத்தில் ஒரு மேம்பாலம் கட்ட அல்லது அடியில் உள்ள பாலங்களை விரிவுபடுத்தி போக்குவரத்திற்கேற்ப வசதி செய்துதர உத்தேசமுண்டா?

A.—There is no proposal to construct an overbridge at the level crossing or to widen the existing underbridge.

இந்த ரயில்வே நிலையங்களின் அருகேயுள்ள லெவல் கிராஸிங்கில் மேல் பாலம் கட்டவோ, தற்பொழுதுள்ள கீழ்ப்பாலத்தைக் விரிவுபடுத்தவோ திட்டமில்லை.

Physically Handicapped (rehabilitation of)

9 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any special efforts are being made by the Special Officer for the Physically Handicapped to find employments for them;

(b) the details of the assistance during 1962–63; and

(c) what steps the Government propose to take to increase the intake of physically handicapped candidates in Government Service?

A.—(a) Yes.

(b) During the year 1962–63, 47 physically handicapped persons (45 men and 2 women) were placed in suitable jobs. Of the 47 persons, 10 are blind, 20 deaf-mutes and 17 orthopaedic applicants. Apart from Government Offices, private institutions like WIMCO, Madras Cancer Institute, Spencer and Company, East Asiatic Company, Tube Investments, Resa Radio Company, Diamond Chain Factory, Pilot Pen Company, SIR Ice Factory, Ashok Leyland, Metal Box Company, etc., in Madras City and S.R V.S., Kumbakonam are the institutions wherein such physically handicapped persons were employed.

(c) (i) The Government have requested the recruiting authorities such as the Madras Public Service Commission and the appointing authorities to bear in mind the need for helping physically handicapped persons when they select or appoint candidates as the case may be for regular or temporary vacancies in posts under their control. The examining medical authorities have also been requested to use their discretion liberally in assessing whether or not a particular handicap will be detrimental to the efficient discharge of the duties of the posts to which a handicapped person seeks to be appointed.

(ii) In respect of appointments to the posts of Lift Operators and Telephone Operators which can normally be manned by partially disabled persons a liberal attitude towards handicapped persons

24th January 1964]

is feasible and so the Heads of Departments and other appointing authorities have been requested to view with utmost sympathy the cases of physically handicapped persons in making appointments to the above posts.

(iii) The Government have since constituted an Advisory Committee for the Employment Exchange for the physically handicapped and for this Committee Medical experts will be drawn to form a Board of Experts. The Board of Experts will examine the physically handicapped persons to asseses the degree of disability and to give opinion regarding the suitability for particular posts. On the basis of this report no further medical examination will be insisted upon by appointing authorities of the Government. On the formation of this Board the various Heads of Departments and appointing authorities will be advised to consider physically handicapped persons for appointment in posts in which their disability will not be a bar.

(அ) ஆம்.

(இ) 1962–63-ல், 47 அங்கஹீனர்கள் (45 ஆண்கள் 2 பெண்கள்) தகுந்த வேலைகளில் அமர்த்தப்பட்டனர். அந்த 47 பேர்களில் 10 பேர் குருடர்கள், 20 பேர் செவிட்டு ஊமைகள், 17 பேர் முடவர்கள். அரசாங்க அலுவலகங்களில் மட்டுமின்றி சென்னையிலுள்ள விம்கோ, புற்று நோய் ஆராய்ச்சி நிலையம், ஸ்பென்சர் கம்பெனி, ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி, ட்யூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ், ரீசா ரேடியோ கம்பெனி, டயமண்டு செயின் பாக்டரி, பைலட் பேனா கம்பெனி, S.I.R. ஐஸ் பாக்டரி, அசோக் லேலண்ட், மெட்டல் பாக்ஸ் கம்பெனி, கும்பகோணத்திலுள்ள S.R.V.S. போன்ற தனியார் நிறுவனங்களிலும் அங்கஹீனர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(உ) (i) வேலைக்கு நபர்களைத் தெரிந்தெடுக்கும் ஸ்தாபனங்களான சென்னைப் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்ற ஸ்தாபனங்களும் நியமன அதிகாரிகளும் தங்கள் மேற்பார்வையில் உள்ள முறையான பதவிகளை அல்லது தற்காலிகப் பதவிகளைப் பூர்த்தி செய்வதற்கென நபர்களைத் தெரிந்தெடுக்கும்போது அல்லது நியமிக்கும்போது, அங்கஹீனர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை மனதில் கொள்ளும்படி அரசாங்கம் கேட்டுள்ளது. அங்கஹீனரை எந்த வேலையில் நியமிக்க உத்தேசிக்கப்படுகிறதோ அந்த வேலையின் கடமைகளைத் திறமையுடன் செய்வதில் குறிப்பிட்ட ஒரு குறைபாடு தடையுண்டாக்குமா இல்லையா என்பதை ஆலோசிக்கையில் கருணையுடன் பிரச்சினையை அணுகும்படி மருத்துவப் பரிசீலனை செய்யும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ii) சிறு குறைபாடுள்ள அங்கஹீனர்கள் லிப்ட் ஆப்பரேட்டர்களாகவும், டெலிபோன் ஆப்பரேட்டர்களாகவும் சாதாரணமாகப் பணியாற்ற முடியும். அவர்களை அந்த வேலைகளில் நியமிப்பது விஷயமாகக் கருணை காட்டுவது நல்லது. எனவே, மேற்சொன்ன வேலைகளில் அங்கஹீனர்களை நியமிக்கும் விஷயத்தை இரக்க மனப்பான்மையுடன் அணுகும்படி இலாகாத் தலைமை அதிகாரிகளும் இதர நியமன அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(iii) அங்கஹீனர்களுக்கான வேலை வாய்ப்பு ஸ்தாபனத்திற்கென்று ஆலோசனைக் கமிட்டி ஒன்றை அரசாங்கம் இப்போது நியமித்துள்ளது. மருத்துவ நிபுணர்கள் அடங்கிய போர்டு ஒன்று இந்தக் கமிட்டியின் அங்கமாக இருக்கும். நிபுணர்கள் போர்டு அங்கஹீனர்களைச் சோதித்துப் பார்த்து, எந்த அளவுக்கு அவர்கள் திறனிழந்துள்ளனர் என்பதை மதிப்பிட்டு, குறிப்பிட்ட வேலைகளுக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களா என்பது குறித்துத் தன் கருத்தைத் தெரிவிக்கும். இந்த அறிக்கையின் அடிப்படையில், அரசாங்க நியமன அதிகாரிகள் மேற்

[24th January 1964

கொண்டு மருத்துவப் பரிசோதனை எதையும் வற்புறுத்தமாட்டார்கள். இந்த போர்டு அமைக்கப்பட்ட பிறகு, அங்கஹீனர்களை எந்த வேலைகளில் நியமித்தால் அவர்களது ஊனம் ஒரு தடையாக இருக்காதோ, அந்த வேலைகளில் நியமிக்கும்படி பல்வேறு இலாகாத் தலைமை அதிகாரிகளும் நியமன அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

Agricultural Production Co-ordination Committee

10 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to place on the Table of the House the recommendations of the Agricultural Production Co-ordination Committee and the measures taken by the Government to implement them?

A.—No such Committee as referred to by the Hon'ble Member was constituted by the Government and as such the question of placing the recommendations of the Committee on the Table of the House does not arise.

கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறபடி எந்தக் கமிட்டியையும் அரசாங்கம் அமைக்கவில்லை. அதனால் அக் கமிட்டியின் சிபாரிசுகளைச் சட்டசபையில் வைக்கும் பிரச்னைக்கு இடமில்லை.

T.S.L.C. Examination (Private examinees)

11 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to allow physical instructors and craft instructors to appear for the T.S.L.C. examination privately?

A.—No, Sir.

Municipal College, Salem (Staff)

12 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have regularised the services of the staff of the Municipal College, Salem on a par with the services of the staff of the other Government Colleges consequent on the transfer of the management; and

(*b*) if not, the reasons therefor?

A.—(*a*) The Gazetted as well as the Non-Gazetted staff of the former Municipal College, Salem including the Last Grade Government Servants have been absorbed regularly in the Madras Educational Service and Madras Educational Subordinate Service and corresponding State Government services with effect from 1st April 1960.

(*b*) Does not arise.

(அ) சேலம் முன்னாள் முனிசிபல் கல்லூரியின் கெஜட் பதிவுபெற்ற ஊழியர்கள் கெஜட் பதிவு பெறாத ஊழியர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோர் முறையே சென்னைக் கல்வித்துறைப் பணிவர்க்கம், சென்னைக்

24th January 1964]

கல்வித்துறைக் கீழ்ப்பணிவர்க்கம், பொருத்தமான மாநில அரசாங்கப் பணிவர்க்கங்கள் இவற்றில் 1960-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ந் தேதி முதற்கொண்டே நியமிக்கப்பட்டுவிட்டனர்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

District Munsiff, Hosur (Criminal powers)

13 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the District Munsiff, Hosur in Salem district is vested with Criminal powers also; and

(*b*) If so, whether there is any proposal before the Government to extend it to all the District Munsiffs in the State?

A.—(*a*) Yes Sir.

(*b*) No Sir. The system of investing the District Munsiffs with Magisterial powers is an exceptional feature and is adopted only in specially suitable areas where neither the civil work nor the criminal work warrants the establishment of a separate Court for itself. The system now exists at Sattur, Srivilliputhur, Shencottah, Tiruthani, Hosur and Turaiyur. The Government have also recently sanctioned this system at Gudalur in the Nilgiris district.

(அ) ஆம்.

(இ) இல்லை. ஜில்லா முனிசீப்புகளுக்கு மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் விசேஷ சந்தர்ப்பங்களில்தான் அளிக்கப்படுகிறது. எந்த இடங்களில் கிரிமினல் வேலையோ சிவில் வேலையோ தனிக் கோர்ட் அமைக்கும் அளவிற்குத் தேவையல்லவோ அத்தகைய விசேஷப் பகுதிகளில் மட்டுமே இந்த ஏற்பாடு அனுசரிக்கப்படுகிறது. இந்த ஏற்பாடு இப்போது சாத்தூர், ஸ்ரீவில்லியுத்தூர், செங்கோட்டை, திருத்தணி, ஹோசூர், துறையூர் ஆகிய இடங்களில் அனுசரிக்கப்படுகிறது. சமீபத்தில் (நீலகிரி ஜில்லா) கூடலூரிலும் இந்த ஏற்பாட்டிற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

State Transport

14 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the State Transport buses plying between Coimbatore and Madras are not stopped at Thoppur in Dharmapuri taluk during the past few months; and

(*b*) if so, whether the Government will issue orders to stop these buses at Thoppur as before since it is a place where the roads from Cuddalore, Coimbatore and Madras meet together.

A.—(*a*) Yes.

(*b*) The Government consider that there is no need to stop the buses at Thoppur as it is a very small village.

(அ) ஆம்.

(இ) தோப்பூர் மிகச் சிறிய கிராமமாதலால், பஸ்களை அங்கு நிறுத்த வேண்டியதில்லையென்று அரசாங்கம் கருதுகிறது.

[24th January 1964

Harijan Welfare (Housing Schemes)

15 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Home be pleased to state the number of Harijan colonies proposed to be constructed during the year 1963–64 in Dharmapuri taluk with details of their location.

A.—It is proposed to construct 10 houses for scheduled castes at Viruvachipuram village and 10 houses for denotified tribes at Seeniampatti village in Dharmapuri taluk for the year 1963–64.

1963–64-ம் ஆண்டில் தர்மபுரி தாலூகாவைச் சேர்ந்த விருவாச்சிபுரம் கிராமத்தில் ஹரிஜனங்களுக்காக 10 வீடுகளும், பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட சாதியினர்களுக்காக சீனியம்பட்டி கிராமத்தில் 10 வீடுகளும் கட்ட உத்தேசித்துள்ளது.

Dharmapuri panchayat (upgrading of)

16 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to upgrade the Dharmapuri Panchayat in Salem district as a Municipality?

A.—Yes. There is a proposal to constitute a Municipality for Dharmapuri panchayat.

ஆம். தர்மபுரி பஞ்சாயத்தை, நகராட்சி மன்றமாக அமைக்க திட்டம் இருக்கிறது.

New Industries (Ramanathapuram district)

17 *Q.*—SRI K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether there is any proposal to start either a textile mill or an oil mill in Ramanathapuram district during 1963; and

(*b*) the steps taken to improve the handloom industry in Ramanathapuram district in 1963?

A.—(*a*) The Government have no proposal to set up in the public sector any textile mill or oil mill in Ramanathapuram district; Government have no information about the action if any taken in the Private Sector.

(*b*) As in all other districts, schemes relating to rebate on sales, propaganda and research on improved techniques are already in force in the Ramanathapuram district for the benefit of the weavers. In particular, the Government have sanctioned loans and grants for the construction of 350 houses for the members of Emaenswaram, Aruppukottai and Srivilliputhur Weavers' Co-operative Societies. Three other weavers' co-operatives have been admitted to the scheme for Contributory Thrift Fund for weavers.

(அ) ராமனுசபுரம் ஜில்லாவில் பஞ்சாலேயோ அல்லது எண்ணெய் மில்லோ நிறுவுவதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லே. தனியார் துறையில் இத்தகைய திட்டம் உண்டா என்பதைப் பற்றி சர்க்காரிடம் தகவல் இலலே.

(இ) நெசவாளர் நலனுக்காக பிரசாரம், தள்ளுபடி திட்டம் ஆராய்ச்சியின் மூலம் தரத்தை உயர்த்தும் திட்டம் இவை மற்ற ஜில்லாக் களைப்போல் ராமனுதபுரம் ஜில்லாவிலும் அமுலில் இருக்கின்றன. குறிப்பாக

24th January 1964]

1963-ம் ஆண்டில் சுமார் 350 வீடுகள் கட்டுவதற்காக எமனேசுவரம், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவியும், மானியமும் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் மூன்று சங்கங்கள் உதவிப் பெறும் சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டிருக்கின்றன.

Registration offices (construction of waiting sheds)

18 Q.—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Information be pleased to state whether there is any proposal to construct waiting sheds for the convenience of the public at the Registration Offices in the State?

A.—Yes. The construction of party sheds in Government buildings is being carried out under a phased programme. It is not proposed to provide such party sheds in offices located in private buildings where the landlords are not agreeable to construct them at their cost.

ஆம். பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு வரும் கட்சிக்காரர்களுக்காக அரசாங்கக் கட்டிடங்களில் கொட்டகைகள் கட்டும் வேலை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தனியார் கட்டிடங்களில் பத்திரப் பதிவு அலுவலகங்கள் இருந்தால், அக் கட்டிடச் சொந்தக்காரர்கள் தங்கள் செலவில் அத்தகைய கொட்டகைகளைக் கட்டித் தர ஒப்புக் கொள்ளாவிட்டால் அங்கே அவற்றைக் கட்டித்தரும் உத்தேசம் இல்லை.

Procurement of rice

19 Q.—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Food be pleased to state how many tons of rice were purchased from rice millers during 1962–63 districtwise?

A.—1962–63-ம் வருடத்தில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியின் அளவு மாதவாரியாகவும் ஜில்லாவாரியாகவும் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Particulars of quantities of rice procured during 1962–63 (month and districtwise) are given in the following statement:—

District.	February 1963. (in tons)	March 1963. (in tons)	Total (in tons)
Chingleput ..	136	216	352
South Arcot ..	351	583	934
North Arcot ..	231	698	929
Thanjavur ..	2,479	2,376	4,855
Tiruchirappalli ..	1,442	2,585	4,027
Madurai ..	136	1,027	1,163
Ramanathapuram ..	..	263	263
Tirunelveli ..	358	1,174	1,532
Kanyakumari ..	60	96	156
Coimbatore ..	2,406	2,764	5,170
Salem ..	442	1,083	1,525
Madras ..	16	25	41
Total ..	**8,057**	**12,890**	**20,947**

[24th January 1964

Cycle Rickshaws (Tiruchirappalli town)

20 *Q.*—SRI **M. S. MANI :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் ஓட்டுவதற்கு **1962–63**-ல் எத்தனை சைக்கில் ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன.

(இ) ஓட்டுபவர் எத்தனை பேருக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன ?

A.—(அ) **400.**

(இ) **800.**

Old Age Pension

21 *Q.*—SRI K. NARAYANASWAMY PILLAI : Will the Hon'ble the Chief Miinster be pleased to state the number of Old Age Pensions sanctioned District-war in the year 1962-63.

A.—The information is given in the statement [a] placed on the Table of the House.

Hospital at Thittagudi (Number of patients treated)

22 *Q.*—SRI **K. NARAYANASWAMY PILLAI :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகா, திட்டக்குடி ஆஸ்பத்திரியில் **1961–62, 1962–63**-ல் எத்தனை நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யப்பட்டது ?

(இ) மேற்படி வருஷங்களில் வருஷ வாரியாக எவ்வளவு தொகைக்கு மருந்துகள் வழங்கப்பட்டன ?

(உ) மேற்கண்ட வருஷங்களில் எத்தனை போஸ்ட்மார்ட்டம் கேசுகள் பரிசோதிக்கப்பட்டன ?

A.—(*a*), (*b*) & (*c*) The required particulars are furnished in the attached statement [b].

(அ), (இ), (உ) கேட்டுள்ள விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—POINT OF INFORMATION *re* PURCHASE OF LORRIES BY THE MADRAS CORPORATION

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விஷயத்தைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமிருந்து தகவல் அறிய நான் விரும்புகிறேன். சென்னைக் கார்ப்பரேஷனில் கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபாய் செலவில் 50 லாரிகளை வாங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டு காண்ட்ராக்ட் நிறைவேறாமல் அதனால் ஏற்பட்ட பல குறைபாடுகளைப்பற்றிப் பல பத்திரிகைகளில் பலவிதமாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எந்த நோக்கத்திற்காகப் பணம் செலவழிக்கப்பட வேண்டுமோ, அதற்காக அந்தப் பணத்தைச் செலவழிப்பதற்கு வேண்டிய

Printed as Appendix III on page 108

b **Printed as Appendix IV on pages** 109

24th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதையும், மற்ற விவரங்களையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து வருகிறது. இன்னும் பரிசீலனை முடியவில்லை. பரிசீலனை முடிவதற்கு முன்பு வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் எழுந்தார்.

Mr. SPEAKER : The hon. Member cannot have a debate on a point of information.

III—CALLING ATTENTION TO THE NEED FOR GRANT OF RELIEF TO FLOOD-AFFECTED RYOTS IN THANJAVUR DISTRICT.

திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில், 1963 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த பெரு மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தல் பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, due to the heavy rains in November and December, 1963, damages were caused to the paddy crops and dwelling houses in the Thanjavur district. The Government have sanctioned the following relief measures to the affected ryots :—

(i) Distribution of seeds to enable the ryots to raise short-term paddy crop and grant of 50 per cent subsidy on the cost of the seeds.

(ii) Sanction of short-term spot loan of Rs. 75 per acre to the ryots for raising short-term paddy crops.

(iii) Grant of cash relief to the persons whose huts have been damaged.

Besides the above relief measures, remission of water-rate and land revenue will be granted to the affected ryots as per rules.

I may, therefore, inform the House that the Government have taken sufficient steps to give relief to the affected ryots.

IV—GOVERNMENT BILL.

THE MADRAS PREVENTION OF BEGGING (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964.

MR. SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964.'

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

V—NON-OFFICIAL BUSINESS.

(*a*) *Bills*.

1. THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) AMENDMENT BILL, 1964.

PULAVAR K. GOVINDAN: Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964.

The motion was duly seconded.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாதிரி மசோதாக்கள் உத்தியோகப் பற்றல்லாதவர்களால் கொண்டு வரும்போது "இண்ட்ரட்யூஸ்" பண்ணும் நிலையிலே அரசாங்கத்திற்கு அதிலே பிடித்தம் இல்லையென்றாலும் ஆட்சே பிப்பது இல்லையென்ற சம்பிரதாயம் இருக்கிறது. ஆகையால் இப்போது இதை ஆட்சேபிக்கவில்லை.

MR. SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964.'

The motion was put and carried, and leave was granted.

PULAVAR K. GOVINDAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

2. THE HINDU MARRIAGE (MADRAS AMENDMENT) BILL, 1964

SRI S. MADHAVAN: Mr. Speaker, Sir, I beg leave to introduce the Hindu Marriage (Madras Amendment) Bill, 1964.

The motion was duly seconded.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கட்டத்தில் நான் இதை ஆட்சேபிக்கவில்லை.

24th January 1964]

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Hindu Marriage (Madras Amendment) Bill, 1964.'

The motion was put and carried, and leave was granted.

SRI S. MADHAVAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(b) *Resolutions.*

(1) APPOINTMENT OF A COMMITEE TO REPORT ON THE REDUCTION OF PRICE AND PREVENTION OF BLACK-MARKETING AND ADULTERATION IN ESSENTIAL ARTICLES—*cont.*

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தின் நோக்கம் ஒரு நிபுணர் குழுவை அரசினர் நிறுவி, நம் நாட்டிலே அதிகரித்து வரக்கூடிய தொல்லைகள் இருக்கின்றனவே, உணவுப் பண்டங்களில் கலப்படம், மருந்துகளில் கலப்படம், இந்தக் கலப்படத்தோடு கள்ளமார்க்கெட், விலை உயர்வு இதனால் ஏற்படுகிற அமைதியற்ற தன்மை ஆகியவைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கண்டு ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும் என்பது தான். அதன் காரணமாக நான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து அன்று சில கருத்துக்களைக் கூறியிருக்கிறேன்.

விலைவாசி உயர்ந்து வருகின்றன, அதிகரித்து வருகின்றன என்பதற்கு நான் புதியதாக ஆதாரங்கள் எதுவும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. சர்க்கார் தரப்பில் இருந்து தயாரிக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கைகளில் இருக்கும் ஆதாரங்களே போதுமானவையாகும். அவைகள் ரொம்ப நிதானமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் ஆதாரங்கள். சர்க்கார் அறிக்கைகளில் எதையும் மிகைப்படுத்தியிருக்கமாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் நாட்டில் இத்துறையில் இருக்கும் உயர்வுகளைக் கொஞ்சம் குறைவாகவே, நிதானமாகவே தான் குறிப்பிட்டிருப்பார்கள். அந்தப் புள்ளி விவரங்களில் இருந்தே என்ன தெரிகிறது?

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை—இந்த இடைக்காலத்தில் பரிசீலனை செய்த குழு என்ன சொல்கிறது? திட்டக் கமிஷன் தன் அறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பது என்ன? 1963-ம் ஆண்டு எப்ரல் மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதத்திற்குள்ளாக இந்த ஐந்து மாத காலத்திற்குள் மட்டும் 17.7 சதவிகிதம் உணவுப் பொருள்களின் விலைகள் மட்டும் உயர்ந்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இரண்டாவது திட்ட காலத்தில் விலைவாசிகள் உயர்ந்தன. மூன்றாவது திட்ட காலத்திலும் கடந்த இரண்டாண்டுகளில் உயர்ந்திருக்கின்றன. அவற்றை விட்டாலும் கூட, இந்த மூன்றாவது

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th January 1964

திட்ட மூன்றுண்டு நிலேயில்—கடந்த ஐந்து மாத காலத்திற்குள் மட்டும் 17.7 சதவிகிதம் உணவுப் பண்டங்களின் விலேவாசி மட்டும் உயர்ந்திருக்கிறது. பொதுவாக எல்லாப் பொருள்களின் விலேகளும் அதிகரித்துக்கொண்டே தான் இருக்கின்றன. அவர்கள் அதைக் குறிப்பிட்டிக்கிருர்கள்.

It is a matter of continuing concern and further action may become necessary to arrest this trend. இந்தப் பிரச்சினே தொடர்ந்து கவலே அளிக்கக்கூடிய பிரச்சினே யாக இருக்கிறது. அதோடு இதைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கை தேவைப்படுகிறது என்று திட்டக் கமிஷன் தன்னுடைய இடைக்கால பரிசீலனேயில் ஊர்ஜிதம் செய்திருக்கிறது. இன்னும் அவர்கள் அத்யாவசிய உணவுப் பண்டங்களாகிய அரிசி, பருப்பு வகையரு, எண்ணே, சர்க்கரை ஆகியவற்றின் விலே அதிகரித்துக் கொண்டே போகிறது என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். நம்முடைய ராஜ்யத்திற்கும் இது விதிவிலக்கு அல்ல. இதே நிலேதான் நம்முடைய ராஜ்யத்திலும் பிரதிபலிக்கிறது.

சென்ற செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு அக்டோபர் வரையிலும் நம் ராஜ்யப் புள்ளிவிவரங்களும் இருக்கின்றன. டிசெம்பர், ஜனவரி அவ்வளவு சீக்கிரத்தில் கிடைக்காது. இவர்கள் மொத்தமாகப் புள்ளிகள் கொடுக்கிருர்கள். அக்டோபர் மாதத்தில் 489 புள்ளியாக இருந்தது நவம்பர் மாதத்தில் 494 புள்ளியாக அதிகரித்திருக்கிறது என்பது இவர்கள் கணக்கு. ஒரே மாதத்தில் ஐந்து புள்ளி அதிகரித்திருக்கிறது. அதாவது 1 சதவிகிதம். உணவுப் பகுதியை மட்டும் பார்த்தால் செப்டம்பர் 63-இல் 542-ஆக இருந்தது நவம்பர் 63-இல் 560 ஆக உயர்ந்திருக்கிறது. இது நம் இலாகா கொடுத்த புள்ளிவிவரங்கள் தான். மார்க்கெட்டில் இருக்கக் கூடிய விலேவாசியை அவர்கள் அப்படியே கொடுத்திருக்கிருர்கள் என்று நம்புவதற்கு இல்லே. அதுவும் இவர்கள் மொத்தமாக ஐந்து பிரிவுகளில் தான் புள்ளிவிவரங்கள் சேகரிக்கிருர்கள். உணவுப் பகுதி, எரிபொருள் விளக்கு போன்ற பகுதி, துணிமணி, வீட்டு வாடகை, இன்னும் இதர எல்லாம் என்று ஐந்து பிரிவுகளில் தான் சேகரிக்கிருர்கள். இந்த ஐந்து பகுதியிலே உணவுக்காக மட்டும் 65 சதவிகிதம் இருக்குமென்று இவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். எரிபொருள், விளக்கு வெளிச்சம் முதலியவற்றுக்காக 6 சத விகிதம் என்று குறித்திருக்கிருர்கள். துணிமணி சம்பந்தமாக 10 சத விகிதம். வீட்டுவாடகை சம்பந்தமாக 9 சதவிகிதம், இன்னும் மற்ற கல்வி, வைத்திய வசதி போன்ற எல்லாவற்றுக்கும் 10 சத விகிதம் என்று கொடுத்திருக்கிருர்கள். இன்று குறிப்பாக எடுத்துக் கொண்டால் 9 சதவிகிதம் வாடகையில் யாரும் வீடு எடுக்க முடியாது. அதோடு கொடுத்த வாடகைக்கும் ரசீது கொடுப்பது இல்லே. 30 ரூபாய் வாடகை பெற்றுக்கொண்டால் 20 ரூபாய்க்குத் தான் ரசீது கொடுப்பார்கள். ஆக இந்த 20 ரூபாய் வாடகை ரசீதை வைத்துக்கொண்டு இந்தக் கணக்கை இவர்கள்

கொடுத்திருக்கக் கூடும். ஆகவே உண்மையான வாழ்க்கையை—வாழ்க்கைச் செலவை எடுத்துப் பிரதிபலிப்பதாகக் கூட இந்த புள்ளிவிவரத்தைக் கொள்ள முடியாது. உண்மையான வாழ்க்கைச் செலவைவிடக் குறைவானதாகவே இது இருக்கும். அப்படி இருக்கிற இந்த அறிக்கையிலேயே உணவுப் பகுதி செலவு மட்டும் ஒரு மாதத்தில் 1 சத விகிதம் அதிகரித்திருப்பதைத் தெரிந்து கொள்கிறோம். கடந்த ஐந்து மாத காலத்திலே வாழ்க்கைச் செலவு எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். பொதுவாக மக்களிடத்திலே அதிருப்தி வளர்ந்துகொண்டே போகிறது. ஏற்கனவே இருக்கக்கூடிய அதிருப்திக்குத் தூபம் போடக்கூடாது என்று நான் சொன்னவுடனே, இவர்கள் மனதில் அதிருப்தி இருக்கலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். எனக்கு என்ன அதிருப்தி இருக்கிறது? அவர்கள் முதல் அமைச்சராக இருப்பது பிடிக்கவில்லையா? அவர்கள் அதிகாரத்தில் இருப்பது பிடிக்காத அதிருப்தி இருக்கிறதா? நாட்டில் இருக்கக்கூடிய உண்மையான நிலையைத்தான் எடுத்துக் காட்ட முன்வந்தேனேதவிர, ஏதோ நான் சொல்வதில் பொடி இருக்கிறது என்று இல்லாத பொடியைப் போட்டுப் பார்க்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு). இணைப்பு இல்லாமல் சாமான் உருவாவதில்லை. பல கொள்கைகளைச் சேர்த்துத்தான் ஒரு கொள்கை உருவாகிறது. விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது என்றால் கட்சிப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு நின்று இதைத் தீர்க்க முயலவேண்டும். அரசாங்கத்தின் கொள்கையை எதிர்க்க வேண்டுமென்பதற்காக நாங்கள் இந்தத் தகவல்களை சிருஷ்டிக்கவில்லை. திட்டக் கமிஷன் இதைப் பற்றி ரொம்பக் கவலையோடு பரிசீலனை செய்து இருந்திறது. தேசீய அபிவிருத்திக் கவுன்சிலில் நடந்த விவாதத்தைக்கூட கனம் அமைச்சர் அவர்கள் இங்கே சொல்வார்கள். இதற்கு எப்படிப் பரிகாரம்? தடுப்பு நடவடிக்கை தீவிரமாக எடுத்துக்கொள்ளப் படவேண்டும் என்று திட்டக் கமிஷன் கூறுகிறது. அந்த நடவடிக்கை எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைத்தான் சிந்திக்கவேண்டும்.

விலைவாசி உயர்வதனால் என்ன கஷ்டம் ஏற்படுகிறது. தொழிலாளர்கள், குமாஸ்தாக்கள், வாத்தியார்கள் இவர்களுடைய கஷ்டம் அதிகரிப்பதாக மட்டும் நான் சொல்லவில்லை. தேசத்தின் பொருளாதார பலம் காப்பாற்றப்படவேண்டும். உற்பத்தி பெருகவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன்தான் இந்த விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். விலைவாசி உயர்வினால் நம்முடைய திட்டங்களேகூட பாதிக்கப்படக்கூடும். இப்பொழுதே தொழில்துறையில் அமைதியின்மை வளர்ந்து வருகிறது. தொழிலாளர்களுடைய அமைதியின்மை வளர்ந்து வருகிறது. சம்பள உயர்வு, பஞ்சப்படி, வாடகை அலவன்சு என்று எல்லாத் துறைகளிலும் வேலை செய்பவர்கள் அதிகரிக்க வேண்டுமென்று கோருகிறார்கள். சென்னை எ கிளாஸ் நகரமாக்கவேண்டும்,

திருச்சி பி கிளாஸ், மதுரை பி கிளாஸ் என்று அலவன்சை அதிகப் படுத்திக்கொள்வதற்காக எழுந்த கோரிக்கைகளை நாம் அறிகிறோம். இப்படி பல துறைகளிலும் அமைதியற்ற தன்மையும், அதிருப்தியும் வளர்ந்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் கட்டுப்பாடற்ற முறையில் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போவதுதான்.

கவர்னர் உரையில் நான் கூறியதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது "ராஜாஜி கருத்துக்களை ஏற்றுக் கொண்டால் என்ன தவறு?" என்பதாகக் கேட்டார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த ராஜாஜி அவர்கள் விலைவாசி உயர்வைத் தடுப்பது பற்றி எடுத்துக்கொள்ளத்தக்க என்ன கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதைப் பற்றிய கருத்துக்குத்தான் நான் சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சரி, யார் சொன்னால் என்ன? அதை விட்டுவிடுகிறேன். கவர்னர் உரையில் விலைவாசி உயர்வைப் பற்றி கொடுத்திருக்கக்கூடிய விஷயத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறேன். இடைக்கால நடவடிக்கையாக நியாயவிலைக் கடைகளைத் திறப்பது, கூட்டுறவு மளிகைக் கடைகளைத் திறப்பது என்று சொன்னாலும் இவை தற்காலிக நடவடிக்கைதான் என்பதை கவர்னர் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதுதான் சரியான வழியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

9–30 a.m. அதை யாரும் மறுக்க முடியாது. அது எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய உண்மை. உற்பத்தி பெருகாமல் எந்த நாடும் சுபிட்சமாக இருக்க முடியாது. முதல் அமைச்சர் அவர்கள் கவர்னர் உரைமீது நடந்த விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது சொன்ன உண்மையை இதில் சேர்க்காவிட்டாலும் அதை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். விலைவாசி உயர்வைத் தடுப்பது அரசாங்கத்திற்கு சாத்தியமா இல்லையா? தனிப்பட்டவர்களுக்கு சாத்தியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசாங்கத்திற்கு இது சாத்தியமா இல்லையா? அரசாங்கத்திற்கு இது சாத்தியமே. அரசாங்கத்தினால் இதை அடக்க முடியும் என்பது என் அபிப்பிராயம். எப்படி என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பதில் இரண்டு வித அபிப்பிராயத்திற்கு இடமிருக்க முடியாது. இடைத் தரகர்களை சரியானபடி கட்டுப்படுத்தினால், அவர்கள் தலையிடாமல் பார்த்துக் கொண்டால் கட்டாயம் பரிகாரம் ஏற்படும். கம்யூனிஸ்ட் கட்சி சித்தாந்தத்தின் பேரில் நான் இதைச் சொல்கிறேன் என்றல்ல. தனியாரை ஒழிக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் நான் இதைச் சொல்லவில்லை. நாட்டில் ஏற்பட்டிருக்கும் உற்பத்திப் பெருக்கத்தின் பலன்

24th January 1964] [திரு மீ. கலியாணசுந்தரம்]

மக்களுக்கு கிடைக்க வேண்டுமா? இல்லையா? மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய விளைபொருள்கள் உற்பத்தி போட்ட இலக்குப்படி நிறைவேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. நம் முதல் அமைச்சர் அவர்கள், நம் ராஜ்யத்தில் 5 லட்சம் டன் கூடுதலாகவே கிடைக்கும். ஆகவே இலக்கு நிறை வேறி விடும், நம் ராஜ்யத் தேவை போக வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிற நிலை ஏற்படும் என்று சொன்னார்கள். தேசத்தின் நிலையைப் பார்க்கும்போது நாம் அவ்வளவு மகிழ்ச்சி அடையக் கூடிய நிலையில் இல்லை. தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தின் அறிக்கையில் என்ன கூறியிருக்கிறது? மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உற்பத்தியில் 30 லட்சத்திலிருந்து 50 லட்சம் டன் வரை நாம் போட்ட இலக்குக்கு குறைவாகத்தான் பூர்த்தி அடையும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது அகில இந்தியப் பிரச்னை. 50 லட்சம் டன் வரை நம் இலக்கிற்கு பற்றுக் குறை ஏற்படும், துண்டு விழும் என்று தேசிய அபிவிருத்தி கவுன்சில் அறிக்கை கூறுகிறது. இது ஒரு ராஜ்யம் சம்பந்தப்பட்ட பிரச்னை அல்ல, அகில இந்தியப் பிரச்னை. நம் ராஜ்யத்தில் 5 லட்சம் அதிகப்படியாக விளைச்சல் ஏற்பட்டு விட்டதால் பிரச்னை தீர்ந்து விடாது. இந்த அபாயம், இப்பிரச்னை தொடர்ந்து நீடிக்கும் பிரச்னையாகவே இருக்கப் போகிறது. பல ஆண்டுகளுக்கு இப்படி இருக்கப் போகிறது. ஆகவே அரசாங்கம் தன் அதிகாரத்தை உபயோகித்து தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதைத்தான் நாங்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம், இப்போதும் வற்புறுத்துகிறோம். அத்தியா வசியப் பண்டங்களின் மொத்த வியாபாரத்தையாவது அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். அரிசி மில்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறபோது இயந்திரங்கள், கட்டடங்கள் முதலியவற்றை விலைக்கு வாங்க வேண்டுமென்று சொன்னதாக அமைச்சர் அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். மில்காரர்கள் நிலத்தை, மில்லை அவர்கள் வைத்துக் கொள்ளட்டும். லைசென்ஸ் வேண்டுமானால் கொடுங்கள். கொள்முதல் செய்து வேக வைத்து அறைக்க கூலி கொடுங்கள், அதை எடுத்து நியாயமான விலைக்கு விற்பனை செய்யுங்கள். அப்போதுதான் விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படும். விவசாயிகளுக்கு நியாயமான விலை அளிக்க வேண்டும். விவசாயி, தான் உற்பத்தி செய்வதற்கு தக்க விலை கிடைக்கும், நியாயமான விலை கிடைக்கும் என்ற உற்சாகத்தில் விவசாயி விவசாயத்தில் ஈடுபட்டால்தான் உற்பத்தி பெருக முடியும். அந் நிலை இங்கில்லை. பொது மக்களுக்காவது நியாயமான விலையில் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. பொது மக்களும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது, விவசாயிகளுக் கும் குறைந்த விலைதான் கிடைக்கிறது. ஆக இரு தரப்பினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மில்லை எடுக்க வேண்டு மென்று சொல்லும்போது அங்கு என்ன இயந்திரம் இருக்கப்

போகிறது? பஸ் ரூட்டுகளை எடுக்கவேண்டுமென்று சொன்னால் அந்த பஸ்களை வாங்குவதினால் என்ன பயன்? அரிசி மில் சொந்தக்காரர்கள், டாட்டா, பிர்லா போன்ற பெரிய முதலாளிகள் அல்ல, அவர்கள் மேல் எனக்கு ஆத்திரம் இல்லை. உணவுப் பண்ட வியாபாரம் சமுதாயத்திற்கு விரோதமான முறையில் போய்க் கொண்டிருக்கிறது. விவசாயிகளும், பொது மக்களும் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். நிலக்கடலை, வர்த்தக விவசாயப் பொருள்கள் மார்கட்டிங் ஆக்ட் கீழ் வரக் கூடியது. எல்லாயிடங்களுக்கும் அது விஸ்தரிக்கப்பட வேண்டும். திருச்சியில் ஆலங்குடி தாலூகாவிற்கு விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. எவ்வளவு பேர்கள் அதனால் பலன் அடைகிறார்கள் என்று பரிசீலனை செய்யட்டும். மார்கட்டிங் கமிட்டிக்குப் போக முடியவில்லை. ரகசியமாகவே வியாபாரிகளிடம் விற்று வருகிறார் கள். ஏற்கனவே பட்ட கடனுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. மொத்த வியாபாரம் ஒரு சிலரிடம் இருக்கும்போது விவசாயி களுக்கு எப்படி நியாய விலை கிடைப்பது சாத்தியம்? தஞ்சை ஜில்லாவில் அறுவடை காலத்தில் விலை குறைகிறது. மற்ற காலங் களில் விலை அதிகரிக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு என்ன லாபம்? மக்களுக்கு அதிக விலையில் உணவு தான்யங்கள் விற்கப் படுகிறது. அதனால் விவசாயிகள் பலன் அடைகிறார்களா? அல்லது இடையில் உள்ளவர்கள் பலன் அடைகிறார்களா? அப்படி விவசாயிகள் பலன் அடைவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்ல மாட்டார்கள். இடைத் தரகர்கள் இருப்பதினால்தான் விவசாயிகளுக்கு குறைந்த விலை கிடைக்கிறது. ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்கு நியாயமான விலை வைத்து கொள் முதல் செய்யலாம். அப்படி அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் அதனால் கொடுமை ஏற்படாதா? கஷ்டம் ஏற் படாதா? என்று சொல்லுகிறார்கள். இப்போது மட்டும் என்ன? அவர்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள்? விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்றுத்தான் ஆக வேண்டும். இப்போது மகிமைப் பணம் பிடிக்கப்படுகிறது, முன் பணத்திற்கு அதிகப்படியான வட்டி எடுக்கப்படுகிறது. ஆகவே அரசாங்கம் கொள்முதல் செய்தால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுமேதவிர பாதகம் ஏற்படாது. ஆகவே இது குறித்து அமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு உண்மையை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதற்காக நான் நன்றி செலுத்துகிறேன். இடையில் உள்ளவர்களை ஒழித்தாக வேண்டும், அவர்களை கட்டுப்படுத்தியாக வேண்டும், எவ்வாறு செய்வது என்பதுதான் ஆலோசனையில் இருக்கிறது, நிதானமாகத் தான் போகவேண்டுமென்று சொன்னார்கள். நிதானமாகவே நடவடிக்கைகள் எடுக்கட்டும். ஆனால் உறுதியான நட வடிக்கைகள் எடுக்க வேண்டும். இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டும். ஆள்களை அல்ல, அவர்களது உரிமையை அல்ல. அவர் களுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டால் அதற்காக இரக்கம் காட்டக்

24th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கூடாது. மது விலக்கு அவசியம் என்று கருதினோம். அதற்காக சட்டம் இயற்றியிருக்கிறோம். அதனால் பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்தப் பட்ட காண்ட்ராக்டர்கள் தொழில் போய் விட்டது. அத்தொழி லில் ஈடுபட்டிருந்த மரமேறிகள் பிழைப்பு போய் விட்டது. இந்த ஒரு காரணத்திற்காக மதுவிலக்கை கைவிட்டு விட்டு கள்ளுக் கடையை திறக்கவேண்டுமென்று யாராவது சொல்கிறோமா? ஒரு சிலருக்கு கஷ்டம் ஏற்படுவதால் அதை விட்டு விடுவதில்லை. உழைக்கும் மக்களுக்கு உணவு போடுங்கள் என்று கேட்கிறார்கள். உழைப்பதற்கு, உணவு வேண்டாமா? அதற்காகத்தான் சீர் திருத்தம். 4,000 பேர்கள் சிறிது பாதிக்கப்பட்டால், 3 கோடி மக்கள் வாழ அந்த 4,000 பேர்களுக்கு கஷ்டம் ஏற்படட்டும். யாரும் அதற்காக மனத்தாங்கல் கொள்ள முடியாது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதை மனதில் வைத்து தக்க முறையில் பரிசீலனை செய்து துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப் பிரச்னை சம்பந்தமாக இன்னும் காலம் கடத்திக் கொண்டு போனால் மக்களுக்கு அதிருப்திதான் ஏற்படும். அதனால் திட்ட வெற்றியின் அஸ்திவாரத்திற்கே ஆட்டம் கண்டு விடும். விவசாய சங்கங்கள்மீதோ அல்லது அவற்றை நடத்துகிறவர்கள் மீதோ அல்லது உழைக்கக்கூடிய மக்களின் தலைவர்கள்மீதோ ஆத்திரப்பட்டு பயன் இல்லை. அவர்களை எப்படி அடக்குவது, எப்படி ஒடுக்குவது, என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்று ஆலோசிப்பது பலன் அளிக்காது. உற்பத்தி பெருக வேண்டும். அதற்காக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

MR. SPEAKER: How is a committee necessary? The hon. Member may come to that point.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கமிட்டி அவசியம் என்பதுதான். அதற்காகத்தான் இந்தக் காரணங்களை சொல்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் சந்தேகத்தில் இருக்கிறார்கள். ஆகவே நிபுணர்கள் கமிட்டி ஒன்று போட்டு ஆலோசனை செய்து அவர்கள் யோசனையை இங்கு வைத்து விவாதம் நடத்த வேண்டுமென்று சொல்கிறேன்.

MR. SPEAKER: The hon. member seems to be going into all details.

திரு. மீ. கலியாணசுந்தரம்: செய்யவேண்டுமென்ற நல் லெண்ணம் இருக்கலாம், அவர்களுடைய நல்லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. நாட்டில் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை இது. இது அவசியம் என்கின்ற மனப்பான்மையை மக்களிடத்தில் தயார் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண் டிருக்கிறார்கள் அல்லவா? இதில் அமைச்சர்களுக்கு மட்டும்

மனப்பான்மை இருந்தால் போதாது. ஆகவேதான் இதைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு கமிட்டியை அமைக்கவேண்டும், அதன் மூலமாக

MR. SPEAKER: The point is whether a committee is necessary or not? The hon. member seems to be going into all the details and every aspect of the matter.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அதன் மூலமாக விலைவாசியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும், நாம் எல்லோரும் சொல்லுகின்ற கருத்துக்களைவிட, சம்பந்தப்பட்ட நிபுணர்கள் கருத்துக்களை தெரிவித்தால், அதை வைத்துக்கொண்டு, விலைவாசிகளை எப்படி கட்டுப்படுத்துவது, எப்படி சமாளிப்பது என்கின்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவேதான் இதை சொல்லுகின்றோம், மக்களிடையிலும் இதற்கான பிரச்சாரத்தை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது, அதற்கும் சில விவரங்களை நாம் தெரிவித்தாக வேண்டியிருக்கிறது. அப்படி தெரிவிக்கின்ற முறையில்தான் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறேன். அதே நேரத்தில் இம்மாதிரியான ஒரு கமிட்டி அமைப்பதின் மூலமாக, அதனுடைய சிபாரிசுகளை வைத்துக் கொண்டு, அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்கும் வசதியாக இருக்கும். கமிட்டி போடுவதனால் மட்டும் விலைவாசி குறைந்து விடும், அல்லது இதிலுள்ள ஆபத்து போய்விடும் என்று சொல்லவில்லை. இதிலுள்ள அபாயத்தை போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்கு இந்தக் கமிட்டியினுடைய சிபாரிசுகள் உபயோகப்படும் என்பதினால்தான் இதை நான் வற்புறுத்துகின்றேன். அதற்காக நான் விவரங்களை கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இதை அரசாங்கம் அறிவதன் மூலமாகவும் இந்தச்சபை அதைப்பற்றி விவாதிப்பதின் மூலமாகவும் மக்களுக்கு இதைப்பற்றிய ஒரு ஆறுதல் ஏற்படும், வேண்டுமென்றால் இதற்கு விரோதமாக இருக்கக்கூடியவர்களுக்கு இது வேண்டாம் என்று தோன்றலாம், அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை, ஆனால் இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு இது மிகப்பெரிய ஆறுதலாக இருக்கும் என்ற எண்ணத்துடன்தான் இதைப்பற்றி இங்கு விவாதிக்கிறோமே தவிர எந்தவிதமான விளம்பாத்திற்காகவோ அல்லது வேறு எதற்காகவும் இல்லை என்பதை கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I am not against what the hon. Member is saying. I hope the Government will agree with all good suggestions. But the only point here is whether a committee is necessary.

திரு. மீ. கலியாணசுந்தரம்: வேண்டுமென்றால் நான் சபையினுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளவில்லை. அதற்காக முக்கியமான கருத்துக்களை சொல்லாமல் இருப்பதில்

எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. பல அங்கத்தினர்களும் இதன் மீது பேசவேண்டியிருக்கிறது, மேலும் பல தீர்மானங்கள் இருக்கின்றன. பொதுவாக பேசக்கூடிய எல்லா அங்கத்தினர் களுக்குமே இதில் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். ஆகவே நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் இரண்டொரு விஷயங்களை மட்டும் கூறிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக (அடல்ட்ரேஷன்) கலப்படத்தைப்பற்றிக்கூற விரும்புகிறேன். இது எவ்வளவு பாதகமானது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இது இப்போது எந்த அளவுக்கு பரவி வருகிறது என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். சில அதிகாரிகள் கூட, இதில் என்ன ஆபத்து இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு கலப்படம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். சாதத்தோடு சுண்ணும்பு சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்ன தற்கு இது சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் "இதனுல் என்ன, கால்ஷியம் தானே சுண்ணும்பில் இருக்கிறது" என்று சொன்ன தாக செய்தி வந்தது. சுண்ணும்பு கால்ஷியத்திற்கான பலனைக் கொடுக்கிறது என்று அந்த அதிகாரி கூறுகிறுர் என்றுல் அந்த அதிகாரியை உட்காரவைத்து சாதத்தையும் சுண்ணும்பையும் கலந்து வைத்துத்தான் கொஞ்சம் சாப்பிடச் சொல்ல வேண்டும் காய்கறி எதுவுமில்லாமல். அதிகாரிகளிடம் இந்த அளவுக்கு கலப்படத்தைப்பற்றி அறிந்து கொள்ளுகின்ற அல்லது அதிலுள்ள அபாயத்தை அறிந்து கொள்வதற்கான உணர்ச்சி அந்த அளவுக்கு மழுங்கிப் போய்விட்டது. கலப்படத்திற்கு எதிரான உணர்ச்சியை மக்களிடத்தில் தட்டி எழுப்ப வேண்டியது மிக அவசியம். ஹோட்டல்களில் அதிகமான சாதத்தை சாப்பிடக்கூடாது, சாதத் தின் மீது வெறுப்பை ஏற்படுத்தவேண்டும் என்கின்ற அளவில், போடுகிறுர்கள், சரியாகப் போட்டால் நஷ்டம் வந்து விடும் என்ற எண்ணத்தில் ஹோட்டல்காரர்கள் சுண்ணும்பு சேர்க்கிறுர்கள். இதற்கு வக்காலத்து வாங்கக்கூடிய முறையில் இதைப்பற்றி கண்டுபிடிக்கவேண்டிய அதிகாரியே, 'இதில் என்ன கால்ஷியம் தானே இருக்கிறது, அதனுல் பாதகம் ஒன்றும் இல்லை' என்று சொல்லுவதானது, இனிமேலும் எல்லா ஹோட்டல்களிலும் சுண்ணும்பை கலந்து சாதத்தை பரிமாறுங்கள் என்று சர்டிபிக் கேட் கொடுப்பதுபோல் இருக்கிறது. எந்த அளவுக்குக் கலப்படம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த சபையின் கவனத் திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சாதாரணமாக பாலில் தண்ணீர் கலந்தால்கூட, அதற்கு நாம் கடுமையாக தண்டனை கொடுக்கிறோம், பாலில் தண்ணீர் சேர்ப்பதுகூட, உடலுக்கு எந்தவிதமான கெடுதியும் வந்துவிடுவதில்லை. பணத்திற்குத் தான் நஷ்டம், இதனுல் இதை செய்யலாம் என்று நான் சொல்ல வரவில்லை. இதற்கே நாம் கடுமையான தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றுல் நிச்சயமாக உணவுப்பொருட்கள்,

மருந்துகள் இவற்றேடு கலப்படம் செய்வது என்பது—உயிரே போகக்கூடிய நிலையிலுள்ளது—கொஞ்சமும் அனுமதிக்க முடியாத குற்றம் என்பதை நாம் உணர வேண்டும். இதற்கு கடுமையான தண்டனை இருக்கவேண்டும். தண்டனை கொடுப்பது என்றால் அதற்குரிய சட்டத்தை நாம் ஏற்படுத்தவேண்டும். அதோடு சட்டத்தை அமலாக்குகின்ற மனப்பான்மை இருக்கவேண்டும், சட்டம் இருந்தும் அதற்குரிய மனப்பான்மை இல்லாவிட்டால் பிரயோசனமில்லை. அதேபோல் மனப்பான்மை இருந்து சட்டம் இல்லாவிட்டாலும் பிரயோசனமில்லை. பொதுவாக நாட்டி லுள்ள மக்களுக்கு இதனால் எத்தனையோ கஷ்டங்கள், நஷ்டங் கள் ஏற்படுகின்றன. வேண்டுமென்றால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு இது லாபகரமாய் இருக்குமே— நாட்டிலுள்ள மக்கள் மிகவும் வெறுக்கிறார்கள். நான் ஆசுபத்திரியில் இருந்த சமயத்தில் மருந்துகளின் தரங்கள் மிகவும் குறைந்துவிட்டன. அதே நேரத்தில் விலையும் ஏறிக்கொண்டேயிருக்கிறது. எந்த மருந்தையும் நம்பி வாங்கி உபயோகிக்க முடிவதில்லை என்று அங்குள்ள அதிகாரிகளே சொல்லு கிறார்கள். மக்களுக்கு அவசியமான மருந்துகள், உணவுப் பண்டங்கள் இவைகள் எல்லாம் தரக்குறைவாக இருக்குமானால், எப்படி மக்கள் வளர்ச்சி அடைய முடியும். எப்படி நாடு வளர்ச்சி அடைய முடியும். எப்படி தேசத்தினுடைய பலன்களை எல்லாம் மக்கள் பெற முடியும். நாம் தேசத்தைப் பலப்படுத்தவேண்டும், நமது சக்தியை பலப்படுத்தவேண்டும் என்றெல்லாம் சொல்லு கிறோம், அதற்கான தார்மீகப்பலத்தை எப்படி மக்கள் பெறு வார்கள், மக்கள் உழைக்கிறார்கள் என்றால், அவர்கள் தாங்கள் உழைக்கின்ற உழைப்பின் பலன் தங்களுக்கு வரும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவேண்டும். அதல்லாமல் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திவிடுவதாலோ, அல்லது பஞ்சப்படியை உயர்த்திவிடுவதாலோ, மக்களுடைய கஷ்டங்கள் தீர்ந்துவிடும் என்று நான் சொல்லவில்லை. வெறும் நோட்டை மட்டும் அச்சடித் துக் கொடுத்துவிட்டால் போதும் என்றும் நான் சொல்ல வரவில்லை. ஆனால் விலைவாசி ஒரே நிலையில் இருக்கவேண்டும், அதற்கான நடவடிக்கைகளில் எந்த அரசாங்கமும் ஈடுபடவேண்டும். விலை வாசியை தரப்படுத்தி மக்களுடைய ஆரோக்கியத்தை எப்படி பாதுகாப்பது என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். இதற்காக செலவு செய்வதை ஒரு செலவாக எண்ணக்கூடாது, வைத்தியச் செலவுக்காக, நாம் வசதிகளை பெருக்கிக்கொள்ள தவறுவதில்லை. பொதுவாக ஜனங்களுடைய சுகாதாரத்தை பாது காப்பதற்காக எந்த செலவையும் செய்வதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். கனம் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் தவறிப் போய் ஓர் நல்ல யோசனையைச் சொன்னார்கள் . . .

கனம் சபாநாயகர் : அப்படிச் சொல்வது கனம் அங்கத்தினரை குறை சொல்வதாக அமையாதா ?

24th January 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: தவறிப்போய் சொன்னார்கள் என்று சொன்னது, அவர் அபூர்வமாக ஒரு யோசனையை சொன்னார்கள் என்ற முறையில் தான் சொல்லுகிறேன் . . .

கனம் சபாநாயகர்: அப்படி வேண்டுமென்றால் சொல்லலாம். அவர் மீது கெட்ட எண்ணம் வரும்படியாக சொல்லக்கூடாது . . .

திரு. மீ. கலியாணசுந்தரம்: அவர் மீது எனக்கு எந்தவிதமான கெட்ட எண்ணமும் கிடையாது . . .

கனம் சபாநாயகர்: கெட்ட எண்ணம் இல்லையென்றாலும் கனம் அங்கத்தினர் சொன்னது அவ்விதம் தோன்றுகிறது. அதனால் தான் அவ்விதம் சொல்லவேண்டாம் என்று சொன்னேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திரு. சுவாமிநாதன் அவர்கள் மக்களுடைய சுகாதாரத்தை பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு 'சப்ஸிடி' கொடுத்தால் என்ன என்று கேட்டார்கள். தொடர்ந்து சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அதைப் பற்றி இன்னும் சொல்லியிருப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் 'சப்ஸிடி' எல்லாவற்றிற்கும் கொடுத்துக் கொண்டிருந்தால், அது எங்கே கொண்டுபோய் நிற்கும் என்று சொல்ல முடியாது என்று சொன்னார்கள். அது சரியல்ல, தேசத்தின் உற்பத்தியை பெருக்குவதற்கு செலவு ஏற்படுகிறது என்றால், அது அவசியமான செலவுதான், ஆசுபத்திரி கட்டிடம் கட்டவேண்டுமென்றாலோ, அல்லது குடிதண்ணீர் வசதி, சாக்கடை வசதி இவைகள் எல்லாம் எவ்வளவு முக்கியமோ அதே போன்று தான் மக்களுடைய ஆரோக்கியத்தை பாதுகாக்கின்ற முறையில் செலவு செய்வது எல்லாம் அவசியமான செலவுகள்தான். நகரத்தை எடுத்துக்கொண்டால், கொசுவின் தொந்தரவு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது, சபாநாயகர் அவர்களுக்கோ, அல்லது அமைச்சர்களுக்கோ இந்த தொந்தரவு இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் சட்டசபை ஹாஸ்டலில் அங்கத்தினர்கள் இருந்து தங்களுடைய வேலைகளைகூட கவனிக்க முடியாத அளவுக்கு அவ்வளவு கொசு தொந்தரவு இருக்கிறது. கொசுவுக்கு கொடுக்கின்ற ரத்தத்திற்காவது நாம் அதிகமாக ரத்தத்தைப் பெருக்கிக்கொள்ள சாப்பிட வேண்டியிருக்கிறது . . .

கனம் சபாநாயகர்: சபாநாயகரையும் கொசு மதிப்பதில்லை . . . (சிரிப்பு)

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த சபையில் இருந்தால் கொசுவின் மீது குற்றம் சுமத்தலாம், சபைக்கு வெளியேயிருப்பதால் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆகவே மக்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி அரசாங்கம் நன்கு கவனம் செலுத்தவேண்டும். இதற்காகின்ற செலவு தவிர்க்க முடியாத செலவுதான். ஆகவே

சப்ஸிடி முறையில் கொடுத்தால் நஷ்டம் ஏற்பட்டுவிடுமே என்று எண்ணவேண்டாம். வெறும் லாப நஷ்ட நோக்கத்துடன் பாராமல் இதை செய்யவேண்டும். நஷ்டம் வந்துவிட்டால் பட்ஜெட்டில் துண்டு விழுந்துவிடுமே அதற்கு என்ன செய்வது என்று அமைச்சர்கள் யோசிப்பார்கள். அவ்விதம் யோசிக்க வேண்டிய தேவையில்லை. பஸ் போக்குவரத்தை எடுத்துகொண்டோம், அதுவும் தனியார் கையில் ஒரு பகுதியும், அரசாங்கத்தின் கையில் ஒரு பகுதியும் இருந்தும்கூட, அரசாங்கத்திற்கு லாபம் தான் கிடைக்கிறதே ஒழிய நஷ்டமில்லை. இதில் எந்தவிதமான லாப நஷ்டத்தையும் பார்ப்பதைவிட, தேசீய லாபம் என்ற அளவில், மக்களுக்கு இது ஒரு பெரிய ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடியது என்பது, தலை சிறந்த ஒரு லாபமாய் இருக்கும், ஆகவே அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, உற்பத்தியைப் பெருக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான தக்க யோசனையும் அரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால வேலைகளைப்பற்றி நாம் அடுத்தமாதம் இதே சபையில் விவாதிக்கப்போகிறோம், அப்போது சந்தர்ப்பம் கிடைக்கும், அந்த நேரத்தில் இதைப்பற்றி விரிவாக பேசலாம் என்று கருதுகிறேன். அதே சமயத்தில் நம்முடைய ராஜ்யம் எல்லா துறைகளிலும் முன்னேறியிருக்கிறது, என்கின்ற ஒரு சிறிய காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு, நம்முடைய ராஜ்யத்தை திட்டங்களிலிருந்து புறக்கணித்துவிடக் கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தேசம் பூராவும் ஒன்று சேர்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை, ஒரு ராஜ்யத்தில் மட்டும் செய்யக்கூடியது அல்ல. எல்லா சட்ட சபைகளிலும் இந்தமாதிரி விவாதம் நடந்து, மத்திய அரசாங்கத்திடம் நிர்ப்பந்தம் கொடுத்து, சரியான திட்டம் போட்டு, நாடு பூராவும் ஒரே மாதிரி விலைவாசி உயர்வு, கலப்படம், கள்ள மார்க்கெட் ஆகிய ஆபத்துகளிலிருந்து சமுதாயத்தைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கையாகக் கருதி இதை அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன் வணக்கம்.

* **திரு. இராம அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல அசைப்படுகிறேன். இந்தத் தீர்மானத்தில் இரண்டு பகுதிகளாக ஆக்கி அதை அவர்கள் தந்திருக்கிறார்கள். ஒன்று வாழ்வில் இன்றியமையாத பொருள்களின் விலையைக் குறைக்கவும், இன்னொன்று கலப்படத்தைத் தடுக்கவும் என்கின்ற இரண்டு விஷயங்களைக் குறித்து ஒரே தீர்மானமாக அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். வாழ்வதற்குத் தேவையான முக்கிய பொருள்கள் எப்படி நமது மக்களுடைய வாழ்க்கையெல்லாம் பாதித்துக்

கொண்டிருக்கின்றன என்பதையும் நாட்டிலே பெரிய பிரச்னை யாக உருவாகி வருகிறது என்பதனையும் நாம் எல்லோரும் நன்ருக உணர்ந்திருக்கிருேம். அப்படி உணர்ந்த காரணத்திஞல் தான் திராவிட முன்னேற்றக் கழகம், கடந்த ஆண்டிலேயே, இன்றைய தினம் கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தைப் போல ஒரு யோசனையை இங்கே வெளியிட்டது. விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன, அவைகளைப்பற்றி ஆராய்வதற்கும், அவைகளை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்று முடிவு எடுப்பதற்கும் சர்வ கட்சிகளைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தவேண்டுமென்று கடந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஒரு கருத்தை வெளியிட்டது. அந்தக் கருத்தினை ஆளும் கட்சியினர் ஏற்க மறுத்த காரணத்தினல்தான், இந்த சாதாரண யோசனை யைக்கூட ஏற்றுக்கொள்வதற்கு ஆளும் கட்சியினர் மறுக்கிருர்களே என்று அந்த அதிருப்தியைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த ஆண்டு விலைவாசிப் போராட்டத்திலே ஈடுபட்டு அதனுடைய ஒப்பற்ற தலைவர்களும், அதனுடைய உத்தமத் தொண்டர்களும், கிட்டத்தட்ட 5,000, 6,000 பேர்கள் 4 மாதம், 3 மாதம் என்கிற அளவுக்கு சிறைச்சாலைகளில் கிடந்த கொடுமையை நாம் எல்லோரும் நன்ருக அறிவோம். ஒரு சிலர் உயிரையும் இழந்தார்கள் சிறைச்சாலையிலே என்பது நாடு அறிந்த ஒன்று. அதைக் கவனம் ஊட்டுவது போல், தீர்மான உருவத்தில் கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிருர். இப்படிப்பட்ட கமிட்டிகளை நியமிக்க அவர்கள் கூறுவதுகூட, 'அறிக்கையை சமர்ப்பிக்க குழு ஒன்றை நியமித்தல்' என்றுதான் கொடுத்திருக்கிருர். அறிக்கையைச் சமர்ப்பிக்க குழு ஒன்றை அமைப்பதில் அரசாங்கம் எந்தவித ஆட்சேபணையும் சொல்லாது என்று நான் கருதுகிறேன். அறிக் கையை சமர்ப்பிக்க ஒரு குழு அமைப்பது என்று சொன்னல், அத்தகைய குழு சர்வ கட்சித் தலைவர்களும் அடங்கியதாகவும், பொருளாதார நிபுணர்கள் அடங்கியதாகவும், நாட்டு நலனில் அக்கறை கொண்ட பெரியவர்கள் அடங்கியதாகவும் உள்ள ஒரு குழுவை நியமித்து அந்தக் குழு 2-3 மாதங்களுக்குள் தன்னுடைய யோசனைகளைச் சொல்லவேண்டும் என்று காலவரையறை நிர்ண யித்து, அவர்கள் அதைப்பற்றி என்னதான் சொல்லுகிருர்கள் என்று பார்க்கலாம். அவர்கள் சொல்லுகிற யோசனை இந்த மன்றத்திற்கு ஒவ்வாததாக இருந்தால் தள்ளிவிடலாம். எது எதற்கோ குழுக்களை நியமிக்கிருேம். அந்தக் குழுக்கள் அந்தந்த காரியங்களைச் சரிவர செய்யவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிருேம். மத்திய அரசாங்கத்திலேகூட எத்தனையோ கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. மகலாநோபிஸ் கமிட்டி, நியோகி கமிட்டி என்று பல கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கிறதேயொழிய இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஆகியும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்று

கூறப்படுகிறது. அந்தமாதிரி இல்லாமல், எல்லா கட்சிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டால், நாட்டு நலனில் அக்கறை கொண்ட சகல தலைவர்களும், நிபுணர்களும் இருப்பதால், அவர்கள் இந்தப் பிரச்னைக்கு வழிவகை காண ஏதாவது யோசனை சொல்ல லாம். அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அவர் களுடைய யோசனைகளை ஏற்றுக்கொள்வதை ஆளும் கட்சியின ருக்கும் இந்த மன்றத்தின் விருப்புக்கும் விட்டு விடலாம். இந்த சாதாரண, மிகவும் முக்கியமான இந்தத் தீர்மானத்தை ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்லி, இது நாம் கவனிக்கவேண்டிய பிரச்னை என்று சொல்லிக்கொள்கிறேன்.

உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றிகூட தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் அங்கத்தினர் எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும் நேரத்தில் விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள், அப்படிக் குறைத்தால் விவசாயி இன்றைய தினம் பெற்றுக்கொண்டிருக்கிற அந்த விலையைக் குறைக்கத்தான் ஏற்படும், அப்படி குறைத்தால் எப்படி விவசாயிகள் உற்பத்திப் பெருக்கத்தில் அக்கறை காட்டுவார்கள் என்று சொல்லப்படுகிறது. எனது தாழ்மையான யோசனை ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விலையை மூட்டை 19, 20 ரூபாய் என்று சொல்லுவதற்கு பதில் ஒரு விவசாயி 10 மூட்டை கொடுத்தால் 10 மூட்டைக்கு இவ்வளவு உபரித் தொகை கொடுக்கப்படும், 20 மூட்டை அதிகமாகக் கொடுத்தால் இவ்வளவு உபரித் தொகை கொடுக்கப்படும் என்று, முன்புகூட நம் மாநிலத்தில் கூப்பன் ஸிஸ்டம் இருந்ததே அதைப் போல கூப்பன்களை வழங்கி, உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் அதன் மூலமாக சர்க்கார் கஜானாக் களில் செலுத்தி பணத்தைப் பெறலாம் என்ற அளவுக்கு ஏதாவது ஒரு ஏற்பாட்டை செய்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அதே நேரத்திலே விலைவாசியையும் குறைக்க வழிவகை செய்யலாம் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த தீர்மானத்தை ஆதரிக்கிற வகையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வாழ்க்கையின் இன்றியமையாப் பொருள்களின் விலைகள் கவலைக்கு இடம் தருகிற வகையில் ஏறிக்கொண்டு வருகின்றன என்பதை இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள். மேன்மை தங்கிய கவர்னர் உரையிலே விலை வாசிகள் ஏறி வருகின்றன என்று அத்தகைய குறிப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. விலைவாசி ஏற்றத்திற்கான காரணங்களும் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அதோடுகூட ஆண்டுதோறும் வைக்கப்படுகிற நிதிநிலை அறிக்கைகளின் மீதான விவாதத்தின்

24th January 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

போதும், கவர்னர் உரையின் மீது நடைபெறுகிற விவாதத்தின் போதும் விலைவாசி உயர்வைப் பற்றிய அத்தகைய பிரச்னை மன்ற உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்படுகின்றன. பல்வேறு காரணங்களினால் விலைவாசிகள் உயர்ந்து செல்லுகின்றன என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. வரவும் உயருகிறது. செலவினங்களும் வர வர உயருகின்றது. வருவாய் உயருகிற அத்தகைய அளவைவிட, செலவினங்கள் உயருகிற அத்தகைய அளவு அதிகமாக ஆகும்போது அது அரசாங்கமாக இருந்தாலும், தனியாருக்கு அத்தகைய நிலைமை ஏற்பட்டாலும், முதல் போடுகிற நிலைமை நாட்டுக்கு ஏற்பட முடியாது. அந்த நிலைமையைச் சீர்படுத்தவேண்டுமென்றால் எந்த எந்தக் காரணங்களால் விலைகள் ஏறுகின்றன என்பதற்கு அடிப்படையாக எது அமைந்திருக்கிறது என்று கண்டறிந்து அதை நீக்க வேண்டிய அவசியம் உள்ளவர்களாக இருக்கிறோம். இன்றியமையாப் பொருள்களின் விலையைக் குறைக்கவும், பதுக்கி வைத்தல், கள்ளச் சந்தையில் ஈடுபடுதல், கலப்படம் செய்தல் ஆகிய குற்றங்கள் பெருவாரியாக நடைபெறுகின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இப்படிப்பட்ட குற்றங்கள் நாட்டிலே ஆங்காங்கு நடைபெற்று, ஏழை எளிய பாட்டாளி விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு அவைகள் வளர்ந்திருக்கின்றன. இதையெல்லாம் தீர்ப்பது எளிது அல்ல என்று நன்கு உணருகிறோம். இன்றியமையா பண்டங்களைத் திரட்டி மக்களுக்கு வழங்குவதில் ஈடுபட்டிருக்கிறவர் செய்யும் குற்றங்கள் காரணமாகத்தான் விலைவாசி உயருகிறது என்று ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பண்டங்களைத் திரட்டி வழங்குகிற பொறுப்பு அப்படிப்பட்ட தனிப்பட்டவர்களிடம் இல்லாமல் அரசாங்கமே அந்தப் பொறுப்பை ஏற்று அந்தக் குற்றங்கள் நடைபெறாமல் திறமையான முறையில் நிர்வகிக்கும் முறையில் ஏற்பாடுகளைச் செய்ய முயலவேண்டும். ஆகவே, உற்பத்தி ஆகிற பண்டங்களையும், மற்றவைகளையும் திரட்டி வைத்து மக்கள் தேவைக்கு பரிமாறப்படுவதில் இடையில் இருக்கிறவர்கள் குற்றங்கள் காரணமாக விலைகள் ஏறுகிற அத்தகைய நிலைமையைத் தடுத்தும், அத்தகைய பரிமாறுகிற பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டிய தன்மை அரசாங்கத்திடம் அமைகிறது. தனிப்பட்டவர்களிடத்தில் விட்டால் அதன் காரணமாக விலைவாசி ஏறுகிறது என்றால் அரசினர் அந்தப் பொறுப்பை ஏற்று, பொருள்களைத் திரட்டி வழங்குகிற முறையில் கள்ள மார்க்கெட் ஏற்படாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருள்கள் செல்லுகிறது என்ற அத்தகைய அளவுக்கு திறமையான முறையில் நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் அரசாங்கத்தால் ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடாத ஒன்றோ அல்லது அரசாங்கத்திற்கு தொல்லை தரக்கூடிய ஒன்றோ அல்ல. பல்வேறு நிலைமைகளை ஆராய்ந்து, நல்லதொரு முடிவு எடுக்க குழு அமைப்பது, அவர்களை ஆராயச் செய்வது, அவர்

களிடமிருந்து அறிக்கை பெறுவது, மன்றத்தில் வைத்து விவாதித்து முடிவு எடுப்பது என்கிற அத்தகைய நடைமுறையை நாம் கண்டிருக்கிறோம். இந்தத் தீர்மானம் ஒரு குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் எடுத்துத் தெரிவிக்கிறது. அந்தக் குழுவில் நாட்டினுடைய, அதுவும் இந்த மாநிலத்தினுடைய நிலைமைக்கு ஏற்ப என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். விலைவாசி நிலைமையைப் பொறுத்த வரையில், விலைவாசியைக் குறைப்பதன் காரணமாக கிராமத்திலுள்ள விவசாயிகளின் நிலைமை பாதிக்கப்படும், அப்படி பாதிக்கப்படாத வகையில் என்ன நடவடிக்கை கிராமத்தின் நிலைமையைப் பொறுத்து, நகரத்தின் நிலைமையைப் பொறுத்து எடுக்கவேண்டுமோ, அதற்குத் தக்க காரண காரியங்களைக் கண்டுபிடித்து, அதற்கு வழிவகை காணவேண்டியவர்களாக இருக்கிறோம். இருக்கிற நாட்டு நிலைமையை எடுத்துச் சொல்லுகிற அளவுக்கு சட்டமன்ற சர்வ கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அந்தக் குழுவில் இடம் பெறும் வகையிலும், நிலைமைகளை கேட்டறிந்து என்ன நடவடிக்கை எடுத்தால் தொல்லைகள், குறைபாடுகள் நீங்கும், இந்த விலைவாசி குறைவதற்கு வழிவகைகள் ஏற்படும் என்று கண்டறிந்து ஆலோசனைகள் கூறுவதற்கு நிபுணர்களும், அந்த நிபுணர்கள் கூறுகிற அத்தகைய ஆலோசனைகள் மீது தக்க நடவடிக்கை சாத்தியப்படுகிற நிலைமைகளைச் சொல்லுவதற்கு அதிகாரிகளைக் கொண்டதாகவும் இந்தக் குழு அமையுமானால், மிக பொருத்தமுடைய ஒன்றாக இருக்கும். நிலைமையைச் சொல்லுவதற்கு சட்டமன்ற சர்வகட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், அவர்கள் சொல்லுகிற நிலைமையை ஆராய்ந்து எந்த வகையிலே விலைவாசியைக் குறைக்கலாம் என்று கண்டறிவதற்கு வல்லுநர்களும், அவர்கள் கொடுக்கிற கருத்துக்களின் அடிப்படையில் நடைமுறையிலே நிர்வாகத்தை மேற்கொள்ள இயலுமா என்று கூற அதிகாரிகளும் அடங்கியதாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் நிலைமையை ஆராய்ந்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்து, அதை விவாதித்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முயலுவதில் தவறு ஒன்றுமில்லை. எனவே, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதின் மூலம் நல்ல சீர்நிலை பெறுவதற்கு வழி அமைவதாக இருக்கக்கூடும் என்ற முறையிலே இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இதை ஏகமனதாக ஏற்றுக்கொள்கிற முயற்சியில் ஈடுபட்டு, இதை ஏற்று நடைமுறைக்குக் கொண்டுவருகிற வகையில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் உட்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-00 a.m.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானம் ஒரு குழு அமைப்பது பற்றியது. குழு எதைப் பரிசீலனை செய்வது என்பது எல்லாம்கூட இதில் சேர்ந்தி

24th January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

ருக்கிறது. விலைவாசி உயர்வு ஒன்று, கலப்படம் மற்றொன்று, பதுக்கல் மூன்றாவது விஷயம், எல்லாவற்றையும் பரிசீலனை செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்பது தீர்மானம். பிரேரேபிக்கப்பட்ட தீர்மானத்தின்படி இதற்கு நிபுணர்கள் கொண்ட ஒரு கமிட்டி அமைக்க வேண்டும். ஆனால், கனம் உறுப்பினர் திரு. அரங்கண்ணல் கோரியது எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழு அமைக்கவேண்டும் என்பது. இரண்டும் சேர்ந்து இருக்க வேண்டும், நிபுணர்களும் இருக்க வேண்டும், கட்சிப் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும், எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும், கூட அதிகாரிகளும் இருக்க வேண்டும் என்பது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிற யோசனை.

விலைவாசி உயர்வுபற்றி யாரும் மறுக்கவில்லை. அரசாங்கத்தின் கருத்தை கவர்னர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். அதை இபபொழுதுதான் தெரிவித்திருக்கிறோம், இப்பொழுதுதான் உணர்ந்து விட்டோம், இப்பொழுதுதான் விழித்துக்கொண்டோம், அதற்கென்று ஒரு போராட்டம் நடத்திய பிறகுதான் நாங்கள் இதைப்பற்றி தெரிந்து கொண்டோம் என்று கூறுவதற்கு இடமில்லை. விலைவாசியைப்பற்றி எப்பொழுதும், தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். நான் முன்பு கூறியது போல, உணவுப் பண்டங்களின் விலைவாசி, அல்லது மற்ற பண்டங்களின் விலைவாசி உயர்வதற்கு பல காரணங்கள் உண்டு. பற்றாக்குறை ஒரு காரணம். நடுவிலே இருப்பவர்கள் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும், மக்களைச் சுரண்ட வேண்டும் என்று எண்ணுவது மற்றொரு காரணம். திட்டங்கள் நிறைவேற்றப்படுவது இன்னொரு காரணம். திட்டங்கள் நிறைவேற்றப்படுவதினாலே, வாங்கும் சக்தி பெருகி வருகிறது. அது மற்றொரு முக்கிய காரணம். அப்படி பல காரணங்கள் உண்டு. நான் முன்பு கூறியதுபோல, முன்பு திட்டக் குழு ஒரு நிபுணர்கள் குழு அமைத்தார்கள். அவர்கள் பல நாட்கள் இதைப்பற்றி ஆராய்ந்து, சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்துக்களைக் கொண்டு மேலும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்பதும் இப்பொழுது கவனத்தில் இருக்கிறது.

இந்த மாநில ஆட்சியைப் பொறுத்த மட்டில், இந்த விலைவாசி அக்கிரமமாக உயர்கிறதா, அப்படி உயர்கிறது என்றால், அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது, மொத்த விலை எப்படி இருக்கிறது, சில்லரை விலை எப்படி இருக்கிறது, எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது, அதிக வித்தியாசம் இருந்தால், அதை ஆராய்ந்து அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பது தொடர்ந்து இந்த மாநில ஆட்சியின் கவனத்தில் இருந்து வருகிறது. சிவில் சப்ளைஸ் இலாகா என்ற இலாகா இருக்கிறது. ஒரு போர்டு மெம்பர் சிவில் சப்ளைஸ் கமிஷனராக பணியாற்றிக் கொண்டு வருகிறார். அந்த சிவில் ஸப்ளைஸ் இலாகாவில் 'விஜிலன்ஸ் ஸெல்' ஒன்று இருக்கிறது. அவர்கள் இதைப்பற்றி தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார்கள்.

சில சமயங்களில் சம்பந்தம் இல்லாமல் விலையை உயர்த்துகிறார்கள். முன்பு நெருக்கடி நிலைமை ஏற்பட்டபொழுது, கறிகாய்களின் விலை அதிகமாக உயர்ந்து போய்விட்டது. அப்பொழுது சென்னை நகரத்திலுள்ள மொத்த வியாபாரிகளை எல்லாம் அழைத்து, அவர்களோடு கலந்து பேசி, 'ஏன் இப்படி விலை உயர்கிறது' என்று கேட்டோம். அதற்கு அவர்கள் 'நாங்கள் காரணம் அல்ல, சில்லரை வியாபாரிகள் அவ்வாறு உயர்ந்த விலைக்கு விற்கின்றார்கள், அல்லது வேறு காரணங்கள், கறிகாய்கள் குறைவாக இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கப்புறம், 'இவ்வளவுதான் லாபம் வைத்துக்கொள்ள வேண்டும், அதற்கு மேல் நீங்கள் விலை வைத்து விற்கக்கூடாது' என்றும், சில்லரை கடைகளில் விலைவாசி போர்டு போடவேண்டும் என்றெல்லாம் சில கட்டுதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதைக் கூடியவரையிலே ஏற்றுக் கொண்டார்கள். அம்மாதிரி விலை அதிகமாவது அப்பொழுது தவிர்க்கப்பட்டது. இப்பொழுதுகூட கொஞ்ச நாட்களாக மறுபடியும் கறிகாய் விலை உயர்வதுபோல் இருக்கிறது, அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. இதிலே இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அதேமாதிரிதான் திடீரென்று மருந்தின் விலை ஒரு முறை உயர்ந்தது. அப்பொழுதே இதையெல்லாம் நேரிடையாக கண்டிரோலில் எடுத்துக் கொள்ளலாம். கண்டிரோலில் எடுத்துக்கொண்டு நல்ல முறையிலே நடத்துவது சுலபம் அல்ல. எல்லாவற்றையும் கண்டிரோலில் எடுத்துக் கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன, தொல்லைகள் ஏற்படலாம். கூடியவரையில் கண்டிரோலுக்கு இடமில்லாமல், எவ்வாறு நிலைமையை சமாளிப்பது என்ற வகையிலே இப்பொழுது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. மருந்து மொத்த வியாபாரிகளை ஒரு முறை அழைத்து அவர்களோடு கலந்து பேசினோம். அவர்கள் 'எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. நாங்கள் குறிப்பிட்ட விலைக்குக் கொடுக்கிறோம், சில்லரை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்கிறார்கள், அவர்களிடம் நாங்கள் போய் நீங்கள் குறைந்த விலைக்கு விற்கவேண்டும் என்று சொன்னால், எங்கள் பொருள்கள் விற்காமல் போய்விடலாம், நாங்கள் கண்டிப்பாக இருப்பதற்கு இல்லை' என்று சொன்னார்கள். பிறகு அவர்களுக்கு எல்லாம் சிவில் சப்ளை இலாகா லைசென்ஸ் கொடுப்பது, மொத்த விலைக்கு மேல் இவ்வளவுதான் அதிகமாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று நிர்ணயம் செய்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அப்படி விலை ஏறுமல் ஓரளவு குறைந்தது. அதுவும் முக்கியமாக 'ஸாப்ட் புட்' என்று சொல்லக்கூடிய ஹார்லிக்ஸ் போன்றவைகளின் விலை ரொம்ப அதிகமாயிற்று. அத்தகைய உணவுப் பொருள்கள் நமது நாட்டில் உற்பத்தி இல்லை. இப்பொழுது அம்மாதிரி உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகிக்கொண்டு வருகிறது. அப்பொழுது உற்பத்தி இல்லை. இம்மாதிரி ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு, ஓரளவுக்கு விலைவாசி உயர்வு தவிர்க்கப்பட்டது. இதை

24th January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

யெல்லாம் திருஷ்டாந்தத்திற்காகச் சொல்லுகிறேன். அரசாங்கமும் சம்பந்தப்பட்ட இலாகாவும் இம்மாதிரி விஷயங்களில் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

விறகு விலை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால், இதற்காக நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டு, நம்முடைய வனங்களிலிருந்து விறகு பெற்று அதை நாம் மக்களுக்கு விற்பது என்ற ஏற்பாட்டில் இப்பொழுது சில விறகு டெப்போக்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எனக்கு ஒன்று புரியவில்லை. இந்த டெப்போக்களில் நியாய விலையில் விறகு விற்றாலும், அதிகமாக அங்கே விறகு விற்கப்படுவதில்லை, அதிகமாக மக்கள் இங்கே வாங்குவதில்லை என்று கூறுகிறார்கள். மேலும் இப்பொழுது அந்த நிலை ஏன் என்பதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இது பற்றி குறிப்பிட்டார்கள். நடுவிலே இருப்பவர்கள் அதிக லாபத்தைச் சம்பாதிக்கிற ஒரு தன்மை இருக்கிறது. அதை அடியோடு தவிர்க்க வேண்டும். அதை எப்படித் தவிர்ப்பது, வேறு சிக்கல் இல்லாமல், மற்றவர்களுக்கு தொல்லை கொடுக்காமல், முக்கியமாக விவசாயிகளுக்கு தொல்லை கொடுக்காமல், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு தொல்லை கொடுக்காமல் எப்படித் தவிர்ப்பது என்பதிலே அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

விலை ஓரளவுக்கு ஏறியிருக்கிறது. 1930-ம் ஆண்டிலிருந்து பார்க்கிறோம். நானூறு, ஐந்நாறுக்கு வருகிறது புள்ளி. 1939-ம் ஆண்டில் இருந்ததற்கு இப்பொழுது ஏறித்தான் இருக்கும். 1939-ம் ஆண்டில் இருந்த விலை மறுபடியும் வரும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கு இல்லை. இப்பொழுதுகூட 1939-ம் ஆண்டு அடிப்படையில் புள்ளிவிவரம் சேகரிப்பதைவிட, 1961, அல்லது 1960-ம் ஆண்டை வைத்து, அதை 'பேஸிஸ்'-ஆக வைத்துப் புள்ளி விவரம் சேகரிக்கலாம் என்றும் இப்பொழுது யோசிக்கப்பட்டு வருகிறது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். நம்முடைய ராஜ்யத்தில் இண்டெக்ஸ் தயாரித்திருக்கிறார்கள். அகில இந்திய ரீதியிலும் இண்டெக்ஸ் தயாரிக்கப்படுகிறது. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் அகில இந்திய இண்டெக்ஸை பேஸிஸ்-ஆக வைத்து, நாம் மேற்கொண்டு அதை அமுலாக்கிக் கொண்டு வருகிறோம். அகில இந்திய அதிகாரிகளிடம் நாம் இதைப்பற்றி பேசவேண்டும் என்று சொன்னோம். அகில இந்திய அதிகாரிகள்கூட இங்கே வருவதாக இருக்கிறார்கள்.

சமீபத்திலே லேபர் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்திலே இது விவாதிக்கப்பட்டது என்பது இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அதை மேலும் பரிசீலனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட இலாகா புள்ளி விவரங்கள் சேகரித்துக் கொடுக்கும். பல தொழிற்சங்கத் தலைவர்களும் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கட்டும். புள்ளி விவரங்களைக் கொடுக்கிறோம். அதற்கு மேலே கலந்து

பேசி தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் "லிவிங் இண்டெக்ஸ்" தயார் செய்வதிலே கவனம் செலுத்தலாம் என்று அப்போது ஒப்புக்கொள்ளப்பட்டது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அவர்கள் கூறியபடி, ஒரு மாநிலம் மட்டும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடியது என்பதல்ல. அகில இந்திய ரீதியிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் ஒரு நடவடிக்கை எடுக்கிறோம், மற்றவர்கள் எடுக்கவில்லை என்றால், பிரயோசனமில்லை. இப்பொழுது துவரம் பருப்பு இருக்கிறது. பாஞ்சாலத்திலிருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்தும் வரவேண்டும். அப்படி வருவது தடைப்பட்டால் விலை ஏறுகிறது. அதிக விலைக்கு விற்பதையும் நாம் தவிர்ப்பதற்கு இல்லை. அரிசியை எடுத்துக் கொண்டால் அகில இந்திய ரீதியிலே கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. திட்டக் கமிஷன் அளித்த புள்ளி விவரங்களையும் அவர்களுடைய கவலையைப் பற்றியும் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். திட்டக் குழு இதிலே மிகுந்த கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் உணர்ந்திருக்கிறார்கள். திட்டக் குழுவில் பல பொருளாதார நிபுணர்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். முன்பே தேசிய டெவலெப்மெண்ட் கவுன்சிலின் சார்பாக குழு அமைத்து நிபுணர்களை வைத்து, பல நாட்கள் ஆராய்ந்து என்னென்ன பாக்டர்கள் இம்மாதிரி விலை ஏற்றத்திற்குக் காரணமாய் இருக்கின்றன, எப்படி சமாளிப்பது என்பதைப் பற்றி எல்லாம் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்ந்து திட்டக் குழுவின் கவனத்திலே இருந்து வருகிறது. மாநிலங்களோடு தொடர்பு கொண்டு மேலும் என்ன தகவல்களைப் பெற முடியும், மேலும் என்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதிலே திட்டக் குழு கவனம் செலுத்தி வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். இந்த மாநிலத்திற்கு மட்டும் தனியாகக் கமிட்டி அமைப்பதிலே—அது நிபுணர்கள் கமிட்டியாக இருந்தாலும் சரி, சர்வ கட்சி அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டியாக இருந்தாலும், சரி, அல்லது இருதரப்பாரை சேர்த்து அமைக்கப்பட்ட கமிட்டியானாலும் சரி—அவ்வாறு கமிட்டி அமைப்பதினால் பலன் இல்லை என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தின்படி பதுக்கல், கலப்படம் இவற்றை எல்லாம் சேர்த்துப் பார்ப்பதற்கு ஒரு கமிட்டி என்றால், அதற்கு வேண்டிய நிபுணர்கள், இதற்கு வேண்டிய நிபுணர்கள், இன்னும் அதற்கு வேண்டிய கட்சிப் பிரதிநிதிகள், இதற்கு வேண்டிய கட்சிப் பிரதிநிதிகள் எல்லோரும் வேண்டும். இந்தத் தீர்மானத்திலே மூன்று விஷயங்கள் அடங்கி இருக்கின்றன. பதுக்கல், கலப்படம், விலைவாசி ஏற்றம், இவை எல்லாவற்றிற்கும் சேர்த்து கமிட்டி போடவேண்டும். விலைவாசியைப் பொறுத்த வரையில் அகில இந்திய ரீதியிலே கவனம் செலுத்துவதுதான் சரி என்று கூறினேன். கலப்படத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தொடர்ந்து

24th January 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. கடுமையான தண்டனை விதிக்கிறோம். அதைப் பற்றி புகார்கள் வருகின்றன. மருந்து வியாபாரிகள் தொடர்ந்து புகார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். "அதற்கு நாங்கள் காரணம் இல்லை, வாங்கின இடத்திலே அப்படி இருக்கிறது, எங்களுக்குத் தெரியாது" என்கிறார்கள். வாங்குவது கலப்படமாக இருந்தால் எங்களை பிராசிக்யூட் செய்யக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவதையும் அப்படியே ஏற்றுக் கொள்வதில்லை. சில பிராசிக்யூஷன்களை நிறுத்துவதிற்கில்லை என்று கூட அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. குறிப்பாக மருந்து விஷயத்திலே கலப்படம் என்பது கொடுமையானது. அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. சம்பந்தப்பட்ட தலைமை அதிகாரி கூறுவதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பிராசிக்யூஷன் செய்கிறது. பிராசிக்யூஷனால் பாதிக்கப்பட்டவர்கள், தாங்கள் காரணமில்லை என்று சொல்லுகிறார்கள். பல இடங்களிலிருந்து புகார்கள் வருகின்றன. இந்தக் கலப்படத் தடைச் சட்டம் கடுமையாக இருக்கிறது, நாங்கள் நிரபராதிகள் என்று கூறுகிறார்கள். இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். உணவுப் பண்டங்களிலே, அதிலும் அரிசியிலே சுண்ணம்பு கலப்பது கொடூரமான செய்கை. அப்படிச் செய்கிறவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான். இந்த சமயத்தில் நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரிகளிடம் யாராவது புகார் சொன்னால் நகைச் சுவை என்று சொன்னாலும் கூட, சமாதானம் சொல்லும்போது ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். அலட்சியத்தோடு சொல்வது தவறு. சம்பந்தப்பட்ட அதிகாரிகள்—பெரிய அதிகாரிகளாய் இருந்தாலும் சரி, சின்ன அதிகாரிகளாய் இருந்தாலும் சரி—அம்மாதிரி கருத்துக்கு இடமில்லாத முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த சமயத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

பதுக்கல் எங்கே இருந்தாலும், அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. மொத்த விலைக்கும், சில்லரை விலைக்கும் அதிகமான மார்ஜின் இல்லாத வகையிலே கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, கனம் அங்கத்தினர்கள் யாராயினும் சரி, எந்தக் கட்சியினராயினும் சரி, குறிப்பிட்ட யோசனைகளை, கருத்துக்களைச் சொன்னால், அவற்றை அரசாங்கம் எப்பொழுதும் நன்றாகப் பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே உபரியாக அரிசி உற்பத்தி செய்தால் கூட அகில இந்தியாவிலே பற்றாக்குறை இருப்பதினாலே பாதிக்கப்படுகிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது முற்றிலும் உண்மை. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நம்முடைய மாநிலத்தின் நிலைமையை

வைத்துக்கொண்டு அணுகினுல் சரியாகாது. அகில இந்திய ரீதியில் கவனிக்கவேண்டும். அது அவ்வாறு கவனிக்கப் பட்டுத்தான் வருகிறது. ஆகவே, இதற்கென்று தனியாக ஒரு கமிட்டி போடவேண்டிய அவசியம் இல்லை. அவசியம் இருந்தால், ஒரு கமிட்டியை அமைப்பதற்கு நாங்கள் தயங்க மாட்டோம். முன்பு இந்த மாநிலத்திலே ஒரு ஆலோசனைக் குழு இருந்தது. மூன்று அல்லது நான்கு கூட்டங்கள் நடந் தன. ஆனல் உருப்படியாக அந்தக் கமிட்டியின் மூலம் எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட வில்லை. இப்பொழுது ஸ்டேட் டிரேடிங் செய்வதன் மூலம் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னலும், அதாவது உணவுப் பண்டங்கள், விவசாயப் பண்டங்கள், மற்றும் மக்களுக்கு வேண்டிய பண்டங்கள் எல்லாவற்றை யுமே அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்ன லும், அதிலும் சிக்கல் இருக்கிறது. அரிசி மில்களை நேராக அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை, அந்த வியா பாரத்தை நேராக நடக்கக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்யலாம் என்று கனம் அங்கத்தினர் சொன்னர். அதை நான் வரவேற்கிறேன். அந்தக் கோணத்தில் கவனிக்க வேண்டும். அரிசி மில்களை நாம் எடுத்து நடத்துவது என் பது அல்ல. அதை கனம் அங்கத்தினர் நன்கு விளக் கினர். அரிசி மில்களை எடுப்பது பிரச்னையல்ல. அதன் மூலம் வியாபாரம் நடக்கிறதே, அதை எவ்வாறு கண்காணித்து, அநியாயமான லாபத்தை ஒரு சாரார் அடைவதினலே, விலை ஏறிவிட்டால் அதனல் விவசாயிகளுக்கும் பயனில்லாமல், வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் பயனில்லாமல் போகிற நிலைமையை அகற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னர்கள். அந்த வகையிலே இந்த அரசாங்கம் பரிசீலனை செய்துக் கொண்டு வருகிறது. எல்லாவற்றையும் ஸ்டேட் டிரேடிங் மூல மாக எடுத்துக்கொள்வது என்றல், பிறர் பாதிக்கப்படுவார் களே என்பதற்காக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது அல்ல. வியாபாரம் செய்கிறவர்கள் பொதுப்பணி செய்கிறவர்கள்கள் தான். ஆனல் அவர்கள் நியாயமாக நடக்கவேண்டும். அதிக லாபத்தை எதிர் பார்க்கக்கூடாது. வாங்கிச் சாப்பிடுகிறவர் களையோ, அல்லது விவசாயிகளையோ சுரண்டக் கூடாது. வியாபாரிகளுக்கும் சமுதாயத்திலே ஒரு இடம் உண்டு. அவர்கள் ஒரு சிறந்த சேவையை செய்கிறர்கள் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். அவர்கள் மீது வெறுப்பும் இல்லை, பற்றும் இல்லை. எப்படியும் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது. அதனல்தான் ஸ்டேட் டிரேடிங்கை ஆட்சேபிக்கிறேன் என்று சொல்லுவதும் தவறு. ஸ்டேட் டிரேடிங்கை பூராவாக எடுத்துக்கொண்டால் பல சிக்கல்கள் ஏற்படும். இதே விவசாயிகளை அது பாதிக்கும். ஆகவே இந்தப் பிரச்னை சுலபமாக தீர்வு காணக்கூடியது அல்ல என்று நான் கூறி னேன். ஆனல் சுலபமாக தீர்வு காணக்கூடியதாக இல்லை

24th January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

என்பதற்காகத்தான் ஒரு குழு வேண்டும் என்று கேட்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மாநில ரீதியில் ஒரு குழு அமைப்பது சரியல்ல. பின்னால் நிறைவேற்ற முடியவில்லை என்று ஏமாற்றம், வெறுப்பு, புகார் ஏற்படலாம். அதற்கு இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதே அகில இந்திய ரீதியில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நிபுணர்கள் பரிசீலனை செய்து வருகிறார்கள். இதை பூராவாக மத்திய சர்க்காருக்கு விட்டு விடாமல் இந்த அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தும் என்று சொல்லி, கனம் அங்கத்தினர்கள் இந்த தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் தங்களுக்குள்ள பொறுப்போடு பதில் கூறினார்கள் என்று வேண்டுமானால் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் பிரச்னைக்கு பரிகாரம் கூற தவறி விட்டார்கள். நமது நோக்கத்தை எப்படி அடையவேண்டும் என்பதில் வாதமில்லை. ஆனால் அரசாங்க விற்பனை பரிகாரம் ஆகாது என்றால், ஸ்டேட் டிரேடிங் நடத்துவது இந்த அரசாங்கத்தின் கொள்கைக்கு முரண் என்று கருதவில்லை. அதற்கு ஆட்சேபனை இருக்க முடியாது. உதாரணமாக சென்னை நகரத்திலே பால் வினியோகம் நடக்கிறது. மாதவரம் பால் பண்ணை நடக்கிறது. அனேகமாக அது ஸ்டேட் டிரேடிங் போலத்தான். ஏகபோகமாக அரசாங்கத்தின் கையில் வரும். மாதவரம் காலனியில் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதிலே கம்ப்ளீட் ஸ்டேட் டிரேடிங் இல்லை. நாம் உற்பத்தி செய்யும் அளவுக்கு வினியோகிக்கிறோம். மற்ற பால்காரர்களும் தங்களால் முடிந்த அளவு விற்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கொஞ்சம் பொறுத்திருந்தால் விளக்கியிருப்பேன். இன்றைக்கு அரசாங்கத்திற்கு ஏகபோகமாக இருக்கவில்லை என்றாலும், படிப்படியாக சென்னை நகரத்தின் பால் வினியோகம் அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டும் என்பது தான் நோக்கம். அதை மறுக்க முடியாது. அதை எப்படி அடையப் போகிறோம். ஸ்டேட் டிரேடிங் பண்ணுவதில் அமைச்சருக்கு உண்டாக்கியுள்ள ஐயத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பால் பண்ணை மூலம் ஸ்டேட் டிரேடிங் பண்ணுவதில் மாடு வைத்துக்கொண்டு பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு அது நன்மையா கெடுதலா? பால் பாட்டில் சரியாக கார்க் செய்யப்படவில்லை, பாட்டிலில் ஈ இருந்தது போன்ற புகார்கள் இருக்கலாம், அது ஊழியர்கள் சரிவர கவனிக்காததால் ஏற்படக் கூடிய குறைபாடுகள். ஆனாலும் சர்க்கார் எடுத்து வினியோகிக்கும் போது நிச்சயமாக உபயோகிக்கிறவர்களுக்கு நல்ல பால் கிடைக்க வழி இருக்கிறது. தவறுகள் ஏற்பட்டால் அதைத் திருத்த வேண்டியதுதான். இதை கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். இப்பொழுது இல்லாவிட்டாலும் கொஞ்சம்

ஓய்வு இருக்கும் பொழுது இதை கனம் முதலமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாதவரம் பால் பண்ணையிலிருந்து பால் வினியோகம் செய்வது போலவே அரிசி, முதலிய அத்தியாவசிய பண்டங்களை சர்க்காரே வினியோகிப்பது நலமாக இருக்காதா என்று சிந்திக்க வேண்டும். இப்பொழுது வேலைத் தொந்தரவில் முடியாவிட்டாலும் பின்னுல் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வேலைத் தொந்தரவுகள் ஒன்றும் இல்லை. விஸ்தரிக்கவேண்டும் என்பதும், விஸ்தரிக்கும் யோசனையும் அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருக்கிறது. அது எவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதுதான் இப்பொழுது அரசாங்கத்தின் எண்ணத்தில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆரம்பித்தால் தானே விஸ்தரிக்க முடியும். ஆரம்பிக்க வேண்டும் என்றுதான் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ரைஸ் மில்களை எடுக்கும் யோசனையை ஒத்திப்போட்டாலும் பரவாயில்லை. அவர்கள் கூலிக்கு அரைத்துக் கொண்டு போகட்டும். இது விஷயமாக என் கருத்தை அமைச்சர் அவர்கள் பாராட்டினுர்கள். அதற்கு நன்றி.

இன்னொரு விஷயம். ரஷ்யாவிலே கூட பூராவும் ஸ்டேட் டிரேடிங் என்று இல்லை. உலகத்திலேயே இன்றைக்கு அதிகமாக பொது உடமை இருக்கும் நாடு ரஷ்யா. அங்கே தனியார் துறை மிக மிகக் குறைவாக இருக்கிறது. விவசாயிகள் கூட தானியங்களை உற்பத்தி செய்து பொது மார்க்கெட்டில் விற்கலாம். பெரும் பண்ணைகள்தான் அரசாங்கத்திற்கு விற்க வேண்டும். விவசாயிகள் தங்கள் உற்பத்தி பூராவையும் சர்க்காருக்கு விற்க வேண்டும் என்பது அல்ல. அதே மாதிரி மொத்த வியாபாரம் படிப்படியாக நீண்ட கால பரிகாரமாக ஏற்படலாம். அந்த கொள்கையை சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை. அரசாங்க வியாபாரம் என்பதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்கிருர்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து புரிந்து கொள்கிறேன். ஆனுல் நிபுணர் கமிட்டியைப் பற்றித்தான் கனம் அமைச்சர் அவர்கள் ஆட்சேபனை கூறுகிருர்கள். அது அகில இந்திய பிரச்னை, திட்ட கமிஷனில் நிபுணர்கள் இருக்கிருர்கள், இந்தியா பூராவுக்கும் அவர்கள் ஆராய்கிருர்கள், என்று கூறினுர்கள். திட்ட கமிஷன் 12 வருஷமாக எவ்வளவோ திட்டங்களை போட்டிருந்தும் நாம் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறோம். விலைவாசி அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "டிரென்ட் பர்ஸிஸ்ட்" பண்ணுகிறது என்று சொல்லுகிருர்கள். திட்டக் கமிஷன் தங்களுடைய சக்தி இல்லாத நிலையை சர்க்காரிடம், மக்களிடம் சொல்லி விட்டார்கள். திட்ட கமிஷன் வைத்தியர் போல்தான். நோய் இருக்கிறது என்று சொல்கிருர்கள். சிகிச்சை என்ன என்றும் சொல்கிருர்கள். சிகிச்சை செய்வது அரசாங்கத்தின் பொறுப்

24th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பில் இருக்கிறது. திட்டக் கமிஷன் கூறுகிற வகையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் முதல் பொறுப்பு மத்திய சர்க்காருக்கு என்றாலும் ராஜ்ய சர்க்காருக்கு இரண்டாவது பொறுப்பு இருக்கிறது. அதே சமயத்தில் யோசனைகள் கீழே இருந்து போக வேண்டும். ராஜ்யங்களிலே மாவட்டங்களிலே என்ன நிலை என்று அறிய வேண்டும். எங்கே கலப்படம் ஏற்படுகிறது, அதைத் தடுக்க தக்க யோசனைகள் என்ன என்று ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்குக் கூறலாம். ஒரு நடவடிக்கை எடுக்கும்போது அது இந்தியா பூராவுக்கும் பொருந்தும் வகையில் எடுக்கலாம். நான் கூறியிருப்பது என்னுடைய கட்சிக்கு பிரதிநிதி வேண்டும் என்று அல்ல. சட்டசபை அங்கத்தினர்களில் கூட நிபுணர்கள் இருந்தால் எடுத்துக் கொள்ளட்டும். நான் கூறியிருப்பது எல்லாம் நிபுணர்களும், அதிகாரிகளும் அடங்கிய ஒரு கமிட்டியைப்போட்டு பரிசீலனை செய்து விவரங்களை தயாரிக்க வேண்டும். அப்படி தயாரித்து வைத்துக் கொண்டால் இந்த சபையில் விவாதிக்க, மத்திய சர்க்காருக்கு தெரிவிக்க, திட்ட கமிஷனுக்கு தெரிவிக்க உதவியாக இருக்கும். ஆகவே இந்த கமிட்டியை அமைக்க கனம் அமைச்சர் அவர்கள் ஆட்சேபணை செய்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே இநத தீர்மானத்தை நான் வற்புறுத்துகிறேன்.

Mr. SPEAKER : I thought that, after the long speech, the hon. Member is going to withdraw his Resolution.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் "வித்ட்ரா" பண்ணுவதால் பரிகாரம் ஏற்படப்போவதில்லை.

Mr. SPEAKER : The question is—

'This House resolves to recommend to the Government that a committee of enquiry be appointed for enquiry and report on the measures to be taken by the Government to secure reduction of prices of essential articles of life to prevent hoarding, speculation and black-marketing and to arrest the growing menace of adulteration.'

By a voice vote, the Hon. Speaker declared that the Resolution was carried.

Sri M. KALYANASUNDARAM : So, my Resolution is carried.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I suggest that the Chair can put the Resolution again to the vote of the House.

Sri M. KALYANASUNDARAM : Sir, if the Hon. the Leader of the House challenges it, let there be a division.

Mr. SPEAKER : I will put it again to the vote of the House

Sri M. KALYANASUNDARAM : Sir, we shall take a poll on it.

Mr. SPEAKER : If it comes to that, a poll will be taken. Now I will put it again to the vote of the House.

The question is—

'This House resolves to recommend to the Government that a committee of enquiry be appointed for enquiry and report on the measures to be taken by the Government to secure reduction of prices of essential articles of life to prevent hoarding, speculation and black-marketing and to arrest the growing menace of adulteration'.

The Resolution was put and lost.

Sri M. KALYANASUNDARAM : Sir, I do not want to challenge the ruling of the Chair. It is only the Hon. the Leader of the House who has first challenged it.

10-30 a.m

(2) Amendment of the Madras Payment of Salaries and Removal of Disqualificatins Act, 1951.

Sri A. RAGHAVA REDDI : Mr. Speaker, Sir, I move—

'This House recommends to the Government to amend the Madras Payment of Salaries and Removal of Disqualifications Act, 1951 (Madras Act XX of 1951) raising the salary of the Members of the Legislature from Rs. 150 to Rs. 250 per mensem.'

Sri M. KALYANASUNDARAM : Sir, I second it.

Mr. SPEAKER : Resolution moved—

'This House recommends to the Government to amend the Madras Payment of Salaries and Removal of Disqualifications Act, 1951 (Madras Act XX of 1951) raising the salary of the Members of the Legislature from Rs. 150 to Rs. 250 per mensem.'

* திரு. அ. ராகவ ரெட்டி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் குறித்து நான் இந்த மன்றத்தின் கனம் அங்கத்தினர்கள் பலபேர்களுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொண்டு தான் இந்த தீர்மானத்தை பிரேரணை செய்தேன். ஆனால், . . .

Mr. SPEAKER : The hon. Member need not get discouraged. Let him put his case and it is for the House to decide.

திரு. அ. ராகவ ரெட்டி : அதிகமான பேர்கள் இது வேண்டும் என்று மனத்திலே வைத்துக்கொண்டிருப்பதால்தான் இந்தத் தீர்மானத்தை நான் இவ்வளவு தைரியமாகக் கொண்டுவர

24th January 1964] [திரு. அ. ராகவ ரெட்டி]

முன்வந்தேன். எப்படியிருந்தாலும் நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். அதைப்பற்றிச் சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தைவிட மற்ற மாநில சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியம் அதிகமாகத்தான் இருக்கிறது. சில மாநிலங்களிலே 250 ரூபாய் என்ற அளவிலும், மற்றும் சில மாநிலங்களிலே 300 ரூபாய் அளவிலும் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் மட்டுந்தான் சட்ட மன்ற உறுப்பினர்களுடைய ஊதியம் மற்ற மாநிலத்தில் உள்ளதைக் காட்டிலும் குறைவாக இருக்கிறதென்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

அடுத்தபடியாக, சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் படும் இந்தத் தொகையை 'ஊதியம்' என்று குறிப்பிடுவது சரியான வார்த்தை அல்ல என்று நான் கருதுகின்றேன். 'ஊதியம்' என்று சொன்னால், அது சாதாரண லோயர் டிவிஷன் கிளார்க்கின் ஊதிய அளவுக்குத்தான் இருக்கிறது. (குறுக்கீடு) சென்ட்ரல் கவர்ன்மெண்ட் லோயர் டிவிஷன் க்ளார்க் சம்பளம் என்று சொல்லாம்.

MR. SPEAKER: This is considered as an allowance and not as pay.

SRI A. RAGHAVA REDDI: It is called as salary in our salary bill.

அங்கத்தினர்கள் தங்கள் தங்களுடைய தொகுதிகளிலே சுற்றிப் பார்க்கத் தேவைப்படும் ஒரு அலவன்ஸ் ஆகத்தான் இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது. தற்போதுள்ள நிலைமையில், ஒரு மாதத்தில் 5, 6 நாட்கள் தொகுதியைச் சுற்றிப் பர்க்கவேண்டுமென்றால் கூட, இந்த 150 ரூபாய் போதாது. இதை உயர்த்த வேண்டும் என்பதற்கு இது ஒரு முக்கிய மான காரணம் ஆகும். 1951-ஆம் ஆண்டில் இந்த 150 ரூபாய் என்ற தொகை நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு முன்பு சட்ட சபை அங்கத்தினர்களாக இருந்தவர்கள் பெரிய பணக் காரர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு இந்த 150 ரூபாய் வந்தாலும் ஒன்றுதான், வராவிட்டாலும் ஒன்றுதான். அதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அது அப்போதைய நிலைமை. ஆனால், தற்போது ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக் கப்பட்டு சட்டசபை அங்கத்தினர்களாக வருகிறார்கள். இப் பொழுது வருகிறவர்கள் எல்லோருமே பணக்காரர்கள் அல்ல. பெரும்பாலானவர்கள், என்னையும் சேர்த்தே சொல்கிறேன், பணக்காரர்கள் அல்ல. ஆகையால், அரசாங்கம் இந்த விஷயத்தை அவசியம் கவனித்து, என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும், அங்கத்தினர்களும்

[திரு. அ. ராகவ ரெட்டி] [24th January 1964

ஆதரவு கொடுத்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் நியாயத்தை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால், இதுவரைக்கும் இது கால தாமதம் ஆனதற்குச் சில முக்கியமான காரணங்கள் உண்டு. ஒன்று, ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள் சம்பளம், பஞ்சப் படி ஆகிய இந்தப் பிரச்னைகளை நாம் சரியாகத் தீர்க்க முடியாத நேரத்தில், நம்முடைய அலவன்ஸ் முதலியவற்றை அதிகப்படுத்திக் கொள்வது சரியா என்கிற ஒரு ஆட்சேபனை தான் இதிலே நியாயமானதாக இருக்க முடியும். மனம் விட்டுப் பேசவோமானால், இது சில அரசியல் கட்சிப் பிரச்னைக்காகச் சிக்கலாகிப் பழிவாங்கப்பட்ட பிரச்னை என்பது என்னுடைய அபிப்பிராயம். இல்லாவிட்டால் முன்பே ஏற்பட்டிருக்கும். 'இந்தச் சபையில் எல்லோரும் ஏற்றுக்கொண்டால் அதை அதிகரிப்பதிலே ஆட்சேபனை இல்லை' என்பது ஆளும் கட்சியினருடைய நிலை. ஆரம்பத்திலிருந்தே சூழ்நிலை இதற்குச் சரியாக இல்லாததால் ஒத்திப் போடப்பட்டு, ஒத்திப் போடப்பட்டு, இப்பொழுது இந்தப் பிரச்னை சபை முன்பு வந்திருக்கிறது.

நான் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதற்கு எந்தவிதமான அச்சமோ தயக்கமோ கிடையாது. ஏனென்றால், சட்டசபை அங்கத்தினர் பதவி என்பது ஒருவருடைய வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்காக ஏற்பட்டதல்ல—யாராவது வேறு வழியிலே தவறாகச் செல்கிறவர்கள் இருந்தாலும் இருக்கலாம்—நியாயமாகப் பார்த்தால், ஏழை எளியவர்கள், சாதாரண தொழிலாளிகள், விவசாயிகள் சட்டசபை அங்கத்தினர்களாக வருவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். ஜனநாயகம் வலுவடைய வேண்டுமென்றால், ஒரு பைசா சொத்துக்கூட இல்லாதவர்கள், சொந்த வருவாய் இல்லாமல் முழு நேரமும் சமுதாயத்திற்காகப் பாடுபடக்கூடியவர்கள், பொது வாழ்க்கைக்காக வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொள்ளக் கூடியவர்கள் கூட, சட்டசபை அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் சட்டசபை அங்கத்தினர்களாக வரவேண்டுமென்றால், பணக்காரர்கள், பஸ் முதலாளிகள் போன்றோருடைய தயவுக்குக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல், மற்றவர்களுடைய தயவு தாட்சண்யத்திற்குக் காத்திருக்கவேண்டிய அவசியமில்லாமல் வரவசதி செய்தால்தான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். சட்டசபை அங்கத்தினர்களாக வரக்கூடியவர்கள் வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்காத முறையில் இருக்கக்கூடிய நிலை வரவேண்டும். அப்போழுதுதான் அவர் தம்முடைய கடமையை விருப்பு வெறுப்புக்கு இடம் இல்லாமல், தயவு தாட்சண்யத்திற்கு இடம் இல்லாமல் செயலாற்ற முடியும். பஸ் ட்ரான்ஸ்போர்ட் தேசீய மயமாக்கப்படவேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தினால் நன்கொடை கொடுக்கின்றவர்கள் எங்கே கொடுக்

24th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

காமல் நிறுத்திவிடுவார்களோ அல்லது தேர்தலுக்கு உதவி செய்கின்றவர்கள் எங்கே உதவி செய்யாமல் இருந்துவிடுவார்களோ என்பது போன்ற பயத்திற்கு இடம் இருக்கக் கூடாது. பிறருடைய தயவு தாட்சண்யத்திற்கு இடம் இல்லாத வகையில் மக்களுக்காக உழைத்துப் பாடுபடவேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்கள் சட்டசபை அங்கத்தினர்களாக வரக்கூடிய நிலையை உண்டாக்கவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதனால் அதைத் தவிர்க்க முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அது வேறு விஷயம். மனச்சாட்சி இல்லாதவர்களாக இருந்தால் அப்படிப்பட்ட ஊழல் இருக்கக் கூடும். நாம் நல்ல சூழ்நிலையை உருவாக்கிவிடுவோம். அதையும் மீறிக்கொண்டு செய்தால் அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம்.

மாதமொன்றுக்கு 150 ரூபாய் அலவன்ஸ் என்று இருப்பது தபால் தந்திச் செலவுக்குக்கூட கட்டுவது இல்லை. நான் வேண்டுமானால் கணக்குக் கொடுக்கிறேன். இந்தத் தொகையைவிட அதிகமாக அங்கத்தினர்கள் செலவு செய்யவேண்டி ஏற்படுகிறது. மற்ற ராஜ்யங்களிலே இந்தத் தொகை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர் என்பவர் தன்னுடைய தொகுதிக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறவர் என்றாலும், இந்த நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகளும் அவருக்கு இருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவருடைய தொகுதிக்கு மட்டும் பிரதிநிதி அல்ல. தொகுதி வேலையும் அவசியம். சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தொகுதிக் கண்ணோட்டம் இருப்பதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது; இந்த ராஜ்யத்தினுடைய ஒட்டுமொத்தமான நலனிலும் அக்கறை செலுத்தவேண்டியிருக்கும். ஒவ்வொரு அங்கத்தினரும், தன்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, மற்ற தொகுதிகளிலே இருக்கும் பிரச்னைகளைப் பற்றியும், பொதுவாக ராஜ்ய பிரச்னைகளைப் பற்றியும் கவனிக்க வேண்டியிருக்கிறது. சர்க்கார் திட்டம் நடைபெறக்கூடிய இடங்களுக்கும் போய்ப் பாத்துவர வேண்டிய அவசியம் இருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கும் போக வேண்டியிருக்கும். கட்சிப் பிரசாரத்திற்காகவோ, அரசியல் கட்சி வேலைகளுக்காகவோ போகவேண்டியிருப்பதை மட்டும் நான் குறிப்பிடவில்லை. இதல்லாமல், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டுமானால், தபால் செலவு, போக்குவரத்துச் செலவு இவைகளையெல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சட்டசபை அங்கத்தினர்கள் ஓரளவு தங்களுடைய சொந்த வசதியை வேண்டுமானால் குன்றக்துக்கொள்ளலாம் என்றாலும், இத்தகைய செலவுகளை அவர்களே செய்துகொள்ள முடியாது. இந்த நிலையை அரசாங்கம் கவனித்து இதற்கான முறையை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் ஏழை எளிய மக்களுடைய பிரதிநிதியாக இந்தச் சபையில் அங்

கத்தினராக இருந்து பணி புரிய ஒரு வாய்ப்பு ஏற்படும், ஜனநாயகமும் பாதுகாக்கப்படும் என்ற நோக்கத்தோடு இந்தப் பிரச்னையை அணுகினல் சில கட்சி விருப்பு வெறுப்புக்கு இடம் இராது என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படிப் பார்க்கும்போது, 150 ரூபாய் என்றிருப்பது மிகக் குறைவான தொகை என்பதை ஒத்துக்கொவோம். இந்தத் தொகையை அதிகப்படுத்தவேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. ராகவ ரெட்டி அவர்கள் துணிவோடு தீர்மானம் கொண்டு வந்ததை நான் பாராட்டுகிறேன். எல்லோருக்கும் மனத்திலே இந்த எண்ணம் இருக்கலாம். என்றாலும், திரு. ராகவ ரெட்டி அவர்கள் இதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நாம் சொன்னல் மற்றவர்கள் ஏதாவது சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் ஒருவருக்கொருவர் இருந்தது. ஆனல், கனம் அங்கத்தினர் திரு. ராகவ ரெட்டி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்காக அவருடைய துணிவை நான் பாராட்டுகிறேன். மற்ற கனம் அங்கத்தினர்களும் என்னோடு சேர்ந்து அவர்களைப் பாராட்டுவார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். யார் பூனைக்கு மணி கட்டுவது என்ற பிரச்னை இருந்தது. (சிரிப்பு) தைரியத்தோடு, துணிந்து திரு. ராகவ ரெட்டி அவர்கள் பூனைக்கு மணிகட்டிவிட்டார்கள். (மீண்டும் சிரிப்பு) இதை அலவன்ஸாக உயர்த்துவதா, அல்லது என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும். 250 ரூபாய் என்று சம்பளமாகப் போட்டால் வரி கொடுக்கவேண்டியிருக்குமா என்பதையும் யோசிக்கவேண்டும். இதுவரைக்கும் இந்தத் தொகைக்கு வருமான வரி கிடையாது. இந்தத் தொகையில் ஒரு பகுதி அரசாங்கத்திற்கு வரியாகப் போவதானலும் ஆட்சேபணை இல்லை. வரி மூலம் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கத்தான் வேண்டும். அதைத் தவிர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல நான் இதை சொல்வது. அந்த வரியை யார் செலுத்துவது என்பதை முடிவு செய்யட்டும். அதையும் யோசனை செய்து, தபால் தந்திச் செலவுகளுக்கான வசதிகளையும் அதிகப்படுத்தவேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் சபை காலை எட்டரை மணியில் இருந்து ஒன்னரை மணி வரையில் நடக்கிறது. சில நாட்கள் இன்னும் அதிக நேரம்கூட உட்காருகிறது. அப்படி உட்காருவதை, அதிக நேரம் வேலை செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. வேலை செய்யத் தயார். ஆனல் அதிக வசதி செய்து தரப்படவேண்டும். கூட்டம் முடிந்தால் போய் வசதியாக உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு ஒரு அங்கத்தினர் தம்முடைய வேலைகளை செய்வதற்கும் வசதி இல்லை. யாருடைய ரூமிலாவது போய். உட்கார்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. சென்ற ஐந்து வருஷங்களாக அதை அனுபவித்துவிட்டோம். இப்போதும். இரண்டரை ஆண்டு அனுபவித்துவிடோம். எங்களுக்கும் வயதாகிக்கொண்டு வருகிறது. இந்தக் கட்டிடத்திற்கும், மவுண்ட் ரோடுக்கும் அலைய முடியவில்லை. ஆகவே இந்த இடத்தில் கனம் அங்கத்தினர்களுக்கு வசதியைச் செய்து தர அரசாங்கம்

24th January 1964] [திரு. மி. கலியாணசுந்தரம்]

முயற்சிக்கவேண்டும். அல்லது அங்கத்தினர்களுக்கு வசதியுள்ள இடத்திற்காக இது மாற்றப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுவிட்டவர்கள் கொஞ்சம் தியாகம் செய்யத்தான் வேண்டும். அப்படித் தியாகம் செய்யவேண்டும் என்று சொல்கிறபோது அதற்கும் ஓர் அளவு உண்டு. இதை அரசாங்கம் உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய வசதியைப் பெருக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு திரு. ராகவ ரெட்டியார் கொண்டுவந்த பிரேரணையை ஆதரிக்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: கனம் தலைவர் அவர்களே, சுதந்தராக் கட்சித் துணைத்தலைவர் திரு. ராகவ ரெட்டி கொண்டு வந்த பிரேரணையை, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஆதரித்தார்கள். இதுபற்றி ஒருமித்த கருத்து இருப்பதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதை ஆட்சேபிக்க எந்தவிதமான முகாந்தரமும் இல்லை. ஏற்கனவே ஒரு தடவை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சங்கரன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அப்போது இருந்த நிலைமையைவிட இப்போது நிலைமை வேறுவிதமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இன்னொரு கருத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் வாழ்வில் ஈடுபடுகிறவர்கள் அத்தனைபேரும் தூய்மை உடையவர்களாக இருக்கவேண்டும் என்ற கருத்து பரவி வருகிறது. அவர்கள் லஞ்ச ஊழல்களில் ஈடுபடக் கூடாது என்று கருதுகிறோம். இந்தப் பண்பு அரசியல்வாதிகளிடத்திலும் உருவாக வேண்டும் என்று எல்லோரும் பேசுகின்றார்கள். ஆகவே சட்டத்தைக் கொண்டு வரும்போது அரசாங்கம் இந்த ஒரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். பொது வாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்துக்கொள்கிற மந்திரிகள் எம். எல். ஏ-க்கள் ஆகியோர் பொது வாழ்க்கையில் இறங்கும்போது எத்தனை சொத்து மதிப்பு உடையவர்களாக இருந்தார்கள், வெளியேறும்போது எத்தனை மதிப்பு உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு சொத்து விவரங்களை அவ்வப்போது கொடுக்கவேண்டும் என்ற பிரச்னையையும் நாம் கவனிக்கவேண்டும். அதற்கானவை செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு இதை ஆதரிக்கிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சினை முன் ஒரு முறை இந்த மன்றத்தில் வந்தபோது அரசாங்கத்தின் சார்பில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருமிக்க இந்தக் கருத்தைத் தெரிவித்தால் அதை அரசாங்கம் மறுக்காது, ஏற்றுக்கொள்ளும் என்று முன்பு ஒரு முறை தெரிவிக்கப்பட்டது. இப்போது நம்முடைய மாநில சட்ட மன்ற உறுப்பினர்களின் மாதாந்திர ஊதியம் 150 ரூபாய் என்று இருக்கிறது. இது போதாது. திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்

[திரு. எம். பக்தவத்சலம்] [24th January 1964

லதுபோல இது தபால் செலவுக்குக்கூட கட்டாது என்பதை நானும் உணர்கிறேன். அநேகமாக மற்ற மாநிலங்களில் உள்ள வர்களும்கூட இதை உணர்ந்திருக்கிறார்கள்.

ஒரே ஒரு மாநிலம் ஜம்மு-காஷ்மீரிலே, 300 ரூபாயாக உயர்த்தி யிருக்கிறார்கள். ஆனால் பஞ்சாப், ஒரிசா, மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், கேரளா, ராஜஸ்தான் ஆகிய இந்த ஆறு மாநிலங்களில் 200 என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாநிலங்கள் 250 என்றும், அதில் 150 சம்பளம், மற்ற அலவன் சுகள் 100 என்றும் வைத்திருக்கிறார்கள். இருநூற்று ஐம்பது என்று சம்பளம் ஆகிவிட்டால் வரி உண்டு என்பது உண்மை தான். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல அதைக் கட்டுவதற்கு யாரும் ஆட்சேபிக்க முடியாது. அதுவும் நம் கடமைதான். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்யும். சாலரி 250 என்று வைத்துவிடுவதா அல்லது 150 சம்பளம், அலவன்சு 100 என்று வைப்பதா என்பதை எல்லாம் பரிசீலனை செய்யும். இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்களுக்கு இப்படி கொடுப்பது என் றால் இதே பலன் மேல்சபை அங்கத்தினர்களுக்கும் உண்டு. அப்படி ஏற்படுவதை இங்குள்ளவர்கள் அத்தனைபேரும் வரவேற் பார்கள். அப்படி இந்த இரண்டு மன்ற உறுப்பினர்களுக்கும் 100 ரூபாய் அதிகப்படுத்துவதனால் அரசாங்கத்திற்கு மூன்று லட்சத்து இருபத்துநான்காயிரம் ரூபாய் அதிகமாகிறது. இது ஒரு புதிய செலவுதான். அதை அரசாங்கம் பொருட் படுத்தாது மன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து 150 ரூபாய் என்பதை 250 ஆக உயர்த்தவேண்டுமென்று கோரிய பிறகு அரசாங்கம் அதற்குக் குறுக்கே நிற்காது. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட பிறகு இதை மசோதாவாக்கிக்கொண்டு வரலாம். இது வேறு விஷயம்.

இதில் வேறு சில பிரச்சினைகளைக் கொண்டு வர வேண்டாம். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்ன மற்ற விவரங்களை தனி யாகக் கவனிக்கலாம். திரு. அரங்கண்ணல்கூட இதற்கு சம்பந்தப் படாத விஷயத்தைச் சொன்னார்கள். இப்பொழுதே நாங்கள் எங்கள் கட்சிக்கு எங்கள் சொத்து விவரங்கள் முதலியவற்றைக் கொடுக்கும் வழக்கம் இருக்கிறது. இது வேறு விஷயம். மற்ற பிரச்சினைகளை இதில் கலக்க வேண்டாம்.

இந்தச் சமயத்தில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் தவறுதலாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இதை ஏற்றுக் கொள்வதன் காரணமாக அரசாங்கத்திற்கு அதிகப்படியாக 3,24,000 ரூபாய் செலவாகும். இது தவிர்க்க முடியாத செலவு. ஆயினும் நாம் இதைச் சரிக் கட்டும் விதத்தில் வேறு வகையில் ஓரளவாவது செலவைக் குறைப் பது அல்லது கட்டுப்படுத்துவது என்பதிலே நாம் எல்லோரும் சேர்ந்து கவனம் செலுத்தவேண்டும். சில குழுக்கள் இருக்கின் றன. எஸ்டிமேட்ஸ் கமிட்டி, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி போன்ற குழுக்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்கள் நேரடி

24th January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

யாகப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக பல
இடங்களுக்கும் செல்கிறார்கள், மற்ற மாநிலங்களுக்கும் போகிறார்
கள். இந்த மன்ற அங்கத்தினர்கள்கூட இந்த ஒன்றரை ஆண்
டிலே பல இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்து வந்திருக்கிறார்
கள். மறுபடியும் நான் கூறுகிறேன், நான் சொல்வதை யாரும்
தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சாதாரணமாக வேறு
இடங்களுக்குச் சென்று கமிட்டி கூட்டங்களை நடத்துகிறார்கள்.
சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டிகூட வெளியூரிலே கூடு
கிறது. அந்தக் கமிட்டி வெளியே போய்ப் பார்த்துத்தான் ஆக
வேண்டுமென்ற நிமித்தம் இல்லை. ஆயினும் அவ்வாறு வெளி
யூர்களிலே கூடுவது ஒரு வழக்கமாகப் போய்விட்டது. மே
மாதத்தில் கூடுகிற கமிட்டி எந்தக் கமிட்டியாக இருந்தாலும் அது
உதகையிலோ, கோடைக்கானலிலோ கூடுவதைப் பற்றி ஆட்சேப
பணை இல்லை. அப்போது இங்கு உட்கார்ந்து வேலை செய்வதால்
ஏற்படும் பலனைவிட அங்கு கமிட்டிக் கூட்டங்களை நடத்தினால்
அதிகப் பலன் ஏற்படக் கூடியதாக இருக்கும். மற்றப்படி கூடிய
வரையிலே—கண்டிப்பாகச் சொல்லவில்லை—இந்தக் கமிட்டிக் கூட்
டங்களையெல்லாம் சென்னையிலேயே நடத்துவது நல்லது.
அவசியமாகப் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்றால் அந்த இடங்
களுக்குச் செல்லுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.
கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சைனிக் பள்ளியைச்
சென்று பார்த்துவிட்டு வந்து அதன் சிறப்பைப் பற்றி எடுத்துக்
கூறினார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி அதைத் தேர்ந்தெடுத்துப்
பார்த்து அதன் சிறப்புக்களை அறிந்து கொண்டது பற்றி நான்
மிகவும் திருப்தி அடைகிறேன். குறிப்பாக ஏதாவது ஒன்றைப்
பார்க்கவேண்டுமென்றால் பார்க்கலாம். ஆனால் கூடியவரைக்கும்
இந்தக் கமிட்டிகள் எல்லாம் சென்னையிலேயே கூடினால் ஓரளவு
பிரயாணச் செலவு குறையும் என்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில்
கூற விரும்புகிறேன்.

நான் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்கிறேன். எதிர்க்
கட்சி கொண்டு வந்த ஒரு தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்
கொள்வது என்பதே ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். அது
வும் இந்தத் தீர்மானம் மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பலனை
அளிக்கின்ற தீர்மானம் என்பது மேலும் மகிழ்ச்சியைத் தரக்
கூடியதாகும். இந்தத் தீர்மானம் 'நான்-அபிஷியல் டே'-ல்
கடைசித் தீர்மானமாக இருந்தால் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்
கொள்ளும் மகிழ்ச்சியோடு செல்லலாம் என்று எதிர்பார்த்தேன்.
ஆனால் 'பேலட்'டில் இது முதல் தீர்மானமாக வந்து விட்டது.
கனம் அங்கத்தினர்கள் மேலும் தீர்மானத்தைப் பிரேரேபிக்கா
மலிருக்க ஆட்சேபணை இல்லையென்றால் இதோடு இன்று நிறுத்திக்
கொள்ளலாம். மகிழ்ச்சியோடு போகலாம்.

MR. SPEAKER : The question is—

"This House recommends to the Government to amend the Madras Payment of Salaries and Removal of Disqualifications Act, 1951 (Madras Act XX of 1951) raising the salary of the Members of the Legislature from Rs. 150 to Rs. 250 per mensem"

The resolution was put and carried.

(3) FIXING OF A TEACHER-PUPIL RATIO IN ELEMENTARY SCHOOLS.

புலவர் கா. கோவிந்தன் : கனம் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தைப் பிரேரேபிக்கின்றேன்—

"தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்—மாணவர் விகிதத்தை ஏற்றவகையில் நிச்சயிக்கவும், வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்னும் விதியை அமலுக்குக் கொண்டு வரவும் வேண்டுமென்று இச்சபை அரசினருக்குப் பரிந்துரைக்கிறது".

The resolution was duly seconded.

MR. SPEAKER : Resolution moved—

"This House recommends to the Government that the Education Department should fix a reasonable teacher-pupil ratio in the elementary schools and should enforce the rule of one teacher for every class."

*புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் இந்த மன்றத்தில் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தது இந்த மாகாணத்தினுடைய மாணவர்களுடைய தரம் நல்ல முறையில் உயர வேண்டுமென்ற ஒரு உயர்ந்த நோக்கத்திற்காகத்தான் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசு கல்வித் துறைக்கு 28 கோடி ரூபாய் செலவிடுகிறது. ஆரம்பப் பள்ளிகளில் ஏறக் குறைய 33 லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். 28 கோடி ரூபாயில் பெரும் பகுதியைக் கொள்வது ஆரம்பக் கல்வியாகும். 33 லட்சம் மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துகிற ஆரம்பப் பள்ளியைப் பொருத்தவரை இப்போது அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முறையால் மாணவர்களுடைய திறமை அதிகமாவதற்குப் பதிலாக திறமை குறைவதற்குத்தான் வழி இருக்கிறது என்பதை உணருகிறேன். ஆகவேதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்தாலொழிய மாணவர்களுடைய தரத்தை உயர்த்த முடியாது. ஆரம்பப் பள்ளிகளிலே படிக்கின்ற இளம் மாணவர்கள் பள்ளிக்கு வருகின்ற நேரம் முதல் பள்ளியை விட்டுச் செல்லுகின்ற நேரம் வரை ஆசிரியர்களுடைய கண்காணிப்பில் இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. ஆசிரியர்களுடைய கண்காணிப்பில் தவறாது இருக்கவேண்டிய நிலையில் இருக்கும் பருவமுடையவர்கள் அவர்கள். அந்த நிலையில் இப்போது நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், பள்ளிக்கு வருகிற மாணவன் ஆறு மணி நேரம் பள்ளியில் இருந்தால் ஒரு மணி நேரந்தான் அவனை ஆசிரியர் கவனிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.

சாதாரணமாகப் பள்ளிக்கூட நாட்கள் ஆண்டுக்கு 200 நாட்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதன்படி ஒரு மாணவன் ஒரு வருஷத்தில் 1,200 மணி நேரம் ஆசிரியர்களிடத்தில் பயிற்சி பெற வேண்டும் என்பது விதி. ஆனால் அந்த நிலைமை உண்மையில் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாணவன் 200 மணி நேரத்திற்கும் உள்ளாகவே

24th January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

தான் பயிற்சி பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறன். எதனுல் இந்த நிலைமை இருக்கிறது என்றுல் ஓராசிரியர் பள்ளிகளில் அந்த ஆசிரியருக்கு 45 மாணவர்கள் இருக்கவேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறர்கள். அந்த முறையில் 1-வது வகுப்பில் 10 பேர், இரண்டாவது வகுப்பில் 10 பேர் என்று ஐந்தாம் வகுப்பு வரையிலும் சேர்த்து 45 மாணவர்கள் இருந்தால் அந்தப் பள்ளிக்கு ஓராசிரியர் என்ற நிலைமை ஏற்படுகிறது. ஐந்து வகுப்புகளையும் ஒரே ஆசிரியர் கவனிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவர் ஒரு வகுப்பு மாணவர்களைக் கவனிக்கும்போது மற்ற நான்கு வகுப்பு மாணவர்களையும் கவனிக்க முடியாது. இப்படிப்பட்ட பாதகமான நிலைமையை நான் உணர்த்தி இந்த மன்றம் உணர்ந்து கொள்ளவேண்டிய அவசியத்தில் இருக்காது என்று நம்புகிறேன். ஆச்சாரியார் ஏற்படுத்திய குலக் கல்வித் திட்டத்திலேகூட ஒரு மாணவனை முழு நேரமும் ஆசிரியர் கவனித்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது. ஆனல் ஓராசிரியர் பள்ளிகளில் அந்த ஆசிரியர் ஒரு மணி நேரந்தான் ஒரு வகுப்பு மாணவனைக் கவனிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு ஆசிரியர்களைக் குறை கூறிப் பயன் இல்லை; இதற்கு அவர்கள் பொறுப்பும் அல்ல. ஆகவே, வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டுமென்ற நிலைமையைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்தால் 28 கோடி ரூபாய்க்கு மேல் மேலும் பல கோடி ரூபாய் செலவு செய்யவேண்டி நேரிடுமே என்று அமைச்சர் அவர்கள் கூறக்கூடும். அதற்கும் இடம் இல்லாத வகையிலே நான் ஒரு திட்டத்தைத் தருகிறேன். அந்தத் திட்டத்தை இந்த அரசு ஏற்றுக் கொண்டால் நிதிநிலைமையில் கை வைக்காமலே ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று ஏற்படுத்த முடியும். அதற்குச் சில புள்ளிவிவரங்களைத் தருகிறேன். அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். என்னுடைய தொகுதியில் அனக்காவூர் பஞ்சாயத்து யூனியன் என்றிருக்கிறது. அங்கு பள்ளிகளின் எண்ணிக்கை 58. ஆனல் வகுப்புகளின் எண்ணிக்கை 287. ஒன்று, இரண்டாம் வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கை 2,879; மூன்றும் வகுப்பு 897, நான்காம் வகுப்பு 652; ஐந்தாம் வகுப்பு 499. இந்த நிலையில் அங்கு பணி புரிகிற ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு 64, ஹையர் கிரேடு 98. இப்போதைய 11-00 a.m. புதிய விதிப்படி, 70 செகண்டரி கிரேட் ஆசிரியர்களும் 93 ஹையர் கிரேட் ஆசிரியர்களும் தேவை என்று சொல்கிறர்கள். 45 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று விதி வகுத்திருக்கிறர்கள். அந்தப் பள்ளியில் ஒரு வகுப்பிற்கு 6 பையன்கள், இன்னொரு வகுப்பிற்கு 10 பையன்கள், இன்னொரு வகுப்பிற்கு 10 பையன்கள் என்று இருக்கும் நிலையைப் பார்க்கும்போது 35-க்கு குறைவாகவே ஒரு ஆசிரியர் இருக்கிறர். அப்படிக் குறைந்த விகிதாச்சாரம் இருந்தும் ஒரு ஆசிரியரே பல வகுப்புக்களை கையாள வேண்டியிருக்கிறது. 35 முதல் 45 வரை என்ற விகிதாசாரம் நான்கு பள்ளிகளில்தான் இருக்கிறது. மற்றப் பள்ளிக்கூடங்களில் 20-க்கு குறைவாகவே ஒரு ஆசிரியர் இருக்கும் நிலை இருக்கிறது. அப்படி இருந்தும் ஒரு ஆசிரியர் பல வகுப்புக்களை நடத்த வேண்டியிருக்கிறது. இந்நிலையில் ஆங்கிலம் கற்பிக்கவேண்டுமென்று மூன்றுவது வகுப்புப் பிள்ளைகளுக்கு ஒரு செகன்டரி கிரேட்

[புலவர் கா. கோவிந்தன்] [24th January 1964

ஆசிரியரை போட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, ஒரு ஆசிரியர் மூன்று வகுப்புக்களை நடத்த வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் நிச்சயமாக தரம் உயருவதற்கு வழியில்லை. இதற்கு என்ன செய்வது? நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். சர்க்கார், கல்வித்துறை விதியில் ஒரு மாறுதல் செய்யவேண்டும். 58 துவக்கப் பள்ளிகள் இருக்கிற இடத்தில் 10 உயர் துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன, 4 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆக நான்கு துவக்கப்பள்ளிகளுக்கு ஒரு இடத்தில் ஒரு உயர் துவக்கப் பள்ளியும், ஒரு உயர்நிலைப் பள்ளியும் இருப்பதால் 1, 2 வகுப்புகளை மட்டும் அந்தந்த ஊர்களில் உள்ள துவக்கப்பள்ளியில் வைத்து விட்டு மூன்றும் வகுப்புக்கு மேல் இருக்கிற வகுப்புகளை, 3, 4, 5 வகுப்புகளை உயர் துவக்கப் பள்ளிக்கும், உயர்நிலைப் பள்ளிக்கும் கொண்டு சென்று விட்டால் 26 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்தும் ஒரு ஆசிரியரே மூன்று வகுப்புகளை நடத்தவேண்டிய நிலை இருக்காது. 45 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருக்கும், ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையும் இருக்கும். அப்படிக் கூறும்போது மாணவர்களை ஊருக்கு ஊர் துரத்துவதா என்று அரசாங்கத் தரப்பிலிருந்து கேட்கக் கூடும். மூன்றாவது வகுப்பிற்கு வரும்போது மாணவர்களுக்கு 9 வயது ஆகிவிடுகிறது. நான்கு ஊர்களுக்கு நடுவில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், உயர் துவக்கப் பள்ளியும் இருப்பதால் 1½ மைல் அல்லது 2 மைல்களுக்கு மேல் செல்லக் கூடிய நிலை இருக்காது. அப்படிச் செய்வதால் வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை ஏற்படும். அதனால் தரமும் உயர வழி உண்டு.

இந்த நிலையில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டிய நிலை இருக்காதா என்று நான் கணக்கிட்டுப் பார்த்த போது ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்று வைத்தாலும் நான்கு ஊர்களில் இருந்தும் பத்துப் பத்துப் பையன்கள் ஒரு இடத்திற்கு வந்து குவிவதால் நான்கு வகுப்பு என்றில்லாது ஒரு வகுப்பைத்தான் ஒரு ஆசிரியர் நடத்த வேண்டிய நிலை உருவாகும். இருக்கக்கூடிய ஆசிரியர்களில் ஒன்றிரண்டு ஆசிரியர்கள் குறைவாகவே இத்திட்டத்தை நிறைவேற்றக் கூடிய நிலை தான் உருவாகும். மேலும், 287 வகுப்புகள் இருக்கிறது என்று சொன்னேன். முதல் இரண்டு வகுப்புகளை மட்டும் துவக்கப் பள்ளியில் வைத்துக் கொண்டு, ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் வகுப்புகளை உயர் துவக்கப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் வைத்துக் கொண்டால் 180-க்கும் குறைவாகத்தான் வகுப்புகள் வருகிறது. அப்படி 100-க்கு மேற்பட்ட வகுப்புகள் குறைவதால் அதற்கு வேண்டிய அறைகள் கட்டும் செலவு குறைகிறது. அதோடு அந்த வகுப்புகளுக்கு வேண்டிய உபகரணங்கள் வகையில் செலவிடும் தொகையும் குறைகிறது. ஆகவே நான் கூறியபடி செய்வதால் தரம் உயர்வதோடுகூட, ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையையும் உருவாக்கலாம். ஆக, ஒரு மாறுதல் செய்து, மூன்றும் வகுப்புகளுக்கு மேற்பட்டுள்ள வகுப்புகளை உயர் துவக்கப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் வரும் நிலையை உருவாக்கி விட்டால் நான் கூறியபடி ஒரு வகுப்புக்கு

24th January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

ஒரு ஆசிரியர் என்ற நிலையை உருவாக்குவதோடுகூட தரத்தையும் உயர்த்த முடியும் என்று கூறிக்கொண்டு என் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

* **திரு. ம. கமலநாதன்** : மன்றத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை வழி மொழிந்து ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். ஆசிரியர்-மாணவர்கள் விகிதாசாரத்தில் ஆசிரியர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் எடுத்துக் கொண்ட முடிவின்படி 300 மக்கள் கொண்ட கிராமத்தில் ஒரு பள்ளி இருக்கலாம் அல்லது ஒரு பள்ளியிலிருந்து ஒரு மைல் அதிகமாக உள்ள இடத்திற்கு ஒரு பள்ளி வைக்கலாம் என்ற நிலை ஏற்பட்டு பரிசீலனை செய்து பள்ளிகளைத் துவக்க பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்ட காரணத்தினால் அங்குள்ளவர்கள் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு பள்ளிக் கூடங்களை திறப்பதில் அதிகக் கவனம் செலுத்தி ஏராளமான பள்ளிகளைத் திறந்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களை திறந்துவிட்ட காரணத்தினால் அதற்கேற்ப ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பும் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு தென் மண்டல மாநில ஆட்சியாளர்கள் கூடி மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் இவ்வாண்டு மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்ற கட்டாயம் இருந்து வருகிறது. அதன் காரணமாக மூன்றாவது வகுப்புப் பிள்ளைகளுக்கு செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது. முன்பு 4, 5 வகுப்புகளுக்குத்தான் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். மூன்றாவது வகுப்பு வரை ஹையர் கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களே இருந்தார்கள். இப்போது மூன்றாவது வகுப்பிலிருந்து செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் போட வேண்டியிருப்பதால் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகும் ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்குள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏராளமான ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து அங்கு ஆசிரியர்களுக்கு வேலை இல்லாத் திண்டாட்டம் உருவாகி இருக்கிறது. அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் திருநெல்வேலியிலிருந்து இங்கு வந்து வேலை செய்யும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. திருநெல்வேலியிலிருந்து பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இங்கு வரும்போது, அவர்களுக்கு இங்கு வேலை கொடுத்து விட்டால் இங்கு பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது பயிற்சி பெறப் போகும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வேலை கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. பொதுவாக ஆரம்பக் கல்வி, மற்ற உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கோ அல்லது கல்லூரிக் கல்விக்கோ ஆதாரமாக திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டிய ஒரு கல்வியாகும். இந்த அடிப்படையில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களை நியமிக்க முடியாத ஒரு சூழ்நிலை, அல்லது ஹையர் கிரேட்

ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படக் கூடிய சூழ்நிலை இருப்ப தால் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னதுபோல் ஒன்று, இரண்டு வகுப்புகளை மட்டும் ஆரம்பப் பள்ளியாக வைத்துக் கொள்ளலாம். உயர் துவக்கப் பள்ளியில் மூன்றும் வகுப்பில் சேர்ந்து படிக்கவேண்டுமென்று இருந்தாலும், உயர்துவக்கப் பள்ளி மற்ற கிராமங்களில் இருந்து அதிக தூரம் செல்ல வேண்டி யிருந்தால் ஒன்றிரண்டு பள்ளிகளுக்கு 3-வது வகுப்பில் இருந்து அனுமதி கொடுக்கலாம். நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள், மூன்றுவது வகுப்பிற்கு ரெக்கக்னிஷன் கொடுக்கக் கூடாது, அங்கு செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத்தான் போட வேண்டும் என்றெல்லாம் கட்டாயப்படுத்தக் கூடாது. ஆக மூன் றுவது வகுப்பு ஆரம்பப் பள்ளியில் இருக்கலாமா, மூன்றுவது வகுப்பிற்கு செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியரைத்தான் போட வேண்டுமா என்பதுபற்றி அந்த அந்த நிர்வாகம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு இத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

* திரு. செ. மாதவன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப் போது சபையின் முன் வந்திருக்கின்ற ஆசிரியர்கள் பிரச்னையில் இரண்டு கருத்துக்களை நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். ஒன்று கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்று கல்வித்துறை யிலுள்ள நிபுணர்கள் எல்லாம் கல்வித்தரம் குறைகின்றது என்ற ஏகோபித்த கருத்து தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். கல்வி யின் தரத்தை உயர்த்த பாடுபட்டுக்கொண்டுதான் இருக்கிறது என்று அரசாங்கம் சொல்லப்போகிறதா அல்லது கல்வியின் தரம் குறையவில்லை என்று அரசாங்கம் வாதாட முற்படுகிறதா? இந்தத் திட்டத்தை திடீரென்று சர்க்கார் யோசிக்காது கொண்டு வந்ததின் காரணமாக ஆசிரியர்கள் பலர் தங்கள் வேலையை இழந்து தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி சட்ட மன்றத்திலும் வெளியிலும் நாங்கள் எடுத்துச் சொன்னதின் பின்னால் அரசாங்கம் ஓர் உத்தரவை பிறப்பித்தது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்குப் பின்னால் என்று சொல்வது தவறு, அதற்கு முன்னாலேயே உத்தரவைப் போட் டிருக்கிறோம்.

திரு. செ. மாதவன்: அவர்கள் வேலையிழந்து தவித்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னாலேயே அரசாங்கம் அவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கின்றதற்கு முன், பல ஆசிரியர் கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார்கள். அந்த நேரத்தில் மட்டுமல்ல, இப்போதும் அரசாங்கம் இந்தப் பிரச்னையில் மௌன மாக இருக்கிறது. இந்த விகிதாச்சாரம் காரணமாக ஏற்கனவே வேலையில் இருந்தவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர் களுடைய பிழைப்பு என்ன ஆவது? . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வேலையில்லாத ஆசிரியர்களை அதே பிராந்தியத்திலுள்ள வேறு இடங்களுக்கு மாற்றியிருக் கிறார்கள். மாற்றப்பட்ட இடங்களுக்குப் போவதற்கு அவர்கள் தயாராக இருக்கவேண்டும். தயாராக இல்லையென்றால் வேலை போய் விடுகிறது.

24th January 1964]

திரு. செ. மாதவன் : வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா இல்லையா என்பதுதான் பிரச்னை. வேறிடங்களுக்கு ஆசிரியர்கள் போகின்றார்களா இல்லையா என்பது வேறு விஷயம். அரசாங்க சட்டத்தின் மூலமாக வேலையில்லாமல் பலர் தவிக்கின்றார்கள். அது உண்மை, யாரும் மறுக்க முடியாது. எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அதோடு ஆசிரியர்களை குறைப்பதற்கு இன்னொரு முறை கையாளப்படுவது, தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற பள்ளிகளில் ஏற்கனவே சர்க்கார் கிராண்ட் கொடுத்துவந்தது. ஆனால் இப்போது ரேஷியோ விகிதாசாரம் வந்ததின் பின்னால், இத்தனை மாணவர்களுககு இத்தனை ஆசிரியர்கள்தான் இருக்கவேண்டும், மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி இருக்கவேண்டிய ஆசிரியர்களுக்குத் தகுந்தவாறுதான் கிராண்ட் கொடுக்க முடியும் என்று சர்க்கார் ஒரு புதிய உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. ஆசிரியர்களை தாங்கள் வெளியேற்றவில்லை, அவர்களை வேலையில் இருந்து போக வேண்டும் என்று உத்தரவு போடவில்லை என்று மக்களிடத்தில் சொல்கின்றார்கள். அதே நேரத்தில் விகிதாசாரப்படி இருக்க வேண்டிய ஆசிரியர்களின் கணக்குப்படிதான் கிராண்ட் கொடுப்போம் என்றும் சொல்லுகிறார்கள். இந்த முரண்பாட்டை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்கவில்லை என்று சொல்லிவிட்டு, மறைமுகமாக வேறு விதத்தில் உத்தரவை போடுகிறார்கள். ஆகவே இதில் ஏற்படுகின்ற கஷ்டங்களை எல்லாம் ஆலோசித்துப் பார்த்து, கல்வியினுடைய தரம் குறையாமல் பார்த்துக்கொள்வதற்கும், ஆசிரியர்களுக்கு எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படாமல் இருப்பதற்கும் வேண்டிய திட்டங்களை தீட்டி செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, உத்தேச தீர்மானம் சம்பந்தமாக ஒருசில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். தீர்மானம் கொண்டு வந்த கனம் புலவர் கோவிந்தன் அவர்கள் மாணவர்களுடைய தரம் குறைந்துவிடாமல் இருப்பதற்கு, ஆசிரியர்களின் விகிதாச்சாரம் குறையவேண்டும். அதோடு இன்னொரு யோசனையை சொல்கின்ற வகையில், ஹையர் எலிமென்டரி ஸ்கூல் மூன்றாவது வகுப்பில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ஒன்றாவது, இரண்டாவது வகுப்புகள் மட்டும் ஆரம்பப் பள்ளி வகுப்புக்களாக இருக்கலாம் என்கின்ற கருத்தினையும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த சபையிலுள்ள அனைவருக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் தெரிந்தது போலவே, நம்முடைய தேசத்திற்கான அரசியல் சட்டம் வகுத்த நேரத்தில், அதாவது 1950-வது வருஷத்தில் குடியரசானதிலிருந்து பத்து வருட காலத்திற்குள்ளாக ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலுள்ள ஆண் பெண் இருபாலருக்கும் நூற்றுக்கு நூறு கல்வி அறிவு கொடுத்தாக வேண்டும் என்ற நியதியை அப்போது வகுத்துக் கொண்டிருக்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [24th January 1964

கிறேம். அதற்கிணங்க ஒவ்வொரு ராஜ்யமும், தங்கள் ராஜ்ய அளவில் எந்த அளவுக்கு அமல் நடத்த முடியுமோ அந்த அளவுக்கு செயலாற்ற நினைந்தன, முயற்சித்தன. அந்த முயற்சி நாம் வகுத்துக்கொண்ட நியதி சித்தி பெருத வகையில் இந்த ராஜ்யத்தில் 1965-வது வருஷ காலத்தில், அதாவது 15 வருட காலத்தில்—நம்முடைய நியதியின்படி 6 முதல் 14-வது வயது வரை என்றிருப்பது—முடியாவிட்டாலும்—ஆறு முதல் பதினென்று வயது வரையில், ஐந்தாவது வகுப்பு வரையிலும் ஆரம்பக் கல்வி கொடுக்க வேண்டும் என்ற இந்த ராஜ்ய அரசாங்கம், இந்த சபையினுடைய சம்மதத்தைப் பெற்று தன்னுடைய திட்டத்தை வருத்துக் கொண்டது. இதில் முக்கியமாக இந்த நியதியை அமல் நடத்துவதற்கு அரசாங்கத்தினுடைய வருவாய், சக்தி, இவைகளையும் பார்த்துக் கணக்கிட வேண்டியிருக்கிறது. கல்விக்காக, நம்முடைய வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை செலவு செய்தும் கூட, எந்த அளவுக்கு செயலாற்ற முடியும் என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்தவாறு ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி, வருஷா வருஷம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளிவந்து கொண்டிருக்கிறார்கள் என்றிருந்தபோதிலும்கூட, குழந்தைகளின் எண்ணிக்கைக்கு உரிய வசதிகள், கட்டிட வசதிகள், இன்னும் இது போன்ற பல வசதிகளை உற்று நோக்கி, ஓர் ஆசிரியருக்கு 35 மாணவர்கள் வரைக்கும் ஆஜராகியிருப்பது, 40 மாணவர்கள் வரை ரோலில் இருப்பது என்கின்ற நிலைமையில் எப்படி சாத்தியப்படலாம் என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்தவாறு இந்த ராஜ்ய அரசாங்கம் தனது நியதியை வகுத்திருக்கிறது என்பது உண்மை. இந்த நிலைமையில், அத்தகைய இலக்கை 1965-வது வருஷத்திற்குள் எட்டவேண்டும் என்று எண்ணி, வருஷா வருஷம் அதற்குத் தகுந்தாற்போல் பட்ஜெட்டிலும், மற்ற நிர்வாக காரியங்களிலும் செயலாற்றி வருகிறது. இந்த நிலைமையில் பல சிக்கல்களும் வருகின்றன. கனம் புலவர் கோவிந்தன் அவர்களுடைய கண்ணேட்டம் போல வெறும் கல்வியின் தரம் உயரவேண்டும் என்கின்ற ஒரு குறிக்கோள் மட்டும் உடையவன் அல்ல. எல்லாக் குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என்கிற கருத்தையுடையவன் நான். கல்வியின் தரம் ஒருபுறம் இருக்க, பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பு, அவர்களுக்குள்ள பலன், இவைகள் எல்லாம் உள்ளடங்கியிருப்பதாக நான் கருதுகிறேன். நம்முடைய ராஜ்யத்தில், 1965-வது வருஷத்திற்குள், ஆறு முதல் 11-வது வயது வரைக்குமாவது நிச்சயமாக ஆரம்பக் கல்வி அறிவை கொடுத்தாக வேண்டும் என்று நாம் முயற்சித்துக்கொண்டிருக்கிறேம். அதே நேரத்தில் மற்ற ராஜ்யங்கள் இந்த அளவுக்காவது தங்கள் திட்டத்தைக் கொண்டு வர இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு மற்ற ராஜ்யங்கள் பின் தங்கி நிற்கின்றன. முன்னுள் பிரட்டீஷார் இருந்து வந்த காலத்தில் நம் சமுதாயத்தில் நூற்றுக்கு 6 பேர்கள்தான் வயது வந்தவர்கள் கல்வி அறிவு பெற்றிருந்தார்கள் என்று கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் எதிர் காலத்தில் வளரக்கூடிய இந்த சமுதாயத்தில் இன்னும் பத்து வருட காலத்தில் குழந்தைகள் எல்லாம், குறிப்பாக

24th January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஏழை குழந்தைகள் எல்லாம் போதுமான அளவுக்கு கல்வியின் தரம் ஏறவில்லை என்றாலும் கூட, ஓரளவுக்கேனும், கல்வி அறிவு பெற்றிருப்பார்களா என்கின்ற கேள்வியை எடுத்துக்கொண்டால், ஓரளவுக்கு கல்வியறிவை குழந்தைகளுக்கு கொடுக்க முடியும் என்ற முடிவுக்குத்தான் இந்த ராஜ்யம் வந்திருக்கிறது. அந்தக் கண் கொண்டு பார்க்கின்ற நேரத்தில் குழந்தைகளின் கல்வியின் தரம் முற்றிலும் குறைந்து வருகிறதா என்கின்ற கேள்வியை எழுப்பிக்கொண்டால், அந்த அளவுக்கு நாம் பயப்பட வேண்டிய அவசியமல்லை. இன்றைய சூழ்நிலையை எடுத்துக்கொண்டுப் பார்த்தால், இப்போதுள்ள குழந்தைகள் எல்லாம் மிக புத்திக்கூர்மையுடன் (சூட்சமமாக) இருந்துகொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற படிப்பு மட்டுமல்ல, தற்போதுள்ள நாகரீக வளர்ச்சி அடைந்திருக்கின்ற இந்த சூழ்நிலையில் இயல்பாகவே சமுதாயத்தில் கல்வி அறிவு வளர்ச்சி அடைகின்ற விதத்தில் (என்விரன்மென்ட்) சுற்றுப்புறம் அமைந்திருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கின்ற நேரத்தில் குழந்தைகளின் கல்வித்தரத்தைக்கண்டு பயப்பட வேண்டிய அவசியமில்லை என்கின்ற முடிவுக்கு வந்துவிடலாம். என்னுடைய அபிப்பிராயம் அது தான். மற்றொரு ஆலோசனையையும் தெரிவித்தார்கள். அதாவது இரண்டாவது வகுப்பு வரை ஆரம்பப் பள்ளியிலும், அதற்கு மேல் உள்ள வகுப்புகள் ஹையர் எலிமெண்டரி பள்ளியிலும் வைத்துவிட்டால், ஆங்கிலம் போதிப்பதற்கும்—மூன்றாவது வகுப்பிலிருந்தே கற்றுக்கொள்வதற்கும் வசதியாக இருக்கும்—ஆகவே இம்மாதிரி மாற்றி அமைத்துவிட்டால் ஆசிரியர்கள் நியமிக்கின்ற விகிதாசாரத்தையும் குறைத்து, அதிகமான அளவில் ஆசிரியர்களை போடுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதைத்தான் அவர்களுடைய கருத்தாக தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். அதில் ஏற்படக்கூடிய மற்றொரு சிரமத்தை கவனிக்கவேண்டும். இன்றைய தினம் ஆயிரம் ஆயிரம் ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாகத்தான் ஏழை எளிய குடும்பங்களிலுள்ள குழந்தைகள், குறிப்பாக ஹரிஜனக் குழந்தைகள், விவசாயக் குழந்தைகள் வீட்டில் இருப்பதை விட்டு, பக்கத்தில் உள்ள பள்ளிகளுக்குப் போய் ஓரளவுக்கு பாடசாலைகளில் நிழலுக்காகவாவது ஒதுங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக லட்சக் கணக்கான குழந்தைகள் பாடசாலைக்கு வந்தது மாத்திரம் அல்ல, ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு, பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், அரைகுறையாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும்—ஆசிரியர் பற்றாக்குறை இருந்தபோது ஓராண்டு பயிற்சி பெற்று செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக வந்திருக்கிறார்கள் அநேகம் பேர்கள்—அத்தகைய பல ஆசிரியர்களுக்கு அதனால் வேலை வாய்ப்புகளும் கிடைத்தது. இரண்டாவது வகுப்புக்கு மேல் அதை ஹையர் எலிமெண்ட்டரி ஸ்கூலில் சேர்த்து விடுவது என்றால், ஹையர் எலிமெண்ட்டரி ஸ்கூல்கள் கிராமந்தோறும் இருக்க முடியாது. கிராம ஜன சங்கியை கண்ணோட்டத்தோடு பார்த்தால் அந்த கிராமத்தில் வைக்க தகுதி, அதற்கான சந்தர்ப்பம், பிள்ளைகளின்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [24th January 1964

சங்கியை எல்லாம் போதுமானதாக இருக்காது. அந்த நிலையில் பக்கத்து கிராமத்தில் உள்ள ஹையர் எலிமெண்ட்டரி ஸ்கூலுக்கு குழந்தைகளை அனுப்ப, 2 மைல் அல்லது 3 மைல் போய்—3-வது படிக்கவேண்டுமென்றால் அந்தக் குழந்தைகளுக்கு 7 அல்லது 8 வயது நிறைந்திருக்கும்—அத்தகைய குழந்தைகள் தினந்தோறும் நடந்து போய் படித்து வரக் கூடிய நிர்ப்பந்தமான நிலைமை இருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா என்ன? அத்தகைய ஒரு நிலை வருமேயானால் ஏழை மக்களுடைய குழந்தைகள் 3-வது வகுப்பு கூட படித்து கல்வி பெற முடியாத கஷ்டம் ஏற்பட்டு விடும் என்பதை உணர வேண்டும். தீர்மானத்தைப் பொறுத்த மட்டில் சொல்லப்பட்ட இரண்டு ஆலோசனைகளைப் பார்க்கும்போது ஒன்று, கல்வியின் தரம் குறைந்து விடும் என்ற பயம் வேண்டியதில்லை. இரண்டாவது ஆலோசனையான 3-வது வகுப்பிலிருந்து ஹையர் எலிமெண்ட்டரி சேர்த்து விடவேண்டுமென்று சொல்லுவது சரியானதாக ஆகாது. இப்போது உள்ள ஓராசிரியர் பள்ளியை எடுத்துக்கொண்டால், படிக்கக் கூடிய குழந்தைகள் 30 பேர்கள் இருக்கும் இடத்தில் 5-வது வகுப்பில் படிக்கக் கூடியவர்கள் 4 பேர்கள் இருக்கலாம், 4-வது வகுப்பில் 2-3 பேர்கள் இருக்கலாம், 2-வது வகுப்பில் 10 குழந்தைகள் இருக்கலாம், 1-வது வகுப்பில் 10 குழந்தைகள் இருக்கலாம். இத்தகைய ஒரு பள்ளி இரண்டாவது வருஷத்தில் 2 ஆசிரியர்களாகி, மூன்றாவது வருஷத்தில் 3 ஆசிரியர்கள் என்று இந்த மாதிரி ஓராசிரியர் பள்ளியாக இருந்தது, 9 ஆசிரியர்களைக் கொண்ட பள்ளியாக 5 ஆண்டுகளில் வளர்ந்திருப்பதை நானே பார்த்திருக்கிறேன். ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் கொடுத்து விடவேண்டும் என்று அவர்கள் தீர்மானத்தின் மூலம் கொடுக்கக் கூடிய வாய்ப்புக்கு அவசியம் இருக்காது. இதிலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் ஒரு ஆசிரியருக்கு 35 குழந்தைகள் வேண்டுமென்று வைத்திருப்பது, நாற்பதாவது ரோலில் வரவேண்டுமென்பது அடிப்படை. எனக்குத் தெரிந்த சில விவரங்கள் படி சமீபத்தில் ஒரு ஆண்டுக்கு மத்தியில் இதைச் செயல்படுத்தும் விஷயத்தில் ஒரு ஆசிரியருக்கு 45 குழந்தைகளாவது சராசரி இருக்கவேண்டும், 84 பேர்கள் இருக்கும்போது 2 ஆசிரியர்கள், மூன்று ஆசிரியர்களுக்கு 125 குழந்தைகள், 4 ஆசிரியர்கள் இருந்தால் 154 பிள்ளைகள் என்று நினைக்கிறேன். இது எந்த விதாசாரத்தில், எந்த நியதி அடிப்படையில் இது போன்று வகுக்கப்பட்டது என்று புரியவில்லை. இது 'மோர் ஆர் லெஸ் இல்லாஜிகல்' ஒரு ஆசிரியருக்கு 35 குழந்தைகள் என்ற விதாச்சாரம் தான் இந்த ராஜ்ய சட்ட சபையின் அங்கீகாரம் பெற்றது. பின்னால் இலாகா பூர்வமாக அப்போது இருந்ததற்குப் பரிகாரம் காணுவது போலத் தான் இரண்டு ஆசிரியர்கள், மூன்று ஆசிரியர்கள் இதற்கெல்லாம் இத்தனை மாணவர்கள் என்ற விதாச்சாரத்தை வகுத்துக் கொண்டதாக அறிகிறேன். இது எந்த அளவுக்கு சிறந்த பரிகாரத்தைக் கொடுத்திருக்கிறது என்று அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். இந்த விதாச்சாரத்தினால் அதிகப்படி ஆசிரியர்கள் இருந்தார்கள். கனம் அங்கத்தினர் மாதவன் குறிப்பிட்டபடியோ, அல்லது வேறு சில நண்பர்கள் குறிப்பிட்டபடியோ எந்த ஆசிரியரையும் வேலையி

24th January 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

லிருந்து நீக்குவதற்கு இடமே இல்லை. அம்மாரி நீக்கக் கூடாது என்று சட்ட பூர்வமாக, இலாகா தாக்கீது பூர்வமாக இருக்கிறது. ஏதாவது மானேஜ்மெண்ட் நீக்கியிருந்தால் சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக இருக்கலாமே தவிர ஆசிரியர்களுக்கு பந்தோபஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இருக்கிற குறையெல்லாம் புதிதாக வரக் கூடிய ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு குறைந்திருக்கிறது என்பது தான். திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் நான் முன்பு ஒரு தடவை எடுத்துக் காட்டியபடி எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகளில் 1,700 பேர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். பதிவு செய்துகொள்ளாதவர்கள் 300, 400 பேர்கள் இருக்கலாம். ஆசிரியர்கள் பயிற்சி பெற்று மூன்று ஆண்டுகளுக்குள் அவர்கள் வேலை பார்க்கவேண்டும். தாங்கள் வாங்கிய ஸ்டைஃபண்டுக்குத் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமென்றால் அவர்கள் மூன்று ஆண்டுகளுள் வேலை பார்க்கவேண்டும். எந்த அளவுக்கு அவர்களுக்கு ஸ்டைஃபண்ட் தங்கப்போகின்றது, அல்லது வாங்கிய ஸ்டைஃபண்டைத் திருப்பிக் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்ப்ளஸ் எல்லாம் தீர்ந்துவிடும் என்றாலும் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகிறது. எல்லா ஜில்லாக்களிலும் இந்த மாதிரியான நிலைமை தான் இருக்கும் என்று நினைக்கிறேன். இங்கே சொல்லும்போது மற்ற ஜில்லாக்களுக்குப் போகச் சொன்னால் ஆசிரியர்கள் போகத் தயாராயில்லை என்று சொன்னார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் அந்தமாதிரி சில ஆசிரியர்கள் வெளி ஜில்லாக்களில் வேலை ஏற்றிருக்கிறார்கள், ஏற்றுப் போயிருக்கிறார்கள். இன்னும் போகச் சொன்னாலும் போகத் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலை ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும் இருக்கும் என்று அஞ்சுகிறேன். அரசாங்கத்திலே செலவு செய்து, ஸ்டைஃபண்ட் கொடுத்து, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கான பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்றால் நாம் வகுத்துக்கொண்டிருக்கிற 1 : 35 அல்லது 1 : 45, 2 : 84 என்ற விதாச்சாரமெல்லாம் சரிதானா, 1956-க்குள் ஆரம்பக் கல்வி கொடுக்கக்கூடிய நிலை இருக்கும் என்பது நடக்கக் கூடியது தானா என்று பரிசீலனை செய்ய அரசாங்கம் கடமை பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வர இருக்கிறார்கள். ஆயிரம் ஆயிரம் பேர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். "ப்ரைவேட் ஸ்கூல்ஸ் ரன் பை மிஷ்ஷனரீஸ் அண்ட் அதர்ஸ்", அல்லது யார் நடத்திக்கொண்டிருந்தாலும் இன்றைய தினம் இருக்கக் கூடிய கணக்குப்படி திருநெல்வேலி ஜில்லாவில் மாத்திரம் ஸர்ப்ளஸ் ஆசிரியர்கள் 1,500 அல்லது 2,000 பேர்கள், அதே அளவில் மாநிலம் பூராவிலும் 10,000 பேர்கள் இருப்பார்கள். சர்க்கார் விதாச்சாரப்படி அவர்களை அப்ஸார்ப் செய்து வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமானால் எங்கள் ஜில்லாவிற்கே 5 ஆண்டு காலம் ஆகும் என்ற நிலைமை வருமானால், சர்ப்ளஸ் இல்லாமல்

செய்யவே 5 ஆண்டு காலம் ஆனால், இன்னும் எத்தனை ஆண்டு காலம் புதிதாக வரக் கூடிய ஆசிரியர்களுக்கு வேலை அளிப்பது பற்றி தீவிரமாக மறு பரிசிலனை செய்யவேண்டும். தனியார் எலிமெண்ட்டரி பள்ளிகள் 18-லிருந்து 24 வரையில் தான் விதாச்சாரம் வொர்க்கவுட் ஆகிறது. பஞ்சாயத்துக்களில் 29-லிருந்து 32 வரையில் ஆசிரிய மாணவ வீதாச்சாரம் இருக்கிறது. இப்போது வகுத்துக்கொண்டிருக்கிற நியதிப்படியோ அல்லது அதை மாற்றியோ முறையாக ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், வகுத்துக்கொண்டிருக்கிற திட்டத்தில் செயலாற்றுவதில் தடங்கல் இருந்தால் சரியான திசையில் மாற்றுவதற்கும் இதை மறு பரிசிலனை செய்வது நல்லது. கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் குறிப்பிட்டிருக்கிற விஷயங்களில் இதற்கு மேல் சொல்லுவது அழகல்ல. எனவே வருகிற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் இதைப் பற்றி தீவிரமாக இலாகாவைக் கலந்து தீவிரமாக, அவசரமாக, அவசியமாக தக்க ஏற்பாடுகளைச் செய்வது அவசியம் என்று மாத்திரம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில் சில கருத்துக்கள் மாறுபட்ட கருத்துக்களாக இருக்கின்றன. அதை இந்தச் சபையிலே நானும் சொல்ல விரும்புகிறேன்.

அதாவது ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே மாணவர்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பதிலே ஒரு வீதாச்சாரத்தை அமைத்திருக்கிறார்கள். வகுப்புக்கு ஒரு ஆசிரியரை நியமிக்கவேண்டும் என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்திலே, நான் கிராமப்புறத்திலிருந்து வரக்கூடிய ஒரு எம்.எல்.ஏ. நான் என்னுடைய பகுதியில் நேரில் கண்டதை வைத்துச் சொல்லும்போது, அது எவ்வளவு சாத்தியம் என்று பார்க்கும்போது, நடைமுறையில் நடக்க முடியாது இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக மருத்துவ ஆஸ்பத்திரியில் எடுத்துக்கொண்டால், ஒரு ஆஸ்பத்திரியில் 1,000 படுக்கை இருக்கும் அளவுக்கு அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அங்கே 1,800 பேர்கள் இருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் அவ்வளவு தூரம் ஆஸ்பத்திரியில் படுக்கக் கூடிய சூழ்நிலைக்கு மக்கள் தொகை பெருகியிருக்கிறது. அந்த அளவுக்கு ஏழை எளிய மக்களிடம் படிக்கவேண்டுமென்ற உணர்ச்சி கிராமங்கள்தோறும் ஏற்பட்டு பள்ளியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நேரத்திலே 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று அவர்கள் குறிப்பிடுகிற அல்லது 30-க்கு என்று வைத்துக்கொண்டாலும், 32 அல்லது 33 வந்தால் என்ன செய்வது என்று அங்கே யோசனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த மாதிரி திட்டவட்டமாக இத்தனை மாணவர்கள் என்று அறுதியிட்டுச் சொல்லுவதாலே மாணவர்கள் தரம் உயர்ந்து விடும் என்று கூடச் சொல்ல முடியாது. அப்படி சொல்லப்போனால் 4, 5 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருந்தால் தான் கண்காணிப்பு நன்றாக இருக்க முடியும். வீட்டிலே கூட 2

24th January 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

3 குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கத்தான் சரியாக இருக்கிறது. அந்த நிலையில் 500 மாண வர்களைப் பார்த்துக்கொள்கிறார்கள் ஆசிரியர்கள். இந்த அள வுக்கு நடைமுறையில் கொண்டுவர முடியாது. நம் குழந்தை களுக்குக் காட்டும் அக்கறை மற்ற குழந்தைகளுக்குக் காட்ட வில்லை என்று சொல்லக் கூடிய நிலை கூட வந்துவிடும். ஆகையி 11-30 a.m. னாலே, கிராமப்புறங்களிலே ஏழை, எளிய மக்கள், சாதாரண மக் கள் படிக்க முன்வந்திருக்கிற இந்த சமயத்தில், இப்படி 4, 5 மாணவர்கள் அதிகப்படியாக இருப்பதின் காரணத்தினாலே அவர் களை வகுப்பிலே சேர்த்துக்கொள்ளக்கூடாது, அப்படி சேர்த்துக் கொண்டால் இன்னொரு ஆசிரியர் நியமிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தி அந்த மாணவர்களின் படிப்பை கெடுக்கக்கூடாது என்று இந்தச் சபையின் முன்பு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று அவர் கள் கூறுகிறார்கள். அது எவ்வளவு தூரம் நன்மை பயக்கும், அதற்கு சாத்தியக்கூறு இருக்குமா என்பதை அவர்களே சொல்ல வேண்டும். அவர்கள் சொல்லும்பொழுது, முதல் வகுப்புக்கு 10, இரண்டாம் வகுப்புக்கு 10, இப்படி 5 வகுப்புகள் வரையிலும் 10, 10 என்று சொல்லி 50 மாணவர்கள் என்று குறிப்பிட்டார்கள். பெரும்பாலும், கிராமங்களிலே 10 மாணவர்கள் அளவுக்கு ஒரு வகுப்பில் இருப்பதாகத் தெரியவில்லை. என்னைக் கேட்டால், சாதாரணமாக ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரையில் படிக் கக்கூடிய மாணவர்களுக்கு பெரும்பாலும் ஒரு மணி நேரம், 2 மணி நேரம் தான் போதிக்க முடியும். அதற்கு மேல் அவர் களுக்கு போதிக்கவே முடியாது. அவர்களை நன்றாக விளையாட விடவேண்டும். ஒரு ஆசிரியர் முதல் வகுப்பிலிருந்து ஆறாவது வகுப்பு வரையிலும் இருந்தால், அவர் 6 மணி நேரத்தில் 5 மணி நேரம் மாணவர்களை கவனிப்பதே இல்லை என்று அவர் குற்றம் சாட்டினார். அவர் ஏன் அப்படி கவனிக்க முடியாது என்பதை அவரே விளக்கி கூறியிருக்க வேண்டும். மாணவர்களுக்கு அவர் கள் சுதந்திரம் கொடுக்கவேண்டும். அவர்கள் இச்சைப்படி அவர்கள் இருப்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அவர் களுக்கு எதை போதிப்பது? வார்த்தைகளை, எழுத்துக்களை போதிக்கலாம். விளையாட்டிலேயே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கைவேலைகள் சொல்லித் தர வேண்டும். ஒரு ஆசிரியர் 30, 40 மாணவர்களை கவனிப்பதிலே சிரமம் ஏற்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அதற்கெல் லாம் நமக்கு நிதி வசதி வேண்டும். 20, 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருந்தால் நலமாகத்தான் இருக்கும், அதில் சந்தேகம் கிடையாது. ஒரு வகுப்புக்கு 10, 10 மாணவர்கள் என்று குறிப் பிட்டார்கள். பெரும்பாலும், 10, 10 மாணவர்கள் உள்ள 5 வகுப் புகள் எங்கேயாவது இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று நியமித்து, அந்த ஆசிரியரே எல்லா வகையான பாடங்களையும் கவனித்துக்கொள்ளவேண்டு மென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அது மாணவர்கள் படிக் கக்கூடிய சந்தர்ப்பத்தைக் குறைக்கும் என்று இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [24th January 1964

அடுத்து, இரண்டாவது வகுப்பு வரையில் எலிமெண்ட்டரி ஸ்கூல் என்று வைத்துக்கொண்டு, 3-வது வகுப்பிலிருந்து உயர் நிலை தொடக்கப்பள்ளியுடன் சேர்க்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், மாகாண கல்வி ஆலோசனைக் கமிட்டியில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அங்கத்தினராக இருக்கிறார்கள். அவர் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் ஆரம்பப்பள்ளி என்பது நிச்சயம். இதை மாற்றக்கூடாது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 11 வருஷ கல்வி, அதிலே ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை ஆரம்பப் பள்ளி என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர் ஒத்துக்கொண்டிருக்கும்பொழுது, இம்மாதிரி கனம் அங்கத்தினர் ஆலோசனை சொல்லுகிறார். இப்படியெல்லாம் ஆரம்பப்பள்ளியில் இரண்டாவது வகுப்பு வரையில் தான் இருக்கவேண்டும், அதற்கு மேல் இருக்கக்கூடாது ஒன்று சொல்லி அதற்கு மேல் இருக்கக்கூடிய வகுப்புகளுக்கு புதுப்புதுப் பெயர் கொடுத்து ஆண்டுதோறும் திருத்திக்கொண்டே இருப்போமேயானால், பஞ்சாயத்துக்களில் பள்ளிகள் இருக்கின்றன பஞ்சாயத்து யூனியன்களில் பள்ளிகள் இருக்கின்றன, உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன, இவைகளுக்கெல்லாம் சங்கடமாக இருக்கும். மேலும், அதனால் குழந்தைகள் படிக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை இருக்காது. சாதாரணமாக 45, 47 குழந்தைகள் ஒரு வகுப்பில் இருக்கிறார்கள். ஒன்று முதல் ஏழாவது வகுப்பு வரைக்கும் நல்ல தரத்துடன் தான் மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுடைய ஹெட்மிஸ்டிரஸ் 1,000 பிள்ளைகளுக்கும் இருக்கிற தனி குணங்களைச் சொல்லுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் அதே வேலையாக இருக்கிறார்கள். ஆனால், நம்மைப் போல் அரசியல் வாழ்க்கையிலும் ஈடுபட்டு, ஆசிரியர் தொழிலிலும் பணியாற்றி வருபவர்களுக்கு வேண்டுமானால், மாணவர்களுடைய தனித் தன்மை தெரியாது இருக்கலாம், மறதியின் காரணமாக, சூழ்நிலையின் காரணமாக. அதே தொழிலாக இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு 1,000 மாணவர்களுக்கும் உள்ள தனிப்பட்ட குணநலன்களை, தன்மையை தெரிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகையினாலே, ஆசிரியர்களுக்கு ரொம்பக் குறைவாக மாணவர்களைக் கொடுத்தால், அவர்கள் வேலையை மிகத் திறமையாகச் செய்வார்கள் என்று சொல்லி இங்கே மாணவர்கள் குறைவாக இருக்கிறார்கள், ஆகையினால் ஆசிரியர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும்படி வற்புறுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 7, 8 ஆண்டுகளாக ஒரு பள்ளியில் ஹெட்மிஸ்டிரஸ்-ஆக இருப்பவருடைய நிலைமையை பார்க்கிற பொழுது, நான் 1,000 என்று சொன்னேன். 1,300 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். அங்கே இருக்கிற ஒவ்வொரு குழந்தையின் குணநலங்களை அவர்கள் பேசும்பொழுது மிக அருமையாகச் சொல்லுகிறார்கள். அவ்வளவு திறமை ஆசிரியர்களிடத்தில் இருக்கிறது. அப்படி தெரியாத தன்மை ஆசிரியர்களிடத்தில் இருப்பதாகச் சொல்வது ஆசிரியர் சமுதாயத்தையே குறை கூறுவது ஆகும். ஆகையினால், மாணவர்களைக் குறைத்து ஆசிரியர்களுடைய வேலை பறிபோகக்கூடாது என்பதை இந்த நோக்கில் சர்க்காரிடம் வற்புறுத்திக்கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

24th January 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

குறிப்பாக என்னை சொல்லச் சொன்னால், கோவை ஜில்லாவில் வேறு ஜில்லாக்களிலிருந்து பல ஆசிரியர்கள் வந்து வேலை செய்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. ஏனென்று கேட்டால், சர்க்கார், வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு, டிரையினிங் ஸ்கூலுக்கு ரெகக்னிஷன் கொடுப்பதில் ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கேயே படித்தவர்கள் 2,000 அப்ளிகேஷன் கொடுத்தால், 100 பேர்கள் 200 பேர்கள் தான் எடுக்கிறார்கள். அங்கே இருக்கிறவர்களில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது. வேறு ஜில்லாக்களிலிருந்து வருபவர்களை தான் குறை சொல்லவில்லை. அந்த வட்டாரத்தில் இருப்பவர்களே அங்கே ஆசிரியர்களாக வேலை செய்வார்களேயானால், அந்தக் குழந்தைகளின் தரம் உயர்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

இரண்டாவது வகுப்பு வரையில் மட்டும் எலிமெண்டரி ஸ்கூல் என்று சொல்லுவது பொருத்தமில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் 10 10 மாணவர்கள் போதும், அதற்கு ஒரு ஆசிரியர், ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கவேண்டும் என்று சொல்லுவது பொருத்தமாகாது. அப்படியிருக்கவேண்டுமென்றால், பணத்திற்கு எங்கு போவது? நமது நிதி நிலைமையையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பற்றாக்குறை இருக்கும் இந்த நேரத்தில், இந்த சூழ்நிலையில் கிராமப் புறங்களிலிருந்து ஏழை எளிய ஹரிஜன மக்கள், விவசாயக் குழந்தைகள் படிக்க வருகிற இந்த நேரத்திலே, மாணவர்களின் எண்ணிக்கையை நாம் அதிகப்படுத்தக் கூடாது என்று கண்டிப்பு பண்ணி, 4 மாணவர்கள் அதிகமாக வந்தால், ஒரு ஆசிரியரை நியமிக்கவேண்டும், அந்த மாணவர்களை அனுமதிக்கக்கூடாது என்று சொன்னால், ஒரு கிராமத்தில் அடுத்த பள்ளி மூன்று மைல் தூரத்திற்குள் இருக்காது, ஆகவே அந்தப் பள்ளியில் அந்த மாணவனைச் சேர்த்துக்கொள்ளாவிட்டால், அவன் 3 மைல் தூரம் சென்று அடுத்த பள்ளியில் படிக்கவே போகமாட்டான். 2, 3 குழந்தைகளை அதிகமாக சேர்த்துக்கொண்டால் தவறு ஒன்றும் ஏற்பட்டுவிடாது என்று இந்தச் சபையின் முன்பு சொல்லிக்கொள்கிறேன்.

ஆறு மணி நேரத்தில், 5 மணி நேரம் ஆசிரியர் மாணவர்களை கவனிப்பதில்லை என்று சொல்வது ரொம்ப வருந்தத்தக்கது. எந்த ஆசிரியரும் தனது மனச்சாட்சிக்கு விரோதமாக ஒரு மணி நேரம் மட்டும் மாணவர்களை கவனித்துவிட்டு, மற்ற 5 மணி நேரம் அவர்களை கவனிக்காமல் விட்டுவிட மாட்டார்கள். அப்படி கவனிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? எப்படி அவர்கள் மாணவர்களை 4, 5 மணி நேரம் கவனிக்காமல் போய்விட முடியும், அது எப்படி சாத்தியம் என்பதையும் கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கியிருக்கவேண்டும். 5, 6 மணி நேரமும் கல்லூரியில் லெக்சர் கொடுப்பதுபோல், 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களை விளையாடவும் விடவேண்டும். அதற்கு விளையாட்டுக் கருவிகளெல்லாம் இருக்கின்றன. ஒன்று முதல் நான்கு வகுப்பு வரை

ஒரே கருவிகளைத் தான் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகையினால், முதல் வகுப்புக்கு முதல் மணி நேரம், இரண்டாம் வகுப்புக்கு இரண்டாவது மணி நேரம் என்று இப்படி மாறி மாறி ஒரே விளையாட்டு அறையில் தான் அவர்களை விளையாட விடுகிறார்கள். அந்த சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று சொல்லக்கூடிய இந்தத் தீர்மானம் வற்புறுத்தப் படவேண்டிய அவசியம் இல்லை. நான் சர்க்காரை கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், வேலையில்லாமல் இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். எங்கள் மாவட்டத்தில் இந்தக் கஷ்டம் இல்லை, இருந்தாலும் வேறு மாவட்டங்களில் இருக்குமானால், அதையும் கவனித்து வேலை இழந்திருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். என்னுடைய வட்டாரத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கு அனுமதி கொடுத்து, எங்கள் ஜில்லாவில் இருக்கக்கூடியவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் ஆசிரியர்கள் அந்தந்த மாவட்டத்தில் வேலை செய்தால்தான் நல்லது. வேறு ஜில்லாவிலிருந்து வந்தால் தரம் குறையக்கூடும். வேறு மாவட்டத்திலிருந்து வந்தால், பொங்கல் என்று சொன்னாலே, இடையிலிருக்கும் நாட்களையும் சேர்த்து 4, 5 நாட்கள் சேர்ந்தாற்போல் லீவு போட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். ஆகையால், இம்மாதிரி வசதிகளை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: 'இன்டக்ரேஷன் அமங் டிஸ்டிரிக்ட்ஸ்' வேண்டாமா?

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் அங்கத்தினர் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் கிராமப்புற ஏழை விவசாய ஹரிஜனக் குழந்தைகளுடைய கல்வி நலனை பாதிக்கும். ஆகையினால் இதை வற்புறுத்தாமல் இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, . . .

MR. SPEAKER: The hon. member must be very brief.

*திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானத்தை மிக அவசியம் என்று கருதி, ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல முற்படுகிறேன். சமீபத்தில் நான் எங்கள் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஒரு ஆரம்பப் பள்ளிக்கு விஜயம் செய்திருக்கிறேன். அங்கே எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று அந்தப் பள்ளியில் போய் விசாரித்தேன். 2 ஆசிரியர்கள் அங்கு இருந்தார்கள். 'எத்தனை வகுப்பு வரையில் இந்தப் பள்ளி இயங்குகிறது' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள்: 'ஐந்தாவது வரையில் இந்தப் பள்ளிக்கூடம் இயங்குகிறது' என்று சொன்னார்

24th January 1964] [திரு. எஸ். ஜே. ராமசுவாமி]

கள். "என்ன ஐயா இது, ஐந்து வகுப்புகள் வரையிலும் இந்தப் பள்ளி இயங்குகிறது, இரண்டு பேர்கள் தான் இருக்கிறீர்கள். எப்படி ஐந்து வகுப்பு வரையிலும் இது இயங்கும்" என்று என்னுடைய வியப்பைத் தெரிவித்தேன். சட்டம் ஒருபுறம் இருக்கிறது. எப்படியிருந்தாலும் ஒரு பள்ளிக்கு ஒரு உபாத்தியாயர் தேவை. நான் படிக்கும் காலத்திலும் அப்படித்தான் இருந்தது.

கனம் சபாநாயகர்: பள்ளிக் கூடத்துக்கு ஒரு வாத்தியார் இல்லை, ஒரு வகுப்புக்கு ஒரு வாத்தியார் என்று சொல்லுங்கள். (சிரிப்பு.)

திரு. எஸ். ஜே. ராமசுவாமி: ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் தேவை என்றுதான் நானும் சொல்லுகிறேன். அது மிகவும் நியாயமானது. அப்படியல்லாமல் மொத்தம் இரண்டு வாத்தியார்களை வைத்துக் கொண்டு ஐந்தாவது வகுப்பு வரையிலும் நடத்த வேண்டும் என்று சொன்னுல் எப்படி நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுக்க முடியும்? எவ்வளவுதான் பீரியடுகளை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டாலும் இரண்டு வாத்தியார்களால் ஐந்து வகுப்புகளுக்கு சொல்லிக் கொடுக்க முடியாது. ஆகவே 35 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தை மாற்றி எவ்வளவு பிள்ளைகள் இருந்தாலும் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் போட வேண்டியதுதான். ஒரு வகுப்பில் 10 பிள்ளைகள் இருந்தாலும்கூட ஒரு உபாத்தியாயர் போட வேண்டியதுதான். 3 உபாத்தியாயர்கள் இருந்தால் 3 வகுப்புகள் மட்டும் வைத்தால் போதும். இன்னும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருந்தால், இரண்டு வாத்தியார்களைப் போட்டு, இரண்டு வகுப்புக்கள் நடத்தினுல் போதும். அதற்கு மேலே உள்ள வகுப்புகளில் படிக்க வேண்டும் என்று சொன்னுல், இரண்டு அல்லது மூன்று மைல் தொலைவில் உள்ள பக்கத்து ஊர்களுக்கு மாணவர்களை அனுப்பி வைக்கலாம். இதுதான் என்னுடைய யோசனை. இரண்டு உபாத்தியாயர்களை வைத்துக் கொண்டு ஐந்தாவது வகுப்பு வரை சொல்லிக் கொடுப்பது என்றுல் அது உசிதமானது அல்ல. படிப்பின் தரம் கெட்டு விடும். மேலும் அதிக மாணவர்கள் இருந்தால் அவர்களை சரியாக கவனிக்க முடியாது. ஆகவே என்னுடைய யோசனையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, regarding the teacher-pupil ratio of one teacher for every class, this may not be helpful for the pupils and the teachers also may not find it convenient to teach throughout the day for the pupils. And this is not in good spirit also. In a way it would be useful for the better teaching of students providing at the rate of one teacher for a class.

Now I would like to refer to one important matter. In elementary schools the proportion of teacher-pupil ratio may kindly be re-considered and the previous slab system may be introduced in the elementary and higher elementary schools. To-day we see that

most of the higher elementary schools are being opened within a radius of one or two miles where high schools have already been opening of higher elementary schools within a radius of one or two opening of higher elementary schools within a radius of one on two miles may be avoided and the opening of such schools is not conducive to the advantage of the students. In the connection, I must point out that the students in the higher elementary schools who have passed the Eighth Standard are not admitted in the high schools and this is causing a lot of inconvenience to the students. Therefore, I request that the opening of higher elementary schools in places within a radius of one or two miles where high schools have already been opened, may be avoided. With these words, I resume my seat.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அரசினர் பிறப்பித்திருக்கக்கூடிய இந்த உத்தரவுப்படி ஆசிரியர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. அதை ஆலோசிக்கவேண்டும். 45 மாணவர்கள் என்று இல்லை. "45 மாணவர்கள் சராசரி அட்டன்டென்ஸ் இருக்கிற அளவுக்கு ஒரு ஆசிரியர்" என்று இருக்கிறது. இதற்கு முன்பு, 35-க்கு மேல் 36 மாணவர்கள் இருந்தால் இரண்டு ஆசிரியர்கள் போட வேண்டும் என்று இருந்தது. அந்த விகிதாசாரத்தை இப்பொழுது அதிகப்படுத்தியிருக்கிறார்கள். பல பள்ளிகளில் ஆசிரியர்கள் சர்ப்ளஸாக இருப்பது ஒரு பிரச்னை. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் இருப்பது இன்னொரு பிரச்னை. ஒரு ஆசிரியர் இருக்கக்கூடிய பள்ளிகளில் அதிக வேலைப் பளு ஏற்பட்டிருப்பது மூன்றாவது பிரச்னை. இந்த மூன்றையும் எப்படித் தீர்க்க வேண்டும் என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது ஆசிரியர்கள் அதிகமாக இருக்கிறார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று சொல்லும்பொழுது இன்னும் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளை தொடர்ந்து நடத்துவதற்கு அவசியம் இருக்கிறதா, இன்னும் எவ்வளவு ஆண்டுகளில் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பது கவலையோடு கவனிக்க வேண்டிய ஒரு பிரச்னை. கல்வி ஆலோசனைக் குழு அடுத்தமாதம் எழாம் தேதி கூட இருக்கிறது. அதிலும் இந்த விஷயத்தை விவாதித்து பரிகாரம் தேட வேண்டும் என்பதற்காக நான் இதை அனுப்பியிருக்கிறேன். அங்கே விவாதத்திற்கு வரும் என்றும் எதிர்பார்க்கிறேன். அங்கே சீரான முறையில் இதை பரிசீலிக்க முடியும். ஆகவே இந்தத் தீர்மானத்தை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் இதை ஓட்டு எடுப்பதற்கு வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் இந்த சபையே அதை நிராகரித்துவிட்டது என்று சொல்லக்கூடும். முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு ஓரே காரணத்தைத்தான் சொல்ல முடியும். அதாவது அதிகப்பணச் செலவு ஆகும் என்று சொல்லலாம். வேறு ஒரு காரணத்தையும் சொல்ல முடியாது. கல்வித் தரத்தின் அடிப்படையில் பார்த்தால், மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது அவசியம் என்பதை முதல் அமைச்சர்

24th January 1964] [திரு. மி. கலியாணசுந்தரம்]

அவர்கள்கூட ஒப்புக் கொள்வார்கள். நான்கு ஆண்டு காலமாக கல்வி ஆலோசனைக் குழு, எல்லாக் கல்வி நிபுணர்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் கொண்ட அக்குழு, இதை பரிசீலனை செய்தது. அதற்குப்பிறகுதான் பழைய முடிவு எடுக்கப்பட்டது. அப்படியிருக்கும்பொழுது திடீரென்று மாற்றுவதற்கு ஒரு காரணம் இருக்க முடியும் என்றால், அது பணச் செலவு அதிகமாகிறது என்பது தான். பணச் செலவை எப்படித் தடுப்பது, எப்படிச் சிக்கனம் செய்வது என்பது வேறு விஷயம். அதைத் தனியாக ஆலோசிக்க வேண்டும். ஒரே பஞ்சாயத்து யூனியனில் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் சர்ப்ளஸ் ஆக இருக்கும் பொழுதுகூட, தனியார் பள்ளிக்கூடங்களுக்கு அங்கிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஏன் கொடுக்க வேண்டும்? பஞ்சாயத்து யூனியன்களே இவைகளை ஆரம்பித்தால் என்ன? இறுதியாக இதற்கு ஒரு முடிவு வேண்டும் என்று சொன்னால் தனியார் துறையிலே இந்தப் பள்ளிகளை விட்டுவைக்க வேண்டிய அவசியம் இல்லை. தனியார் துறையில் இருப்பதனால் தான் சங்கடம் உண்டாகிறது. பெரும்பாலும் பஞ்சாயத்து யூனியன்கள் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கின்றன. நகரங்களிலே முனிசிபாலிடிகள் இப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே இருப்பதை படிப்படியாக முனிசிபாலிடிகளோ பஞ்சாயத்து யூனியன்களோ எடுத்துக்கொள்ள வேண்டும். தீவிரமாக கவனம் செலுத்தினால் இந்தப் பிரச்னையில் ஓர் அளவுக்கு பரிகாரம் காணமுடியும். இப்பொழுது செலவு செய்யப்படும் தொகையை வைத்துக் கொண்டே, இதற்கு ஒரு தீர்வுகாண முடியும். அதிகச் செலவு ஏற்படுகிறது என்பதற்காக, 45 மாணவர்கள் சராசரி அட்டென்டென்ஸ் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி, அதன் அடிப்படையில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறைத்திருப்பதானது சரியாக இருக்காது. ஆகவே அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, குறைந்த பட்சம் எவ்வளவு மாணவர்கள் ஒரு ஆசிரியருக்கு இருப்பது என்பதுதான் இந்த டீச்சர்-பியூபில் ரேஷியோ. எப்பொழுதும் இதற்கு ஒரு வரம்பு இருந்துகொண்டுதான் இருந்தது. கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரமும், மற்ற அங்கத்தினர்களும் கூறியதைப்போல குறைவாகப் பிள்ளைகள் இருந்தால் நல்லதுதான். எவ்வளவுக்கெவ்வளவு மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தலாம். ஒவ்வொரு மாணவனைப்பார்த்து, மாணவியாகப் பார்த்து கவனம் செலுத்தலாம். தேர்வுகளிலே அதிகமாகத் தவறி விடுகிறார்கள்; அதனாலேயும் ஒரு விரயம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டும் என்று கருதும்போதுகூட, கூடிய வரையில் ஆசிரியர்கள் நேரடியாக கவனம் செலுத்தவேண்டும் என்

[திரு. எம். பக்தவத்சலம்] [24th January 1964

பதை உணர்ந்து அதை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்பதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். மாணவர்களிடம் கவனம் செலுத்து வதை மட்டிலும் எடுத்துக் கொண்டால் எவ்வளவுக்கெவ்வளவு மாணவர்கள் குறைவாக இருக்கிறார்களோ, அது நல்லதுதான். ரஷியா போன்ற நாடுகளிலே 15 அல்லது 20 மாணவர்கள் இருப்ப தாகச் சொல்லுகிறார்கள். அதுதான் ரொம்பவும் திருப்திகரமாக இருக்கக்கூடிய நிலைமை. ஆனால் அப்படிப்பார்த்தால் ஆசிரியர் களே போதாமல் போய்விடும். அப்படி ஆசிரியர்கள் கிடைத் தாலும் செலவு அதிகமாகிவிடும். இப்பொழுதே கல்விச் செலவு அதிகமாகிக் கொண்டே போகிறது. எல்லா மாணவ மாணவிகளுக் கும் குறைந்த பட்சம் ஆரம்பப்படிப்பாவது கொடுக்க வேண்டும் என்று திட்டம் வைத்திருக்கிறோம். ஆனால் நம்முடைய லட்சியத் திற்கும் மேலாக மாணவ மாணவிகள் அதிகமாகவே சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள். நாம் ஒரு லட்சியம் வைத்தால் அதற்கும் மேலாக குழந்தைகள் வருகிறார்கள். அப்படி குழந்தைகள் அதிக மாக வருவதனால் செலவு அதிகரிக்கிறது. கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் எடுத்துக் காட்டியதைப்போல தரம் ஒன்று; பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பது ஒன்று; மாணவ மாணவிகளுக்கு கல்வி புகட்டுவது இன்னொன்று. இந்த ரேஷ் யோவை குறைத்து வைத்துக் கொள்ள வேண்டுமானால் மாணவர் களை தடுக்க வேண்டும். அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார் கள். மாணவர்கள் தானாகவே வந்து சேருகிறார்கள் மற்ற மாநிலங் களைப்போல் இல்லாமல் தமிழ் நாட்டிலே மாணவ மாணவிகளுக்கு பெற்றோர்களுக்கு விழிப்பு இருக்கிறது. ஆகவே நமது லட்சியத் திற்கும் மேலாக மாணவ மாணவிகள் வருகிறார்கள். ஆசிரியர்களை அதிகமாக வைத்துக் கொள்ளலாம் என்றால் ஏற்கெனவே செலவு அதிகரித்துக் கொண்டு போகிறது. செலவுக்கும் ஒரு வரம்பு வேண்டும். அப்படி ஒரு வரம்பை நாம் வைத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது.

இந்த தீர்மானத்தை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் கூறியதுபோல பள்ளி வகுப்புக்களை மாற்றி அமைப் பது சரியல்ல. இப்பொழுது 1962-ல் உத்தரவு போடப்பட்டது. என்றும், அதற்கு மேல் ஹையர் எலிமெண்ட்ரி என்றும் அதற்கும் மேலே செகண்டரி என்றும் வைத்திருக்கிறோம். அதைக் குறைப் பது சரியல்ல. இப்பொழுது 1962-ல் உத்தரவு போடப்பட்டது. தொடர்ந்து மேலும் அரசாங்கம் இந்த விஷயத்தை பரிசீலனை செய்து கொண்டே இருக்கிறது. இது சம்பந்தமாக இன்னொரு உத்தரவு, நிலைமையை தெளிவாக்கக்கூடிய வகையில் பிறப்பிக்கப் படும் தருவாயில் இருக்கிறது. அந்த உத்தரவு போட்ட பிறகு, மற்றொரு கருத்தாகச் சொன்னார்களே ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரியர் வேண்டும் என்று. அந்தக் கருத்தை கூட கூடியவரையில் அமுலாக்க வேண்டும் என்ற கருத்து இருப்பதால், அதையும் நிறை வேற்ற யோசனை செய்யப்படும்.

24th January 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒரு பக்கத்திலே ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்; அதோடு இப்பொழுது ஆசிரியர்களை மேலும் வீட்டுக்கு அனுப்பினால் என்ன ஆகும் என்று குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் திரு. மாதவன் சொன்னார்கள், இப்பொழுது வேலையில் இருந்து எடுக்கப்படுகிறவர்கள் மறுபடியும் வைக்கப்படுவதில்லை என்று. அது சரியல்ல. சர்ப்ளஸாக இருந்து எடுக்கப்பட்டவர்கள் பின்னால் ஒரு காலி ஏற்பட்டால் அந்த இடத்திற்கு அவர்களையே வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு உத்தரவு போடப் பட்டு இருக்கிறது. வேறு இடத்தில், ரெவின்யூ டிஸ்டிரிக்ட்டில் தேவைப்பட்டால் அவர்களை மாற்ற வேண்டும் என்று வற்புறுத்துவதுதான் இப்பொழுது அமுலில் இருக்கும் உத்தரவு.

உதவிபெறும் பள்ளிகள் இருப்பதால்தான் இதெல்லாம் ஏற்படுகிறது என்று கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் சொன்னார்கள். ஆனால் உதவிபெறும் பள்ளிக்கூடங்களை அடியோடு எடுத்துவிட முடியாது. இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் இருப்பதால்தான் கல்வி அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் உணரவேண்டும். (திரு. மீ. கலியாணசுந்தரம் . . . தனிப்பட்டவர்களுடைய பள்ளிகளைப் பற்றித்தான் சொன்னேன்.) தனிப்பட்டவர்கள்கூட முதலிலே அக்கறை எடுத்துக்கொண்டு கல்வி அபிவிருத்திக்கு உதவி இருக்கிறார்கள். அப்படி தனிப்பட்டவர்கள் பள்ளிக்கூடங்கள் இருப்பதினாலேயும் உண்மையிலேயே பலன் உண்டு. வேறு புது ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமா என்பதுபற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால் உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் இருப்பதால்தான் இந்த சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று நான் ஏற்றுக்கொள்ள முடியாது. சிக்கல்களுக்கு பல காரணங்கள் இருக்கின்றன. சில இடங்களிலே குறைவாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உதவி பெறும் பள்ளிகளில் இந்த ரேஷ்யோ குறைவாக இருக்கிறது. இதையெல்லாம் சரிக்கட்டி, நிலைமையை எப்படி சமாளிப்பது என்பதுதான் சர்க்கார் கவனம் செலுத்திக்கொண்டு வரும் விஷயம்.

மற்றொன்றும் சொன்னார்கள், மாணவ மாணவிகள் ஆண்டு தோறும் புதிது புதிதாக சேர்ந்துகொண்டே இருக்கிறார்கள் என்று. அதற்கு ஏற்றவாறு ஆசிரியர்களை நியமிக்காமல் இல்லை. அடுத்த ஆண்டுகூட சர்ப்ளஸ் என்று கருதப்படுகிறவர்களுக்கும் மேலாக எட்டாயிரம் ஆசிரியர்கள் புதிதாக அமைக்க திட்டம் வகுத்து, நிதியையும் ஒதுக்குவோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதிதாக எட்டாயிரம் ஆசிரியர்கள் நியமிக்க இடம் அளிக்கப்படும். ஆகவே இந்த விஸ்தரிப்பு தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும் என்பதைச் சொல்லவேண்டியது அவசியம் இல்லை. வேலை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்கப்படும். இப்பொழுது சர்ப்ளஸ் ஆக இருக்கிறவர்கள் புதிதாக வேகன்சி வரும்போது அங்கே அவர்கள் நியமிக்கப்படுவார்கள். வேறு இடத்திற்கும் அவசியமானால் மாற்றப்படுவார்கள். சர்ப்ளஸ் ஆக இருப்பவர்கள் காலி ஸ்தானங்களுக்கு

அனுப்பப்படுவார்கள். அதற்கும் மேலாக, புதிதாக 8,000 ஆசிரியர்களை நியமிக்க இடம் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், முன்பு கூறியது போல, எந்த நிலையில் விதியைத் தளர்த்துவது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது. அது சம்மந்தப்பட்ட உத்தரவுகள் சீக்கிரத்தில் பிறப்பிக்கப்படும். ஆகவே இந்த தீர்மானத்தை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

*** புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, கல்வியின் தரம் உயரவேண்டும் என்ற ஒரே நோக்கத்தை மனதில் வைத்து, அந்த நிலையை வேறு எந்த வகையிலும் நிறைவேற்ற முடியாது என்று, வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இருக்கவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தவே இந்த தீர்மானத்தை நான் கொண்டுவந்தேன். ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் வேண்டுமென்றே, எதிர் கட்சிக்காரர் கொண்டுவந்த தீர்மானம்தானே என்ற நோக்கோடு பேசினார்களோ என்று சந்தேகிக்கவேண்டிய நிலையில் அவர்களது பேச்சு அமைந்தது. கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் பேசும்போது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இருக்கும் ரேஷியோ இல்-லாஜிகல் என்று சொன்னார்கள்.

MR. SPEAKER : The hon. Member may kindly be brief. He has already spoken much.

புலவர் கா. கோவிந்தன் : ஒரு வகுப்பிலே 35 மாணவர்கள் இருந்தால் ஒரே ஆசிரியர். அது ஒரே வகுப்பாக இருந்தால் ஒரே ஆசிரியர் என்று இருப்பது பொருந்தும். முப்பத்தைந்து என்பது 40 ஆக உயருவதுகூட இல்-லாஜிகல் என்று ஆகாது. ஆனால் பல வகுப்பு மாணவர்களை ஒரே ஆசிரியர் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று வரும்போது அது நடைமுறைக்கு ஒவ்வாததாக அமைகிறது. ஆகவே என்னுடைய நோக்கம் ஒரே ஆசிரியர் ஒரே நேரத்திலே பல வகுப்புகளை கவனிக்க முடியாது போய்விடும் நிலையில் அதை மாற்றி அமைக்கவேண்டியது அவசியமாகிறது. அப்படி ஒரு ஆசிரியரிடத்தில் பல வகுப்புகள் இருப்பதால் அந்த ஆசிரியர் ஒரு வகுப்பைத் தவிர மற்ற வகுப்புகளைப் பார்க்க முடியவில்லை என்றுதான் சொன்னேன். ஆசிரியர்கள் வேலை இல்லாமல் போகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒரு மணி நேர வேலை செய்துவிட்டு பிறகு வேலை செய்யாமல் இருக்கிறார் என்ற குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை. நான் சொன்னது மாணவர்கள் ஒரு மணி நேரம் மட்டும் படித்துவிட்டு பாக்கி ஐந்து மணி நேரம் வீணாக சுற்றுகிறார்கள் என்பதுதான் ஆசிரியர்கள் ஆறு மணி நேர வேலை செய்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் அங்கே எத்தனை வகுப்புகள் இருக்கிறதோ அதற்கு ஒன்று அதிகமாக(n + 1 or n + 2) என்ற முறையில் உபாத்தியாயர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அவர்கள் விஷயத்தில் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் ஓய்வு கிடைக்க வழி இருக்கிறது. ஆனால் பயிற்சி பெறுகிற மாணவன் ஒரு மணி நேரம் படித்துவிட்டு பாக்கி நேரத்தில் வீணாக அலைகிறான். அவர்கள் விளையாடலாம் என்று சொன்னார்கள். விளையாடும் நேரத்தில்கூட கண்காணிப்பு இருக்க

24th January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

வேண்டும். அது சைக்காலஜி. இந்த சைக்காலஜியைப் புரிந்து கொள்ளாமல், ஆளும் கட்சியிலிருப்பவர்கள் சொல்வார்களானால் அவர்களுடைய கருத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, என்னுடைய நோக்கம், ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இருக்கவேண்டும் என்பதுதான். அமைச்சர் அவர்கள் சொல்லும் நேரத்தில், அடுத்துவரும் உத்தாவில் அப்படிப்பட்ட நிலைமை உருவாகிவிடும். அப்படிப்பட்ட வாய்ப்பை உண்டாக்குவோம் என்று சொன்னார்கள். 12-00 noon.

இரண்டாவது வகுப்புவரைக்கும் துவக்கப் பள்ளியிலே வைத்து விட்டு, மூன்று, நான்கு, ஐந்து, வகுப்புகளை உயர்துவக்கப்பள்ளிக்கோ, உயர்நிலைப்பள்ளிக்கோ கொண்டுசெல்லவேணடும் என்பது என் நோக்கமென்று, இருபத்தெட்டு கோடி ரூபாய் இப்போதே செலவாகிறது. அரசினர் மேற்கொண்டு செலவிட முடியாது என்று காரணம் காட்டுவார்கள் என்பதாலும், வகுப்புக்கு ஒரு ஆசிரியர் விதம் ஒவ்வொரு பள்ளியிலும் வைக்கலாம் என்பதாலும் நான்காவது, ஐந்தாவது வகுப்புகள் உயர் துவக்கப்பள்ளியில் இருக்கவேண்டும் என்று கருத்து, ஐந்தாம் வகுப்புவரை துவக்கப் பள்ளிகளின் பொறுப்பாகும் என்ற கருத்துக்கு எந்தவிதத்திலும் மாறுபட்டது இல்லை. துவக்கப்பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு வரை வேண்டாம் என்று சொல்லவில்லை. உயர் துவக்கப்பள்ளி என்று சொன்னால்தான் குற்றச்சாட்டு வருகிறது என்றால், ஐந்து ஊர்களுக்கு ஒரு பள்ளியில் மட்டுமே ஐந்தாவது வகுப்புவரைக்கும் வைக்கக் கூடிய நிலையை உருவாக்கிவிட்டால் போதும். இப்படி மாற்றிக் கொண்டால்கூட அந்த நிலைமை உருவாகிவிடும். எப்படியும் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் இருக்கவேண்டும். முப்பத்தைந்து மாணவர்களை வைத்துக்கொண்டு ஒரு ஆசிரியரால் சொல்லிக் கொடுக்க முடியாத நிலை இருக்கும்போது, பல வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் என்றால் நிச்சயமாக நாம் நினைக்கும் பயன் உருவாகாது என்ற காரணத்திற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். அடுத்து வருகின்ற திட்டத்தில் அந்த நிலையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த அந்த உறுதியை நாளாவட்டத்தில் நிறைவேற்றி வைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை என்று தெரிவித்து என் உரையை முடிக்கின்றேன்.

The resolution was by leave withdrawn.

(4) AMENDMENT OF THE CONSTITUTION OF INDIA FOR RENAMING THE STATE OF MADRAS AS 'TAMILNAD'

SRI RAMA ARANGANNAL: Sir, I move—

"This House recommends to the Government to urge upon the Government of India that the name of Madras State be changed into Tamilnad by bringing in suitable legislation as provided for in the Constitution of India."

The resolution was duly seconded.

MR. SPEAKER: Resolution moved—

"This House recommends to the Government to urge upon the Government of India that the name of Madras State be changed into Tamilnad by bringing in suitable legislation as provided for in the Constitution of India."

I am to add that the discussion on this resolution must be finished within half an hour, viz., before 12-30 p.m. since we are to have a discussion for short duration under rule 57 of the Assembly Rules from 12-30 p.m. to 1-30 p.m.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, இது மிக மிக முக்கியமான தீர்மானம் என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானம் இதே மாமன்றத்தில் 1961-ஆம் ஆண்டு விவாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் கவனப்படுத்த ஆசைப்படுகிறேன். மீண்டும் இந்தத் தீர்மானத்தை நான் இங்கே கொண்டுவருவதற்குக் காரணம், கடந்த செப்டம்பர் 6-ஆம் தேதியன்று டில்லி ராஜ்யசபையில், 'சென்னை' என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கவேண்டுமென்று அங்கே கம்யூனிஸ்டு கட்சித் தலைவரான திரு. புபேஷ் குப்தா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்ததும் அந்தத் தீர்மானத்தின்மீது பதிலளித்த இந்திய அமைச்சர்களில் ஒருவரான திரு. ஹஜர்நவிஸ் அவர்கள், இந்தத் தீர்மானம் மாநில சர்க்காரிலேயிருந்து வரவேண்டும் என்று அவர்கள் எடுத்துச் சொன்னதையும் கண்டபிறகே நம்முடைய மாநில அரசுக்கு ஒரு கெட்ட பெயர் வந்துவிடக்கூடாது, தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை மக்களும், அத்தனை கட்சிக்காரர்களும் நல்ல காரியங்களைச் செய்வதிலே தயாராக இருக்கிறவர்கள் என்பதை, நம்முடைய புதிய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற நேரத்திலே அந்த எண்ணம் அங்கே வலியுறுத்தப்படவேண்டும் என்பதற்காகவே நான் இந்தத் தீர்மானத்தை மீண்டும் இந்த மன்றத்தின்முன் கொண்டுவந்திருக்கிறேன்.

'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கவேண்டும் என்பதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருப்பதற்கு வழியில்லை. அதிலும், கடந்த முறை இதே மன்றத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், திருவள்ளுவருடைய உருவப்படத்தை வைக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியிலேயிருந்து கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தை ஏற்று, அந்த உருவப்படம் நம்முடைய பிரதம மந்திரி அவர்களால் இங்கே திறக்கப்பட இருக்கிறது என்ற நல்ல செய்தியை நாடு பெற்றிருக்கிறது. இப்படி தமிழை வளர்க்கவேண்டும், தமிழுணர்ச்சியை வளர்க்கவேண்டும், தமிழுக்கு நல்ல மதிப்பு அளிக்கவேண்டும் என்ற கருத்தினை எல்லோரும் கொண்டிருப்பது மட்டுமல்ல, தமிழைத் தெய்வத்தோடு ஒப்பிட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செல்கின்ற இடத்திலெல்லாம் பேசிவருகிறார்கள். தமிழைத் தெய்வம் என்று ஒப்புக் கொள்ளக்கூடிய நாம், நாம் வாழும் தமிழ் மாநிலத்தை அந்த

24th January 1964] [திரு. இராம. அரங்கண்ணல்]

தெய்வத்தினுடைய கோயில் என்று ஒப்புக்கொள்வதற்குத் தயங்க மாட்டோம். அப்படிப்பட்ட கோயில் அதற்குரிய பெயரோடு அழைக்கப்படவேண்டும். அப்படி அழைக்கின்ற காரணத்தினாலே, நாமெல்லாம் இழந்த, அல்லது இழந்துகொண்டிருக்கிற அந்தப் பெருமையைப் பெறவேண்டும் என்பதற்காகவே நான் இந்தத் தீர் மானத்தைக் கொண்டுவருகிறேன். அதிலும், தங்களுடைய அனு மதியின்பேரில், ராஜ்யசபையில் அமைச்சர் திரு. ஹஜர்னவிஸ் அவர்கள் குறிப்பிட்ட வாசகத்தை நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். திரு. புபேஷ் குப்தா அவர்களுக்குப் பதில் சொல்லிய நேரத்தில்—

"He also said that it was for the State Government to decide the name they should have."—

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல.

"If at any time the State Government express their opinion in favour of any change, it would receive due consideration of the centre and until then the *status quo* should continue."—

என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசு 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றவேண்டுமென்று விரும்பினால் அந்த விருப்பத்தை ஏற்று, இந்திய அரசியலமைப்பின் மூன்றுவது ஷரத்தில் அதற்கான திருத்தம் செய்யப்படும் என்று அவர்கள் அங்கே உறுதியளித்திருக்கிறார்கள். அந்த வகையிலே நாம் நல்ல சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய இந்த மாமன் றம் இந்த நேரத்திலே 'தமிழ்நாடு' என்ற பெயரை வைக்கவேண் டும் என்ற முடிவு எடுக்குமானால் அதை ஆட்சேபிக்கின்றவர்கள் யாரும் இல்லை என்ற கருத்தும் தெரிகிறது. முன்பெல்லாம் இப்ப டித் தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் டில்லியில் இருக்கிற தலை வர்கள், பெரிய மந்திரிகள் ஏதாவது தவறாகக் கருதிவிடுவார் களோ என்ற கருத்து இருந்திருக்கக்கூடும். ஆனால், இன்றைய தினம் அந்தக் கருத்தினை உருவாக்கக்கூடிய பெரிய தலைவராக இந்த மன்றத்திலே முதலமைச்சராக வீற்றிருந்த திரு. காமராஜ் அவர்களே அங்கிருக்கும் காரணத்தாலும், அவர்கள் புவனேசு வரத்தில் நடைபெற்ற மகாசபையில் தமிழில் பேசியதைப் பாராட்டி நாமெல்லாம் மகிழும் தன்மையில் இருப்பதாலும், நம் முடைய தமிழர் ஒருவர் அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமைதாங்கி இருக்கிற இந்த நேரத்தில் நம்முடைய தமிழுக்கா கப் பாடுபடுகின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னு டைய தீர்மானத்திற்கு முழு ஆதரவை அளிக்கவேண்டும். நாளை மறுதினம் குடியரசு விழாவைக் கொண்டாட இருக்கிறோம். குடி யரசு தின விழா சாதாரண சம்பவமாகவே கருதப்பட்டுக்கொண்டு வரப்படுகிற இந்த நேரத்தில் என்னுடைய கோரிக்கையை ஏற்று, "தமிழ்நாடு" என்ற பெயர் வைக்க நான் சம்மதிக்கிறேன், அந்த இனிய தமிழிலேயே இனிமேல் எல்லா நடவடிக்கைகளிலும் அந் தப் பெயரே குறிக்கப்படும், இந்த மாநிலத்திற்குத் "தமிழ்நாடு என்ற பெயரே விளங்கும்" என்று அறிவிப்பார்களானால், அதை விடப் பெரிய குடியரசு தினப் பரிசாக வேறு எதுவும் அமைய முடியாது என்று நான் கூறிக்கொள்கின்றேன்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [24th January 1964

இந்தப் பிரச்சினையைப்பற்றி, இந்தப் பெயர் தேவையா, இதை வைக்கவேண்டுமா, இதை வைத்தால் வெளிநாடுகளுக்கெல்லாம் செல்கிறவர்களுக்குக் கஷ்டமாக இருக்குமே என்று ஒரு தடவை முன்பு வாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்த பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் நம்முடைய உணர்ச்சியையும் நம்முடைய தன்மானத்தையும் நமக்குள்ள பெருமையையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்பதிலே அக்கறை காட்ட வேண்டுமே தவிர, மற்றவர்கள் என்ன கருதுவார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. இந்திய துணைக் கண்டத்தின் பெயரைப் 'பாரதம்' என்று மாற்றுவதற்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது. யாருக்குத் தெரியும் பாரதம் என்று சொன்னால்? அது இன்றையதினம் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. அதுபோல், சரித்திரத்தை எடுத்துப் பார்த்தோமானால், சாம்ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்று மறைந்து, அவை இருந்த இடத்தில் புது நாடுகள் உருப்பெற்றிருக்கின்றன என்பதையும் நாம் அறிவோம். ஒட்டாமன் சாம்ராஜ்யம் இருந்த இடம் எங்கே? இன்று எத்தனையெத்தனை புதிய நாடுகள் புதிய பெயர்களோடு விளங்குகின்றன! பைசான்டைன் சாம்ராஜ்யம் என்றழைக்கப்பட்ட கீழ்ரோமானியப் பேரசு இருந்த இடத்தில் இன்று அதே பெயரோடா நாடுகள் இயங்குகின்றன? இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய நாட்டு மன்றத்திலிருந்த நாடுகளினுடைய எண்ணிக்கையும் இப்பொழுது எத்தனை புதிய நாடுகள் அங்கே பங்குபெற்றிருக்கின்றன என்பதையும் நாம் நன்றாக அறிவோம். பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்ரேல் என்கிற பெயர் பலருக்குத் தெரியாத, புராணத்தில் இருந்த பெயராக இருந்தது. இன்றையதினம் அந்தப் பெயர் விளங்க, ஒரு புது நாடாக, யூதர்கள் நாடாக உருமாறி இன்றையதினம் சரித்திரத்திலே ஏறி இருக்கிறது.

நேருஜி பிறந்த மாநிலம் ஐக்கிய மாகாணம் என்று அழைக்கப்பட்டுவந்தது. அந்தப் பெயரை உத்தரப் பிரதேசம் என்று மாற்றினோம். அதற்கு அருகில் இருக்கிற சென்ட்ரல் ப்ராவின்ஸ் என்று அழைக்கப்பட்டுவந்த மாநிலம் மத்தியப் பிரதேசம் என்று மாற்றப்பட்டது. அதற்கு அருகிலே உள்ள ஆந்திரம் முன்பு இல்லாத நாடு. இப்போது ஆந்திரம் என்ற அழகான பெயர் வழங்கப்படுகிறது. மராட்டியமும் முன்பு இல்லாத நாடு. இப்போது மராட்டியம் என்று மகிழ்ச்சியோடு நாம் எல்லாம் அழைத்துக்கொண்டிருக்கிறோம். அருகில் இருக்கிற குஜராத்திலும் அப்படித்தான். இப்படி ஒவ்வொரு மாநிலமும் மொழிவாரியாகப் பெயர் வைக்கப்பட்டு அழைக்கப்படுகிற காலத்தில் நம்முடைய மாநிலத்திற்கும் தமிழ்நாடு என்று பெயர் வைத்து அழைக்க நாம் ஏன் தயங்க வேண்டும்? தமிழர்களாகிய நமக்கு நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்து அழைக்க ஆர்வமும், ஆசையும் இல்லாமல் போய்விட்டதா? என்ன காரணத்தினால் நாம் அதற்குத் தயங்கவேண்டும்? இதற்கு எதிராகச் சொல்கின்ற காரணம் எல்லாம் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு மெட்ராஸ் என்றால் தான் புரியும் என்பது. வெளிநாடுகளில் உள்ளவர்களுக்காகவா

24th January 1964] [திரு. இராம. அரங்கண்ணல்]

நாம் வாழ்கிறோம். கனம் வெங்கட்டராமன் மேலே நாடு சென்றால் தமிழ்நாடு மந்திரி வந்திருக்கிறார் என்றும், தமிழ்நாட்டு முதல் அமைச்சர் பக்தவத்சலனார் என்றும் பிற தேசங்களில் உள்ளவர்கள் எல்லாம் தமிழ்நாட்டுக் குடிமகன் என்று நம் தேசத்தைப் பாராட்டிப் புகழத்தக்க வகையில் ஏன் இந்தப் பெயரை வைக்கக் கூடாது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டின் பெயரை வைத்து நம் பெருமையை உயர்த்திக்கொள்ள வேண்டும். நாம் யார்? நம் மொழி எத்தகையது? நம் பெருமைகளை எவ்வாறு உயர்த்திக்கொள்வது என்பதில் இந்த நாட்டினர் எல்லோருக்கும் அக்கறை இருக்க வேண்டும். விவாதத்திற்காக ஏதாவது காரணத்தைக் கற்பித்துக்கொண்டு இதை எதிர்ப்பதில் பயன் இல்லை. தேனைத் தேன் என்று சொல்வதற்கு ஏன் தயங்கம் இருக்கவேண்டும்? மானை மான் என்று சொல்வதற்கு ஏன் தயக்கம் இருக்கவேண்டும்? அழகான முல்லையை முல்லை என்று சொல்வதற்கு ஏன் தயக்கம் இருக்கவேண்டும்? அழகான தமிழ் மொழி நடமாடுகிற இந்த அரிய மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? நாம் பழைய கொள்கைளைவிட்டு, புதுக்கொள்கைகளை ஏற்று நடத்துவதில் தயக்கம் காட்டவேண்டியதில்லை. ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். பழைய கொள்கைகளை, பழைய வாதங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு முன்னேறிக்கொண்டிருக்கிற நாம், நம்முடைய தமிழ்க்குடியின் பெருமையை நிலைநாட்டுவதற்கு ஏற்றவகையில்—நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டிக்களிக்க முன்வரவேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாமன்றத்தில் இருக்கிற அத்தனை கட்சிக்காரர்களும் இதை ஆதரிப்பார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற ஈரோடுப் புலவர் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் எத்தகைய இனிய தமிழ்க் காவியங்களை எடுத்துச் சொல்லி நம்மை மகிழ்விக்கிறார்கள். நான் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற காலத்திலே—காங்கிரஸ் உறுப்பினர் திருமதி குழந்தையம்மாள் எத்தகைய பேச்சுக்களை இனிய தமிழிலே பேசிப் பேசிப் பெயர் வாங்கினார்கள் என்பதை அறிவேன். அதை எல்லாம் கவனிக்கின்ற நேரத்தில் எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களும் சரி, ஆளும் கட்சியில் இருக்கின்றவர்களும் சரி, இந்தத் தீர்மானத்தை முழுமனதுடன் ஒருமுகமாக ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த மன்றத்தில் திருவள்ளுவர் படத்தை வைப்பதன் மூலமாக நல்ல பெருமை நமது முதல் அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்ற பெயரை அவர்கள் வைக்க முன் வந்தார்கள் என்றால் நிச்சயமாகத் தமிழ்நாட்டில் அவருக்கு நல்ல பெயர் உண்டாகும். எதிர்காலச் சரித்திரத்தில் என்றும் மங்காத புகழ் அவருக்குக் கிட்டும். ஆகவே முன்பு இருந்த பெயரை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரை நமது மாநிலத்திற்குச் சூட்டுவதற்கு நமது முதல் அமைச்சர் அவர்களே முன்வந்து திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சபை கலைந்து செல்கிற நேரத்தில் எல்லோரும் மகிழ்ச்சியுடன் செல்லவேண்டுமென்று சொன்னார்கள். அவர் இந்த மாநிலத்

[திரு. இராம. அரங்கண்ணல்] [24th January 1964

தின் பெயரை தமிழ்நாடு என்று வைக்க சம்மதிப்பதாக ஒரு சொல் சொன்னால் இந்த மாநிலமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போகும். அத்தகைய மகிழ்ச்சியையூட்டும் சொல்லை அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்வது என்னுடைய சொந்த ஆசை மட்டும் அல்ல, என்னுடைய கட்சியின் ஆசை மட்டும் அல்ல, இந்த மாநில மக்கள் அத்தனை பேர்களுடைய ஆசையும் ஆகும் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் உள்ளபடியே சட்டமன்ற வரலாற்றில் ஒரு சிறப்பான நாள் என்று நான் கருதுகிறேன். காரணம் இன்று எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆளும் கட்சி அமைச்சர் அவர்கள் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் இன்று இருக்கிற அரசியல் சூழ்நிலையில் இன்றைய நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கது என்று நான் கருதுகிறேன். கம்யூனிஸ்டுக் கட்சி கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து தோல்வி அடையச் செய்தார்கள். சுதந்திராக் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து ஏற்றார்கள் புலவர் கோவிந்தன் கொண்டுவந்த மசோதா கனம் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியின் பேரில் வலியுறுத்தப் படாது வாபஸ் பெறப்பட்டது. எனவே நல்ல சம்பவங்கள் இன்றையதினம் நடந்து இருக்கின்றன. ஆகவே இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை கனம் அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற முறை இந்த மன்ற உறுப்பினராக இருந்தபோது இதே கருத்தை வலியுறுத்திப் பேசினேன். அப்போது கனம் சுப்பிரமணியம் அவர்கள் பதில் அளித்தபோது, "ஒரு ஐந்தாண்டு காலம் வாயை மூடிக்கொண்டிருந்தால் இந்த நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிடுவேன்" என்று உறுதி தந்தார்கள். அது சட்டமன்ற நடவடிக்கையிலேயே இருக்கிறது. எனவே ஐந்தாண்டு காலம் நான் வாயைப் பொத்திக்கொண்டு உட்கார்ந்துவிட்டேன். திராவிட முன்னேற்றக் கழகமும் இருந்தது. எனவே இப்போது அரசாங்க சார்பில் அப்போது கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும் என்று வேண்டிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது முதல் அமைச்சராக இருப்பவர் முன்பும் இருந்தார். அதே கொள்கைகளை இவரும் பின்பற்றி வருகிற காரணத்தினால் இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயரை இவர் காலத்தில் வைப்பதனால் இவருக்குப் பெருமையும், புகழும் உண்டாகும் என்பது மட்டும் அல்ல. அவரது உள்ளத்திற்கும் ஒரு சாந்தி ஏற்படக்கூடிய இந்த நல்ல தீர்மானத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக சிலப்பதிகாரத்தைக் காட்ட முடியும். ஆனால் நேற்றே சிலப்பதிகாரத்தைப் பற்றிச் சொன்னபோது, கேள்வி நேரத்தில் கனக விசயனைப் பற்றிப் படிக்கவேண்டாமென்ற முறையில் கனம் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். ஆகவே சிலப்பதிகாரத்தில்

24th January 1964] [திரு. ப. உ. சண்முகம்]

இருந்து சொல்லாமல் அவர் படிக்கின்ற பாரதியார் பாட்டை அவர் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாரதியார் தமிழ்நாடு தமிழ்நாடு என்ற பெயரையே தம் பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, கனம் மந்திரி அவர்கள் தமிழ்நாடு என்ற பெயரை ஏற்று, அதை நம்முடைய மாநிலத்திற்கு வைப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை கட்சிக்குப் பயன்படுகிற பிரச்சினையாகக் கருதாமல், தேர்தலுக்குப் பயன்படுகிற பிரச்சினையாகக் கருதாமல்—ஒருகால் நாங்கள் கொண்டுவந்த தீர்மானம் என்பதால் எதிர்க்கிறோம் என்று சொல்லலாம்—கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பின்னால் இந்தக் கருத்தையே குறிப்பிடுகிறேன் என்று உறுதிமொழி அளித்தாலும் நாங்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளத் தயார்—அவர்களே கொண்டு வரட்டும்—எப்படியோ இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கு இப்போது விவாதத்திற்கு வந்திருக்கிற ஒரு தீர்மானத்தைப்பற்றிய என் கருத்தைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். சாதாரணமாக ஒரு விஷயத்தைத் தொடங்கும்போது, ஒரு காரியத்தை எடுத்துக்கொள்கின்றபோது எதை எதை கவனிக்கவேண்டுமென்பதற்கு ஒரு வரையறை நம்முடைய தமிழ் நாட்டில் உண்டு.

காலமறிந்தாங் கிடமறிந்து, செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும்.

என்ற ஒரு அருமையான கருத்து நீதிநெறி விளக்கத்தில் காணப்படுகிறது. அதையொட்டி இப்போது கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நாம் காண்போமானால், இந்தத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிற காலம் சரியாக இல்லை; இடமும் சரியாக இல்லை. ஆகையினாலேதான் தற்போது இதை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்ற நிலையிலே நான் பேச முன் வந்திருக்கிறேன். நான் இப்படிப் பேசுவது பல பேருக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கிறது. அதற்குண்டான விளக்கத்தை நான்கூறப் போகிறேன். சாதாரணமாக, நாடு அல்லது தேசம் என்கின்ற இரண்டு சொற்கள் ஒரு பொருளையே குறிப்பிடக்கூடிய இரண்டு சொற்கள். தேசம் என்கின்ற சொல் வடமொழியிலிருந்து வந்தது என்றும், நாடு என்று குறிப்பிடுகிற ஒரு சொல் தமிழ் மொழியிலே இருந்து பிறந்தது என்றும் நாம் அறிகின்றோம். சாதாரணமாக, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்திலே 'தமிழ் நாடு' என்ற பெயர் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. பாரதியார்—"செந்தமிழ் நாடெனும் போதினிலே; இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று கூறிய வகையில் தமிழ்நாடு என்ற பெயரை அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த நிலை

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [24th January 1964

மையை நாம் நன்கு கூர்ந்து ஆராய்வோமானால், தமிழ்நாட்டிலே பல உட்பிரிவுகள் முன்பு இருந்தது என்பதை நாம் வரலாற்றில் காண்கிறோம். சாதாரணமாக சேர நாடு என்றும், பாண்டிய நாடு என்றும், சோழ நாடு என்றும் ஆக முப்பிரிவுகள் பழைய தமிழகத்தில் இருந்தன என்பது நம்முடைய தமிழக வரலாற்றிலே நாம் காண்கின்ற நிலைமை. அது மட்டுமல்ல. கொங்கு நாடு என்று குறிப்பிடுகின்ற நாட்டையும் நாம் கொஞ்சம் கருத்தில் வைக்க வேண்டும். சேலம் மாவட்டம், கோவை மாவட்டம், திருச்சிராப்பள்ளியில் மேற்குப் பகுதி ஆகிய நிலப் பரப்பைக் கொண்டது கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டது. அந்தக் கொங்கு நாட்டிலும் உட்பிரிவுகளாக 24 நாடுகள் இருந்தன. 'பூந்தரிசு கொங்கு இருபத்தி நான்கு நாடே' என்று அந்தப் பாட்டு முடியும். அது ஒரு அகவல் பா. அந்த 24 நாடுகளிலும்கூட உட்பிரிவுகள் உண்டு. அதற்கும் நாடு என்றுதான் பெயர். (கனம் கூட்டுறவு அமைச்சரைச் சுட்டிக்காட்டி) வருஷந்தோறும், திருமண காலங்களிலும் அவர்கள் வீட்டுக்குச் சென்று ".....இருபத்திநான்கு நாடே' என்று பாடுகிற வழக்கம் இருக்கிறது. வருஷந்தோறும் பெரிய வீடுகளுக்குச் சென்று '..... இருபத்தி நான்கு நாடே' என்று பாடுகிற வழக்கம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று தேசம் என்று சொல்லக்கூடிய ஊர்களும் இருக்கின்றன. ஈரோடு தாலூகாவில் பிரம்ம தேசம் என்ற சிரிய நிலப் பகுதி இருக்கிறது. இதையெல்லாம் அடிப்படையாக வைத்து நாம் பார்ப்போமேயானால் நாடு என்று சொல்லக்கூடிய ஒரு சொல்லை மொழி வழியாக எடுத்துக் கொள்வதைவிட ஆட்சி வகையாக அமைத்துக் கொண்டால்தான் அது சிறப்புடையதாக இருக்கும் என்று நினைக்கிறேன். எந்தெந்தச் சமயத்தில் எந்தெந்த நிலப் பரப்பு ஒரு அரசனுடைய சம்பந்தப்பட்டதாக இருந்ததோ அதற்கு ஒரு நாடு என்ற பெயர் இருந்தது. சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு என்றும், தேசம் என்றும் சிறிய நிலப்பரப்பு, பெரிய நிலப்பரப்பு எல்லாவற்றுக்குமே வழங்கி வந்திருக்கிறது. ஆகவே, நாடு, தேசம் என்ற சொற்களுக்கு ஆட்சி வகையாகப் பொருள் கொள்ளுவதே சாலப் பொருத்தமுடையதாக இருக்கும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பாரதியார் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே . . .' என்று சொன்னார் என்று எடுத்துக் கூறினார்கள். அதே பாரதியார்தான், '30 கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்; செப்புமொழி பதினெட்டு உடையாள்' என்று கூறியிருக்கிறார். அவ்வாறு கூறும்போது நாட்டுப் பரப்பு மிக விரிந்துவிட்டது. தமிழ் நாட்டிலே மட்டும் 30 கோடி மக்கள் இருந்தார்கள் என்று கூற முடியாது. செப்பு மொழி பதினெட்டு உடையாள் என்று கூறுகிறார். ஆகவே, அந்தந்தக் காலத்திலே எந்தெந்த வகையிலே ஆட்சி அமைந்திருக்கிறதோ அந்த ஆட்சிக்கு உள்ளாக உள்ள நிலப் பரப்பு எவ்வாறு இருக்கின்றதோ அந்த அளவுக்கு நாடு என்றும், தேசம் என்றும் பெயர் கொள்வதுதான் மிகவும் சிறப்புடயதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

24th January 1964] *[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]*

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு நமது ராஷ்டிரபதி அவர்கள் டெல்லி நகரத்திலே ஒரு அரிய கருத்தை வெளியிட்டார்கள். அவர்கள், 'இன்றுள்ள உலகச் சூழ்நிலையில் உலக சர்க்கார் ஏற்படுத்துவதுதான் மிகவும் சாலச் சிறந்ததாகும்; அந்த உலக சர்க்காருக்காக எல்லா நாடுகளும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து பொறுப்பை உலக சர்க்காருக்குக் கொடுத்தால்தான் எதிர்காலத்திலே உலக இயக்கம் நன்ருகச் செழுமையாக அமையும்' என்று கருத்துத் தெரிவித்திருக்கிருர்கள். இதற்கு என்ன காரணம்? உலகம் மிகவும் சுருங்கி விட்டது என்று சொல்கிருர்கள். உண்மையும் அப்படித்தான். அமெரிக்க நாட்டு ஜனதிபதி கென்னடி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சமயத்தில் இந்தச் சட்ட மன்றத்தில் இருந்தேன். ஐந்தாறு நாட்கள் கழித்து என்னுடைய சிற்றூருக்குக் காலையில் போனேன். என்னுடைய ஊரில் இருக்கும் ஜனங்கள் எல்லாம் என்னிடம் வந்து, 'கென்னடியைக் கொன்று விட்டார்களாமே! நேருஜி இன்னும் அழுது கொண்டிருக்கிருராமே!' என்று கேட்டார்கள். முன் காலமாக இருந்தால் கென்னடி கொலை செய்யப்பட்ட விஷயம் சரித்திரத்திலே வேண்டுமானுல் வரும்; அதுவும் கல்லூரியில் படிக்கும்போதுதான் தெரிந்து கொள்வார்கள். இன்றே முதல் இரவு படுகொலை செய்யப்பட்டது மறு நாள் காலை சிற்றூர்களிலும், கிராமங்களிலும் உள்ள மக்கள் மனத்திலே ஆழப் பதிந்து வினு விடை கேட்கக்கூடிய அளவுக்கு உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. அதற்குக் காரணம் போக்குவரத்து வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும்தான்.

அந்த ஒரு வகையில் பார்க்கிறபோது, இப்போது ஒரு நல்ல பண்டம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதற்கு விளம்பரம் தேவையில்லை. எங்கள் ஊரில் ஒரு பழமொழி சொல்வதுண்டு. நல்ல மாடு என்றுல் உள்ளூரிலேயே விலைக்குப் போகும், சந்தைக்குக் கொண்டு போக வேண்டியதில்லை என்பார்கள். நாமே விளம்பரம் செய்யவேண்டியதில்லை. சென்னை மாநகரத்தில் டாக்டர் குருஸ்வாமி முதலியார் அந்தக் காலத்தில் இருந்தார்கள். 12.30 p.m.

MR. SPEAKER : How long will the hon. Member take?

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : டைம் கொடுக்கிற வரையில் நான் பேசுகிறேன். இது ஒரு பெரிய விஷயம், பேசுவதற்கு நிறைய இருக்கிறது.

கனம் சபாநாயகர் : இரண்டு நிமிடங்களில் முடிப்பதாக இருந்தால் கண்டின்யூ செய்யலாம். இல்லாவிடில் அப்புறம் பேசிக் கொள்ளலாம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் இப்போது கூறிக்கொண்டு . . .

கனம் சபாநாயகர் : வேண்டாம், வேண்டாம். எல்லாவற்றையும் சேர்த்து அப்புறம் வைத்துக் கொள்ளலாம்.

VI—DISCUSSION FOR SHORT DURATION *re* SUGAR DISTRIBUTION

The discussion on this Resolution will be continued in the next non-official day. Now we will take up the next item in the Agenda.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சர்க்கரை விநியோகத்தில் உள்ள குறைபாடுகளைத் தடுப்பது, கள்ள மார்க்கெட் எந்த அளவு நிலவி வருகிறது என்ற விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த விவாதத்தை இந்தச் சபையில் கொண்டு வர வேண்டுமென்று விரும்பியது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சில தினங்களுக்கு முன்பு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போது நம் உணவு அமைச்சர் அவர்கள் நம் ராஜ்யத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள சர்க்கரைக் கோட்டா சராசரி மாதம் ஒன்றுக்கு 11,000 டன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி 11,000 டன் வந்து அது எவ்வாறு விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் சபை முன் வைத்ததற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே கேள்விக்குப் பதில் அளிக்கும் போது 12,000 டன் அளவிற்கு மாதம் ஒன்றுக்கு கிடைத்தால் நம் தேவை ஓரளவு பூர்த்தியாகிவிடும் என்ற கருத்தையும் தெரிவித்தார்கள். ஒதுக்கப்பட்டிருக்கும் சர்க்கரை போதுமா? இன்னும் அதிகம் வேண்டுமா? அப்படியானால் எவ்வளவு என்ற விவரம் அரசாங்கத்திற்குத் தெளிவாகத் தெரிந்திருக்கிறது. பற்றுக்குறை அவ்வளவு அதிகம் இல்லை என்பதுதான் என் அபிப்பிராயம். இன்னும் 1,000 டன்தான் தேவைப்படும். அது பெறமுடியாத அளவிற்கு அதிகமில்லை. நம் ராஜ்யத்தில் சர்க்கரை உற்பத்தி செய்கிற அளவை எடுத்துக் கொண்டால் நாம் கேட்பது மிகக் குறைவு. ஆகவே நாம் கேட்பதை மத்திய அரசாங்கம் கொடுத்தாக வேண்டும். அதை வற்புறுத்த வேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். மத்திய அரசாங்கத்தை நாம் வற்புறுத்தி தேவைப்படுகிற 1,000 டன் சர்க்கரையையும் பெறுவதற்குள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய கோட்டா ஒவ்வொரு மாதமும் சரியாக வந்து சேருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். சில மாதங்களில் குறைவாக அல்லது இரண்டு தவணைகளில் வந்திருக்கிறது. அப்படி காலம் தவறி வருவதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒதுக்கப்படும் கோட்டா அந்தந்த மாதத்தில் முதலில் வந்து விடவேண்டும். எந்தமாதிரித் தருணத்தில் நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறார்கள் என்றால் தீபாவளி போன்ற முக்கிய பண்டிகைகள் வரும்போது கோட்டா ஒரேசமயத்தில் வராமல் இரண்டு மூன்று தடவைகளாகப் பிரிந்து வந்ததால் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதன் காரணமாகக் கள்ளமார்க்கெட் ஏற்படுகிறது. கோட்டா காலாகாலத்தில் ஒதுக்கப்பட்டு, ரிலீஸ் செய்யப்பட்டு பட்டுவாடா செய்யப்பட்டால் ஓரளவு நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும். அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தை வைத்துத்தான் சொல்கிறேன். அடுத்தபடியாக, மற்ற

24th January 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மாவட்டங்களிற்கு இடையே கோட்டா ஒதுக்கியிருப்பதில் ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? ஜனத்தொகை அடிப்படையில் ஒதுக்கப் படுகிறதா? அல்லது ஜனங்களின் பழக்க வழக்கங்களை நிர்ண யித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறதா என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவது உதவி யாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். சில மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், ராமநாதபுரம், சேலம், திருநெல்வேலி இம் மாதிரி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் கோட்டா ஜனத் தொகை அடிப்படையில் பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. நம் மாநிலத்தில் மிகப் பெரிய ஜில்லா சேலம், ஜனத்தொகையிலும், விஸ்தீர்ணத்திலும், அங்கு மாதம் ஒன்றுக்கு 700 டன்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ராமநாதபுரத்திற்கும் மாதம் ஒன்றுக்கு 500 டன்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நார்த் ஆற்காடு ஜில்லா வில் உள்ளவர்கள் சர்க்கரை உபயோகிப்பதில்லையா? அங்கும் 500 டன்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கப்பட்டிருப்ப தால் ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்கு கள்ள மார்க்கெட் பரவ அது காரணமாக அமைகிறது என்ற காரணத் தினால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரித்துக் கொடுக்கும்போது கோட்டாவை விஞ்ஞான முறையில், நல்ல அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும். ஒன்று ஜனத்தொகை அடிப்படையில் இருக்கவேண்டும், அல்லது அந்தந்த மாவட்டங்களுக்குச் சர்க்கரை தேவைப்படும் அளவில் தொழில்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு சர்க்கரை உபயோகப்படுத்துவதை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒதுக்கப்பட வேண்டும். அதிகமாகக் கொடுத்து வரும் ஜில்லாக்களில் குறைத்தாலும் சங்கடம் வரும். பற்றாக் குறை உள்ள இடத்திற்கு அதிகப்படுத்த வேண்டும் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். இதெல்லாம் கோட்டாவில் உள்ள கோளாறு. இதை நிவர்த்தி செய்தாலும் கண்ட்ரோலை அடியோடு எடுத்து விடலாமா என்றால் அதை அடியோடு எடுத்து விடலாம் என்று வற்புறுத்தத் தயாராயில்லை. ஏன் என்றால் ஒட்டு மொத்தத்தில் உற்பத்தி பெருகி யிருந்தபோதிலும்கூட பத்து வருடங்களுக்கு முன்னால் நம் தேசம் பூராவும் 11 லட்சம்தான் உற்பத்தியாகிறது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் 33 லட்சம் டன் உற்பத்தியாகிற அளவிற்குக் கரும்பு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. அப்படிப் போட்ட திட்டப்படி உற்பத்தியாகும் என்று நம்ப இடம் இருக்கிறது. இதில் 3 லட்சம் டன் அளவிற்கு மேல் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. ஏற்றுமதியை நாம் ஊக்குவிக்க வேண்டும், அதை ஆதரிக்க வேண்டும். நமக்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணியை ஓரளவிற்குச் சம்பாதித்துக் கொடுக்க உதவி அளிக்குமானால் அதை வரவேற்க வேண்டும். அதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். ஆகவே இங்கு உற்பத்தியாகும் சர்க்கரையை எல்லாம் நாமே உபயோகித்து ஜீர்ணம் செய்துவிட்டால் நம் தொழில்களுக்கு வேண்டிய அன்னியச் செலாவணி கிடைக்கக் கஷ்டம் ஏற்படும்.

ஆகவே இங்கு உற்பத்தியாவதில் ஒரு பகுதியை உலக மார்க்கெட்டில் தேவைப்படுவதால் அதற்கு ஒதுக்க ஆட்சேபம் இல்லை. ஆகவே இந்தக் கட்டுப்பாடு ஓரளவு இருக்கத்தான் வேண்டியிருக்கும். ஆனால் பொதுமக்களுக்குக் கஷ்டம் இன்றி எப்படிப் பங்கிடுவது என்பதில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். இதிலுள்ள கஷ்டம் எல்லாம் பற்றுக்குறையை விட கள்ளமார்க்கெட்டினால்தான் கஷ்டம் ஏற்படுகிறது என்பது என் அபிப்பிராயம். இரண்டரை ரூபாய் ஒரு கிலோவிற்குக் கொடுத்தாலும் சர்க்கரை கிடைக்கவில்லை என்றால் பற்றுக்குறை இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு டீலருக்கு அடுத்த கடையில் 2¼ ரூபாய் 2½ ரூபாய் கொடுத்தால் கிடைக்கிறது. கிராமப்புறங்களிலும், சிறிய நகரப்புறங்களிலும் உள்ள கஷ்டத்தைப் பார்க்க வேண்டும். பெரிய நகரங்களில் ஓரளவு பிரச்னை சமாளிக்கப்பட்டு வருகிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் கிராமப்புறங்களில், சிறிய நகர்ப்புறங்களில் பெரிய கஷ்டமாக இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் என்பது நான் சுற்றுப்பிரயாணம் செய்த சமயத்தில் எனக்குக் கிடைத்த தகவல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு டீலரின் பக்கத்து கடையில் 2½ ரூபாய் கொடுத்தால் கிடைக்கிறது. இதற்குக் காரணம், ஒன்று விதிகளில் உள்ள கோளாறு. இல்லை விநியோக முறையில் உள்ள கோளாறு. பெரிய ஹோட்டல்கள், மிட்டாய் செய்யும் கம்பனிகள் இவற்றிற்கு எவ்வளவு தேவை என்று பார்த்து பூர்ண கோட்டாவை அவர்களுக்குக் கொடுத்து விட வேண்டும் என்பது என் அபிப்பிராயம். அவர்கள் தான் முக்கியமாகக் கள்ளமார்க்கெட்டை உற்பத்தி செய்யக் கூடியவர்கள். அதிகாரிகளிடம் பேசியதை வைத்துச் சொல்கிறேன். பெரிய கன்பக்ஷனரீஸ், ஹோட்டல்காரர்கள் இவர்கள் சர்க்கரைக் கோட்டாவை பெர்மிட் மூலம் வாங்கி விட்டால் எவ்வளவு கோட்டா வைத்திருக்கிறாய், எவ்வளவு வியாபாரம் ஆகியிருக்கிறது என்று கணக்கு எடுக்க விற்பனை வரி அதிகாரிகள் புகுந்து விடுகிறார்கள் என்று சர்க்கார் கோட்டாவை குறைவாகப் பெற்றுக்கொண்டு கள்ள மார்க்கட்டில் வாங்க முயற்சிக்கிறார்கள். வரி செலுத்துவதை விட கள்ளமார்க்கெட்டில் சிறிது அதிகம் கொடுத்துப் பெறுவது அவர்களுக்கு லாபமாக இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டியிருக்கிறது. இது ஒரு முக்கியமான காரணம். இவர்கள் தேவை என்ன என்று பார்த்து பூர்ணமாகக் கோட்டா கொடுத்துவிட்டால் கள்ளமார்க்கெட்டில் வாங்க அவசியமிருக்காது, கள்ளமார்க்கட்காரர்கள், விற்பதற்கும் இடம் ஏற்படாது. இன்னொன்று என்னவென்றால் பெரும்பாலும் டீலர்களுக்குச் சர்க்கரைக் கோட்டா கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஒரு நாளைக்கு 50 கிலோ வரை விற்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் எப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் முதலாவது வருகிறவர்களுக்கு கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். சர்க்கரை எல்லாம் விற்றுத் தீர்ந்த பின்னால்தான் ரெவின்யூ

இன்ஸ்பெக்டர் பரிசோதனைக்கு வருகிறார். ஒரு டீலர் 50 கிலோ விற்கலாம் என்றால் விற்பனை செய்வதற்கு முந்தின நாள் இராத்திரியே சுப்பன், கந்தன் என்று 40 பேர்களின் பேரில் பில் போட்டு விட்டு அடுத்தநாள் காலையில் மரியாதைக்காக 10 கிலோவை வெளியில் விற்பனை செய்கிறார். காலை ½ மணி நேரத்திற்குள்ளாக சர்க்கரை தீர்ந்து விட்டது என்று சொல்கிறார்கள். இதை நான் நேரிடையாகப் பார்த்திருக்கிறேன். ஆகவே டீலர்களைக் கண்காணிப்பதற்கு இப்போதுள்ள ஏற்பாடுகள் போதாது. இது நல்ல முறையில் வினியோகிக்க வேண்டும் என்றால் கார்டு கொடுப்பதின் மூலமாக, பர்மிட் கொடுப்பதின் மூலமாக டீலர்கள் ஏமாற்றாதவாறு நாம் கண்காணிக்க முடியும். வினியோக முறையில் டீலர்களைக் கண்காணிப்பதற்கு இப்போதுள்ள அதிகாரிகளும் போதாது. அதிகாரிகள் தூய எண்ணத்தோடு கண்காணித்தாலும் கூட இப்போது இருக்கின்ற முறையில் கள்ள மார்க்கெட் நடப்பதைக் கண்டு பிடிக்க முடியாத நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான் அதிகாரிகளை இன்னும் அதிகமாக நியமித்து நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். இப்பொழுது உள்ள அரசாங்க உத்தரவின்படி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பள்ளி ஆசிரியர்கள், அதிகாரிகள் முதலியவர்களுக் கெல்லாம் ஓரளவுக்கு கஷ்டம் இல்லாமல் சர்க்கரை கிடைக்கிறது. ஆனால் சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. உதாரணமாக கனம் சசிவர்ண தேவர் அவர்களுக்குச் சர்க்கரை கிடைப்பதற்காகக் கலெக்டரை கேட்ட போது அவ்வாறு சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதற்கான உத்தரவு இல்லை, பள்ளி ஆசிரியர்களுக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுப்பதற்குத்தான் உத்தரவு இருப்பதாகச் சொல்லி விட்டதாகச் சொன்னார்கள். இதைப்பற்றி அவர்கள் இங்கேயே பேச வேண்டும் என்று சொன்னார்கள். அவசரமாக ஹைகோர்ட்டுக்குப் போக வேண்டியிருந்ததால் இதைச் சபையில் சொல்லவேண்டும் என்று கூட என்னிடம் கேட்டுக் கொண்டார். ஒரு எம்.எல்.ஏ.-க்கு கூட சர்க்கரை கிடைப்பதற்கு இந்த நிலைமை இருக்கிறது. சர்க்கரை வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு பர்மிட் கொடுத்துவிடலாம். சர்க்கரையே உபயோகித்துக் கொண்டிருக்கும் குடும்பங்கள் அதிகமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதைக் கணக்கிட்டுப் பார்த்துத் தேவைப்படுகிறவர்களுக்கு மட்டும் கார்டு அல்லது பர்மிட் கொடுத்துவிட்டு மீதி ஒரு பாகத்தை டீலர்களுக்குக் கொடுத்துவிடலாம். அவ்விதம் வரையறுத்துக் கொடுத்துவிட்டால் கள்ள மார்க்கெட் ஏற்படுவதற்கு வழி இருக்காது. கள்ள மார்க்கெட் எங்கே உற்பத்தியாகிறது என்பதை நாம் சரியாகக் கண்காணிக்க வேண்டும். அதுவேதான் கார்டு முறையை அமுல் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் பெரிய கஷ்டங்கள் ஒன்றும் வந்து விடாது. கிராமப்புறங்களில் கூட அங்குள்ள அதிகாரிகள் இடத்திலோ, தாசில்தாரிடத்திலோ சர்க்கரை உபயோகிப்பவர்கள் கார்டுகளை வாங்கிக் கொள்ளலாம். இந்த முறையைக் கொண்டு வந்து விட்டால் டீலர்களை ஏமாற்ற முடியாது. கார்டுகள் வழங்கு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th January 1964

வது, பர்மிட் வழங்குவது என்பதெல்லாம் பெரிய கஷ்டம் ஒன்றும் இல்லை. பெரிய நகரங்களிலும் இதைச் சுலபமாகக் கணக்கெடுக்க லாம். சர்க்கரை பிரச்னை நீண்டகாலப் பிரச்னையாகவே இருக் கும். தாற்காலிகமாக இருக்கும் என்று முன்பு நினைத்தோம். உலகத்தில் இருக்கின்ற சூழ்நிலையை எடுத்துக்கொண்டு பார்த்தால் —நம் நாட்டில் இருக்கின்ற இறக்குமதி ஏற்றுமதி நிலைமை இவை களை யெல்லாம் எடுத்துக்கொண்டு பார்த்தால் சர்க்கரை நெருக்கடி இன்னும் தொடர்ந்து இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந் தாலும் சரி, நான்காவது திட்ட காலத்திலும் இந்தப் பிரச்னையை தூரதிருஷ்டியோடு பார்த்தால் நிரந்தரமாக இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு வழி இருக்க வேண்டும். ஆகவேதான் கார்டு வழங்கும் முறை பர்மிட் கொடுக் கின்ற முறை இவைகளை யெல்லாம் ஓரளவுக்குச் சீர் படுத்திக் கொடுத்து விட்டால் ஓரளவுக்கு இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். திருவிழாக் காலங்கள், பண்டிகைகள், திருமணங்கள், மேலும் குடும்பத்தில் நடைபெறக்கூடிய விசேஷங்கள் இவை களுக்கும் தேவைப்படுகின்ற அளவுக்குப் பர்மிட் கொடுத்து விட் டால் ஒருவாறு இப் பிரச்னையைத் தீர்க்க முடியும். ஆகவே நான் கூறின யோசனைகளை யெல்லாம் பரிசீலனை செய்து அதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், சர்க்கரை வினி யோகத்தை கவனிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சர்க்கரை வினியோகத்தைப்பற்றி குறிப்பிட்டு அதற்கு என்ன விதி முறைகளை ஏற்படுத்துவது என்பதைப்பற்றி விளக்கினார்கள். இன்றைய நிலையில் நம் நாட்டில் இருக்கின்ற கரும்பு ஆலைகள் எல் லாம் சர்க்கரையை உற்பத்தி செய்ய முடியாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய தேவையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது நம்முடைய ஆலைகள் உற்பத்தி செய்கின்ற சர்க் கரை போதாத நிலையில்தான் இருக்கிறது. இன்னும் பல புதிய ஆலைகள், சேலம் மாவட்டத்தில் ஒன்று, விழுப்புரத்தின் பக்கத் தில் ஒன்று, கோவை ஜில்லாவில் லிமிடெட் கன்ஸ்சர்னில் ஒன்று வீதம் சில புதிய ஆலைகள் வரவிருக்கின்றன. இந்த முறையில் பார்த்தால் எல்லா ஆலைகளும் உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் நம் முடைய தேவைக்குத் தகுந்தபடி சர்க்கரை கிடைக்கும் என்று எண்ணலாம், இந்தப் பிரச்னையும் வராது என்று நம்பலாம். இந்தப் பிரச்னை நம் சென்னை ராஜ்யத்திற்கு மட்டும் என்று நினைக்க வேண் டாம். சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்கின்ற பீகார், மகா ராஷ்டிரம் போன்ற இடங்களிலும் இந்தத் தட்டுப்பாடு இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஓரளவுக்கு நமக்குப் போதிய சர்க் கரை ஒழுங்காகக் கொடுக்கிறார்கள். நகரத்தைப் பொறுத்த வரையில் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் வினியோகம் நடந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் மட்டும்தான் சில சிரமங்கள் இருக்கின்றன. இப்போது கிராமங்களிலும் நல்ல

[கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]
24th January 1964]

முறையில் வினியோகம் செய்வதற்காக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. சர்க்கார் எடுத்திருக்கின்ற சில நடவடிக்கைகளைப்பற்றி நான் தெரிவிக்கின்றேன். நமது ராஜ்யத்தில் 117 ஹோல் சேல் டீலர்கள் இருக்கிருர்கள். 10,000 சில்லரை வியாபாரிகளும் இருக்கிருர்கள். (திரு. மீ. கலியாணசுந்தரம்: எத்தனை கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?) அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லே. ஆனல் கூட்டுறவு சொசைட்டிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு எல்லாம் கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றனவோ, அவைகள் வினியோகத்தை நடத்துவதற்குத் தயாராக இருந்தால் அவைகளுக்கும் கொடுக்கப்படுகின்றன. இவை திருப்திகரமாகவும் இருந்து வருவதாக எனக்கு வந்திருக்கின்ற தகவல்களிலிருந்து சொல்ல முடியும். இப்போது சில்லரை வியாபாரிகளுக்கு 50 குவின்டால் வரை கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. என்னுடைய நம்பிக்கை இதை நல்ல முறையில் நடத்த முடியும் என்பதுதான். பல துறைகளிலும் இதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டிருக்கிருேம்.

கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது சொன்னர்கள், நம்முடைய உற்பத்தியையும் தேவையையும் பார்த்தால் வித்தியாசம் குறைவாகத்தான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நமக்குத் தேவை 12,500 டன். ஆனல் நமக்கு 11,000 டன்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த வித்தியாசத்தைப் பார்த்தால் குறைவாகத்தான் இருக்கிறது. இதில் தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷங்கள் வரும்போது நமக்குச் சர்க்கரை அதிகமாகத் தேவைப்படுகிறது. ஜில்லா வாரியாகக் கொடுக்கும்போது வெறும் ஜனத்தொகையை வைத்துக் கொண்டு பார்த்தால் சில ஜில்லாக்களுக்குக் குறைவாகவும், சில ஜில்லாக்களுக்குக் கூடுதலாகவும் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஆனல் எல்லோரும் சர்க்கரை உபயோகிக்கிருர்களா என்று பார்க்க வேண்டும். கோவை, மதுரை போன்ற ஜில்லாக்களுக்கு 1,000 டன் வீதம் கொடுத்துக்கொண்டிருக்கிருேம். ஜனத்தொகை விகிதாசாரத்தை வைத்துப் பார்த்தால் குறைவாக இருக்கலாம். ஏனென்ருல் நகரங்களில்கூட பலர் வெல்லத்தை உபயோகித்துக் கொண்டிருக்கிருர்கள். அமராவதியில் இருக்கின்ற பாக்டரியை எடுத்துக் கொண்டால் எந்த அளவுக்கு அங்கே ஆலேயில் ஆட்டுவதற்குக் கரும்பு கிடைக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கரும்பு கிடைக்கவில்லே. அதற்கு என்ன காரணம்? இந்த வெல்லம், சர்க்கரை இதிலெல்லாம் அதிக விலே கிடைக்கிறது என்ற முறை ஃபாக்டரிக்குக்கூட கொடுக்காமல் அவர்களே ஆட்டி விற்றுவிடுகிருர்கள். அந்த முறையிலும் வருகிற சர்க்கரை குறைவாகப் போகிறது. அப்படி இருந்தாலும் வெல்லம், சர்க்கரை வாங்குகிறவர்கள் அதிகமாக இருக்கிருர்கள் என்று தெரிய வருகிறது.

சமீபத்திலே கலெக்டர்கள் மாநாடு நடந்தது. அதிலேகூட இதைப்பற்றி தாராளமாக அவர்களுடைய அபிப்பிராயங்களைச்

அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள். எங்களுக்கு இன்னும் அதிக அளவுக்கு சர்க்கரை வேண்டுமென்று சொன்னார்கள் அதை எப்படிக் கொடுப்பது என்பதில் ஆங்காங்கு இருக்கக்கூடிய கலெக்டர்கள் உத்தேசம் எப்படியோ அப்படியே அவர்களுடைய உத்தேசத்திற்கு விட்டு விடவேண்டுமென்று விட்டு விட்டோம். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் கோவை ஜில்லாவிலே கார்டு ஸிஸ்டம் வைத்தார்கள். அந்த முறை வைத்தால் நன்றாக இருக்குமா என்று பார்த்தோம். அங்கே நானும் சென்றிருந்தேன். முதலமைச்சரும் அங்கே போயிருந்தார்கள். அப்போது கார்டு ஸிஸ்டத்தை எடுத்துவிட வேண்டும் என்று எங்களிடம் வந்து சொன்னார்கள். இதிலே சரியாகக் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதிலும் உண்மை இருக்கிறது. கார்டு போட்டுக் கொடுத்தாகிவிடுகிறது. ஆனால் அன்றைய தினம் எதிர்பார்த்த அளவு சர்க்கரை வராமல் போய்விடலாம், அன்று பற்றாக்குறை இருக்கலாம். கார்டை எடுத்துக்கொண்டு போய் சர்க்கரை கேட்டால் இல்லை என்று சொல்லும்போது கார்டு கொடுத்ததன் அர்த்தம் என்ன என்று கேட்கக்கூடிய நிலை இருக்கிறது. கோவையாவது பெரிய நகரம். அதை விட்டு திருப்பூர், பொள்ளாச்சி போன்ற இடங்களுக்குப் போனபோது பொது மக்களும் கார்டு ஸிஸ்டம் சரியாக நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி நாங்கள் கலெக்டரிடம் சொன்னோம். தேவையில்லை என்று கலெக்டரும் எடுத்துவிட்டார். வருகிறதை வைத்து முடிந்த வரையில் எல்லோருக்கும் கொடுக்கிற முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதிலே ப்ளாக் மார்க்கெட் இருக்கிறது என்று சொன்னார்கள். அது அங்கத்தினர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவர்களும் ஒத்துக்கொண்டார்கள், இப்போது சர்க்காருடைய சுறுசுறுப்பு காரணமாக, கவனிப்பு அதிகமாக இருப்பதன் காரணமாக ப்ளாக் மார்க்கெட் அவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று சொல்லுவதற்கில்லை என்று அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகிற நிலைமை ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அதைப்பற்றி நான்கூட இந்தக் கூட்டம் ஆரம்பித்ததற்கு அடுத்த நாள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். ஆங்காங்கு உத்தியோகஸ்தர்கள் தனியாகப் போட்டு பார்க்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். கணக்கு வைக்கும்போதுகூட அன்றாட கணக்கை போர்டில் எழுதவேண்டும் என்று வைத்திருக்கிறோம். ஒரு கடையில் சர்க்கரை விற்கின்றார்கள். வாங்குகிறவர்கள் சர்க்கரையை வாங்கிக்கொண்டு போகிறார்கள். கணக்கு தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லையே என்ற எண்ணம் ஏற்படலாம். அதற்காகத்தான் யார் சென்றாலும் எந்த நேரத்தில் சென்றாலும் அன்றாடம் கணக்கு எழுதி வைக்க வேண்டும், போர்டில் எழுதித் தொங்க விடவேண்டும், ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது, விற்பனை எவ்வளவு என்று எழுதித் தொங்க விடவேண்டும் என்று வைத்திருக்கிறோம். இவ்வளவு இருந்தும் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஆங்காங்கு இருக்கக்கூடிய நமது சட்ட சபை அங்கத்தினர்கள், பொதுவாக

அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறவர்கள் எல்லோரும் ஒத்துழைத்து வாங்குகிறவர்களுக்கு அந்த எண்ணம் வேண்டும். வாங்குகிறவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால் எந்தக் குறையும் இருக்காது. . . . (திரு. மீ. கலியாணசுந்தரம்: வாங்குகிறவர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டுமென்ருல் எந்த முறையில் அவர்களுடைய ஒத்துழைப்பை எதிர்ப்பார்க்கிறீர்கள்?) வாங்குகிற போது வேண்டிய அளவு மட்டும் வாங்க வேண்டும். இப்போது அதிகமாக வேண்டுமென்று நினைக்கிருர்கள். இப்போதேகூட சொன்னுர்கள். ஏதோ வரிசையாக வாங்கிக்கொண்டு போகிருர்கள், வெளியே கொண்டு போய் தனியாக விற்பனை செய்கிருர்கள் என்று சொன்னுர்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர் ஆங்காங்கு இருந்து செய்யவேண்டும் என்று சொல்லக் கூடுமானுல் அது எந்த நிலைமைக்குப் போகும் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. நான் ஒன்று உறுதி கொடுக்க முடியும். கலெக்டர்களும் இதற்கு நல்ல பல முறைகளை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். கலெக்டர்கள் மாநாட்டுக்குப் பிறகு விளக்கமாகத் தெரிந்துகொண்டு சென்ருர்கள். ஜில்லாவாரியாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் முக்கியமாகச் சர்க்கரை, கிராமத்திற்குப் போய்ச்சேரவேண்டும். அந்த நிலை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் கூட்டுறவு ஸ்டோர் மூலமாக எவ்வளவு சர்க்கரை தேவை என்று கொடுக்கும் நிலையில் யோசனை செய்து கொண்டிருக்கிருர்கள் என்று சொல்ல முடியும். இந்த ஒரு காரண காரியங்களைப் பார்க்கும்போது நிச்சயமாக, ஒழுங்காகக் கிடைக்கும் வகையில்தான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருேம். தட்டுப்பாடு ஏற்படும்போது பக்கத்திலுள்ள ஆந்திரா, மைசூரிலிருந்து இங்கு வருகிறது. மேலும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிருேம். கேட்டுப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிருேம். மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிருேம். அதிகமாக வேண்டுமென்று சொல்லியிருக்கிருேம். விளைச்சல் குறைவாவதன் காரணமாகவும் எதிர்பார்த்த அளவுகூட கிடைப்பதில்லை. மழை தவறிய காரணத்தினுல், தண்ணீர் இல்லாத காரணத்தினுல் அல்லது மழை அதிகம் பெய்த காரணத்தினுல் ஏக்கருக்கு இவ்வளவு வரும் என்று எண்ணுவதுகூடக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இதையெல்லாம் எண்ணத்தில் வைத்துத்தான் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிருேம் என்று சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

VII—ANNOUNCEMENT-

Bills Passed by the Council.

MR. DEPUTY SPEAKER: I have to announce to the House that I have received messages from the Legislative Council that the following Bills have been passed without any amendment:

1. The Madras City Muncipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1964 (L.A. Bill No.3 of 1964.)

[Mr. Deputy Speaker] [24th January 1964

2. The Motor Vehicles (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 1 of 1964).

I have also to announce to the House that I have received messages from the Legislative Council that the following Bills have been passed without any recommendation :

1. The Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964).

2. The Madras (Added Territories) Extension of Laws Bill, 1964 (L.A. Bill No. 29 of 1963).

House will now adjourn and meet again at 11 a.m. on Thursday, the 27th February 1964.

12-58 p.m. The House then adjourned.

VIII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

'Nil'.

B. Reports, Notifications and other papers.

* 33. The Madras Appropriation Bill, 1964 (L.A. Bill No. 2 of 1964).

34. Notification issued with G.O. Ms. No. 1812, Home, dated 30th May 1963 regarding the rules known as "the Management of Special Home (Care Home) at Kancheepuram Rules" issued under the Madras Prevention of Begging Act 1945 (Madras Act XIII of 1945).

35. List of unstarred questions numbers from 1 to 22.

* Circulated to Members on 22nd January 1964.

Appendix I.

[*Vide* Answer to Starred Question No. 86 on page 12].

S.S.L.C. (X Standard) Public Examination—March 1963-Number of candidates appeared and declared eligible (District wise)·

District.	*Number appeared.*		*Number declared eligible.*	
	Boys.	*Girls.*	*Boys.*	*Girls.*
North Arcot	4,913	1,124	1,862	509
Madras	6,468	3,299	2,973	1,892
Chingleput	3,394	893	1,167	416
South Arcot	4,425	715	1,556	338
Thanjavur	6,409	1,759	2,896	954
Tiruchirappalli	6,206	1,640	2,158	896
Madurai	5,705	1,954	2,711	1,029
Ramanathapuram	5,351	1,444	3,020	849
Tirunelveli	5,724	1,906	3,203	1,135
Kanyakumari	4,252	2,729	1,503	823
Salem	4,634	1,101	2,629	632
Coimbatore	5,444	2,004	3,067	1,131
The Nilgiris	839	270	340	123
Pandicherry	174	51	41	41

Appendix II.

[*Vide* Answer to Starred Question No. 88 on page 15].

A.—(*a*) The following Slum Improvement Projects, Land Acquisition and Development Schemes and Housing Schemes have been taken up by the State Housing Board, through its Tiruchirappalli Housing Unit in Tiruchirappalli :—

I. Slum Clearance/Improvement Scheme.

	Area.	
	AC.	SQ.FT.
(i) Kalmandai Slum Improvement Project ..	8	2,216
(ii) Peechankulam Slum Improvement Projects	5	35

The total estimated cost of the two schemes is Rs. 22·09 lakhs (Project under execution).

II. Land Acquisition and Development Scheme.

It is proposed to create a Neighbourhood near Tiruchirappalli town, with a total extent of about 500 acres. The first phase of the Neighbourhood will comprise 250 acres, and the location of this part of the Neighbourhood is under consideration. The second phase will comprise an equal extent, which will be taken up with reference to the availability of funds, etc.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[24th January 1964

III. Rental Housing Scheme for low-paid employees of State Government.

(i) Construction of about 420 number of storeyed rental flats/apartments in Sengulam village (ex.C. L. C. Compound) at an estimated cost of Rs. 32,90,000 (Tenders called)

(ii) Construction of 54 numbers of storeyed, rental apartments/flats in Varaganeri village (next to Public Works Department Ex-Engineer's Quarters) at an estimated cost of Rs. 4,66,000 (Tenders called).

(iii) Construction of 588 number of storeyed rental flats/apartments in Khajamalai at an estimated cost of Rs. 52,00,000 (Tenders called).

IV. Low Income Group Housing Scheme.

The following projects have been taken up for construction under the Scheme :—

	AC.	SQ. FT.
(i) Salai Road Low Income Group Housing Scheme	7	34,189
(ii) East Bouleward Road Low Income Group Housing Scheme	56	13,996
